# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# ANNUAL REPORT
# 2016



## සී/ස හලාවත වැවිලි සමාගම
## சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்
## CHILAW PLANTATIONS LTD

රාජ්‍ය ව්‍යවසාය සංවර්ධන අමාත්‍යාංශය
தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு
Ministry of Public Enterprise Development

# உள்ளடக்கம்


| | பக்க இல. |
|---|---|
| தூரநோக்கு மற்றும் பணிக்கூற்று | 02 |
| நிதிசார் முக்கிய தகவல்கள் | 03 |
| தலைவரின் மீளாய்வு | 04 - 05 |
| பணிப்பாளர் சபை | 06 |
| உயர் நிர்வாகக் குழு | 07 |
| முகாமைத்துவ மீளாய்வு | 08 - 20 |
| நிதி மீளாய்வு | 21 - 24 |
| நிறுவனத்தின் ஆளுமை | 25 |
| இடர் முகாமைத்துவம் | 26 - 27 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | 28 |
| **நிதி அறிக்கை** | |
| பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை | 29 - 31 |
| பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று. | 32 |
| கணக்காய்வாளர் தலைமையகத்தின் அறிக்கை | 33 - 35 |
| முற்றும் அடங்கிய வருமானக் கூற்று | 36 |
| நிதி நிலமைக் கூற்று | 37 |
| உரிமையாண்மை மாற்றல் கூற்று | 38 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 39 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 40 - 66 |
| பத்து ஆண்டுச் சுருக்கம் | 67 |
| வருடாந்த பொதுக்கூட்டத்துக்கான அறிவித்தல் | 68 |
| பெறுகை (Proxy) படிவம் | 69 |
| நிறுவனத்தின் தகவல்கள் | Inner back cover |

# தூரநோக்கு

இலங்கையில் பயிர்ச்செய்கையை அடிப்படையாகக்கொண்ட தென்னை விஞ்ஞானபாங்கிலும் இலாபகரமாகவும் முகாமைத்துவம் செய்யப்படல்.

# பணிக்கூற்று

இலங்கையை, "ஆசியாவின் அதிசயமாக" அடையச்செய்வதற்கான எங்கள் பயணத்தின் பங்குதாரர்களாவதற்கு, ஊழியர்கள், பொதுமக்கள், அரசாங்கம், தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினர் ஆகியோரை உள்ளடக்குகின்ற எல்லா பங்குடைமையாளர்களையும் பயனடையச் செய்வதற்கு உயர் தகுதியுள்ள, அதிகாரமளிக்கப்பட்டுள்ள, ஊக்குவிக்கப்பட்டுள்ள மற்றும் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணியாட்தொகுதியினரால் தென்னை பயிர்ச்செய்கைச் சொத்துக்கள் மற்றும் வளங்களின் விஞ்ஞான மற்றும் வர்த்தக அபிவிருத்தியினூடாக பெறத்தகு உயர் இலாபம் மற்றும் சாத்தியமான விளைச்சலை அடைதல்

# நிதிச் சுருக்கம்

| | 2016 | 2015 | பேதங்கள் % |
|---|---|---|---|
| தென்னை உற்பத்தி "தேங்காய்கள்" "000 | 16,522 | 12,517 | 32 |
| **சுருக்கப் பெருபேறுகள்** | **Rs' 000** | **Rs' 000** | **%** |
| வருமானம் | 383,090 | 399,366 | (4.08) |
| மொத்த இலாபம் | 148,707 | 148,748 | (0.03) |
| வரி வட்டிக்கு முன் இலாபம் | 117,604 | 119,909 | (1.92) |
| வரிக்கு முன் இலாபம் | 84,817 | 88,293 | (3.94) |
| வரிக்கு பின் இலாபம் | 70,764 | 81,444 | (13.11) |
| நிறுத்தி வைத்த இலாபம் | 633,886 | 598,277 | 5.95 |
| தேக்கு Timber மர ஒதுக்கங்கள் | 61,841 | 56,686 | 9.09 |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | 30,000 | - |
| மொத்த பங்கிலாபம் | 426,650 | 426,650 | - |
| **நிதி நிலமை** | | | |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 966,343 | 886,295 | 9.03 |
| முதிர்ந்த / முதிர்வுறாத பயிர்ச்செய்கைகள் | 728,533 | 653,071 | 11.55 |
| நடைமுறை சொத்துக்கள் | 312,333 | 256,882 | 21.59 |
| இறுப்புக்கள் | 104,999 | 47,613 | 120.53 |
| குறுங்கால முதலீடுகள் (நிலையான வைப்புக்கள்) | 140,868 | 152,646 | (7.72) |
| மொத்த சொத்துக்கள் | 1,278,676 | 1,143,177 | 11.85 |
| நடைமுறை பொறுப்புக்ள் | 134,591 | 54,740 | 145.87 |
| நடைமுறையல்லாத பொறுப்பு | 248,358 | 233,474 | 6.38 |
| கூறப்பட்ட மூலதனம் | 200,000 | 200,000 | - |
| பங்காளர்களின் நிதிகள் | 895,727 | 854,963 | 4.77 |
| **நிதிசார் குறிகாட்டிகள்** | | | |
| நடைமுறை வீதம் (தடவைகள்) | 2.32 | 4.69 | (50.55) |
| விரைவு விகிதம் (தடவைகள்) | 1.54 | 3.82 | (59.70) |
| மொத்த இலாப வீதம் | 38.82 | 37.25 | 1.57 |
| பங்கிற்கான வருவாய் | 3.48 | 3.93 | (11.45) |
| சராசரி உரிமையாண்மை மீதான வருமானம் (ROE)-% | 8.08 | 10.19 | (2.10) |
| ஊழியத்திலமர்த்தப்பட்டுள்ள மூலதனம் மீதான வருமானம் (ROCE) -% | 10.28 | 11.02 | (0.74) |
| நடைமுறை பொறுப்புக்களுக்கான மொத்த சொத்துக்கள் | 0.11 | 0.05 | 119.82 |
| பங்காளர்களின் நிதி வீதம் | 70.05 | 74.79 | (4.74) |
| வட்டி உள்ளடங்கள் (தடவைகள்) | 3.59 | 3.79 | (5.43) |

# தலைவரின் மீளாய்வு

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை பணிப்பாளர் சபையினர் சார்பாக சமர்ப்பிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் 1992 முதல் 16 வருடங்களாக தனியார் முகாமைத்துவத்தின் கீழ் காணப்பட்டு பின்னர் 2008 ஆம் ஆண்டில் முகாமைத்துவம் மீண்டும் அரசமயமாக்கப்பட்டது. சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் முகாமைத்துவம் அரசிற்கு சொந்தமாக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் பின் அனைத்து ஊழியர்களின் அர்ப்பணிப்புகள் மூலம் நிகழ்காலத்தில் நிலையான அபிவிருத்தியை அடைந்துகொண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்துகின்றேன்.

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் 14,161 ஏக்கர் பயிர்ச்செய்கை பரப்பை கொண்டுள்ளதோடு அதில் அண்ணளவாக 9,450 ஏக்கர் நிலப்பரப்பில் அதாவது மொத்த நிலப்பரப்பில் சுமாராக 67% தென்னை பயிர்ச்செய்கையை உள்ளடக்கியதோடு அத்தென்னை பயிர்ச்செய்கை மூலம் 27% தென்னை கீழ்ப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இது புத்தளம், குருணாகலை, மற்றும் கம்பஹா மாவட்டங்களில் 85 தோட்ட அலகுகளாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 85 தோட்ட அலகுகளும் 06 பிரதான தோட்டங்களின் கீழ் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் முழு மொத்த தென்னை மரங்களின் எண்ணிக்கையில் அதிக எண்ணிக்கையான மரங்கள் 50 வருடங்களுக்கு கூடுதலாக இருப்பதனால் எதிர்காலத்தில் இதனால் ஏற்படக்கூடிய இடர்களை இணங்கண்டு அதற்கு தீர்வாக இற்றைக்கு 2,535 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய இளந்தென்னங் கன்றுகளை பயிர்செய்துள்ளோம்.

### பயிர் பல்வகைமைபடுத்தல் மற்றும் கால்நடை செயற்திட்டங்கள்

நிலையான அபிவிருத்தியை நோக்கிய சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பயணத்தில் நிலங்களை உச்ச அனுகூலங்களை பெற்றுக்கொள்ள நாம் முயற்சிப்பதோடு, அதில் பிரதிபலனாக சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தில் இடைப்பயிர்ச்செய்கைக்காக ஏக்கர் 2,260 இல் மரமுந்திரிகை, றம்புட்டான், மிளகு, கருவா, ட்ரெகன் பழம், பதியமுறையிலான மாம்பழம் மற்றும் அன்னாசி என வெவ்வேறு தோட்டங்களில் வெற்றிகரமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அன்னாசி, மாம்பழம், கருவா, ட்ரெகன் பழம் மற்றும் மிளகு பயிர்ச்செய்கைகள் இன்னும் அதிகளவில் முதிர்வுறாத நிலையில் காணப்பட்டாலும் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் இடைப்பயிர்ச்செய்கை மூலம் ரூபா. 23 மில்லியன்கள் அளவில் நிறுவனம் இலாபமீட்டியுள்ளது.

தெற்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய தென்னந்தோட்டமான பளுகஸ்வெவ தோட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள எருமைமாடு வளர்ப்பு செயற்திட்டம் மூலம் தயிர் மற்றும் யோகட் உற்பத்தி மிகவும் சுகாதாரமான முறையில் உற்பத்தி செய்து 2016 ஆம் ஆண்டில் 37,372 லீட்டர்கள் எருமை மாட்டு பால் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு யோகட் மற்றும் தயிர் உற்பத்தியினால் ரூபா. 7.06 மில்லியன் இலாபத்தை நிறுவனம் ஈட்டியுள்ளது. அத்தோடு பிங்கிரியவில் உள்ள கின்னியம தோட்டத்தில் செம்மறியாட்டு வளர்ப்பு கருத்திட்டத்திற்கு மேலதிகமாக 2016 ஆம் ஆண்டில் மாதம்பையில் உள்ள ஹீம்மெலியாகார தோட்டத்திலும் புதிதாக செம்மறியாட்டு வளர்ப்பு திட்டம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

### பெருமதிசேர்க்கப்பட்ட உற்பத்திகள்

அரச நிறுவனம் ஒன்றாக வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் ஒரே உற்பத்தியின் மீது சார்ந்திருக்காமல் வெவ்வேறு பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை சந்தையில் சேர்ப்பதற்கு முடியுமாக இருந்துள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அவற்றின் சில உற்பத்திகளாக, பளுகஸ்வெவ தோட்டத்தில் மேற்கொள்ளப்படும் அதி உயர் தரத்திலான கொப்பரா உற்பத்தி, போத்தலில் அடைக்கப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெய், கரமகரந்த சேர்க்கை மூலம் மரபணு ரீதியாக உற்பத்தி செய்யப்படும் TSR விதைத்தேங்காய் உற்பத்தி என்பவற்றை குறிப்பிடலாம். அதே போல தம்பன்னி தோட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பதனிடப்பட்ட மரமுந்திரிகை நிலையத்தின் ஊடாக "தம்பன்னி மரமுந்திரிகை" எனும் பெயரில் மரமுந்திரிகை சந்தையில் நிலையான பெயரையும் மரமுந்திரிகை மற்றும் தேங்காய் எண்ணெய் விற்பனைக்கான விற்பனை பொறிமுறையை முன்னேற்றிக்கொள்ள முடிந்துள்ளது.

அதேபோல பளுகஸ்வெவ தோட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டு இற்றைக்கு பல வருடங்களுக்கு முன் மேற்கொள்ளப்பட்டு வந்து கைவிடப்பட்ட தும்பு உற்பத்தியை மீள ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளபட்டு வருகின்றன.

### ஆண்டுக்குள் நிறுவனம் அடைந்து கொண்டுள்ள முன்னேற்றங்கள்

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் சந்தர்ப்பவசமான முகாமைத்துவத்தினால் செயற்படுத்தப்பட்ட வழிமுறைகள் மூலம் மற்றும் காணப்பட்ட சாதகமான காலநிலை மூலம் 05 வருடங்களுக்கு பின்னர் நிறுவனம் அதி உயர் தென்னை விளைச்சலான 16.5 மில்லியன்கள் தேங்காய் விளைச்சலை 2016 ஆம் ஆண்டில் அடைந்துகொள்ள முடிந்ததோடு இது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 32% முன்னேற்றத்தை காட்டுகின்றது.

2016 ஆம் ஆண்டில் நிறுவனம் ரூபா. 70.7 மில்லியன்கள் வரிக்கு பின் இலாபத்தை அடைந்து கொண்டதோடு 2015 ஆம் ஆண்டு ஈட்டிக்கொள்ளப்பட்ட ரூபா. 81.4 மில்லியன் வரிக்கு பின் இலாபத்துடன் ஒப்பீடு செய்தால் இது 13% குறைவாகும். இவ் இலாபக் குறைவுக்கு 2016 ஆம் ஆண்டின் தேங்காய் ஒன்றுக்கான விற்பனை விலை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 17% விலைக்குறைவு காரணமாகி உள்ளது.

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் ஒரு அரச நிறுவனமாக அதன் உரித்தாளரான பொதுத்திறைசேரிக்கு 2015 ஆம் ஆண்டில் ரூபா. 30 மில்லியன்களை உள்ளடக்கியதாக 1992 முதல் 2015 வரை இதுவரையில் மொத்தமாக ரூபா. 426 மில்லியன்களை பங்கு இலாபங்களை இதுவரையில் செலுத்தியுள்ளது. அத்தோடு ஆண்டுக்கான குத்தகை வாடகையாக ரூபா. 350 மில்லியன்களை இது வரை செலுத்தியுள்ளது.

### தோட்டங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதோடு விவசாய நடவடிக்கைகள்

தோட்டங்களில் விவசாய நடவடிக்கைகளின் இயங்குதிறனை அதிகரித்துக்கொள்வதற்காக தோட்டங்களுக்கு போதியளவு விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கை 2015 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டு அதன் இரண்டாம் கட்டமாக 2015 ஆம் ஆண்டில் மட்டும் ரூபா. 7.6 மில்லியன்களுக்கு மூலதனச்செலவின் கீழ் விவசாய உபகரணங்கள் மற்றும் ட்ராக்டர்கள் கொள்வனவு செய்வதற்கு சிலவு செய்யப்பட்டது.

ஊழியர்களில் செயல்திறனை மேலெழுப்பிக்கொள்வதற்கான வழிமுறையாக தோட்டத்தொழிலாளர்களின் வீடுகள் பழுதுபார்த்தல், புதிய வீடுகளை அமைத்துக் கொடுத்தல், நீர் மற்றும் மின்சார வசதிகளை செய்து கொடுத்தல் என்பவற்றுக்காக

நிறுவனம் மூலதன ஏற்பாடுகளை செய்துள்ளதோடு நலன்புரி நடவடிக்கைகளின் முன்னேற்றத்துக்கு பங்களித்துள்ளது.

சிலா/பெருந்தோட்ட நிறுவனத்தின் எதிர்காலம் வேளாண்மை நடைமுறைகளை வைத்து நிர்ணயிக்கப்படுவதனால் வேளாண்மை நடவடிக்கை மீது தொடர்ச்சியான கவனிப்புகள் செலுத்தப்பட்டு வருகின்றது. வரட்சி காலத்தில் தென்னை பயிர்ச்செய்கை கண்காணிப்பு நடவடிக்கை , மண்ணின் ஈரப்பதனை பாதுகாத்து இரசாயன உரமிடல், இரசாயண நடவடிக்கைகள் போன்ற மற்றும், பயிர்ச்செய்கை தொடர்பான நடவடிக்கைகளில் கவனம் செலுத்துதல்.

அதிகமான எமது தோட்டங்கள் உலர் வலயத்தில் வியாபித்துக் காணப்படுவதனால் ஒவ்வொரு ஆண்டும் வரட்சியை எதிர்நோக்க வேண்டி உள்ளது. இவ்வரட்சிக்கான தீர்வாக 12 குளங்களை புணர்நிர்மாணம் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கை 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இது தொடர்கின்றது. இச்செயல்திட்டத்தின் காரணமாக புதிதாக 12 நீர்வளங்களை ஸ்தாபித்து கொண்ட அதே வேலை வண்டல் மண் அகற்றியதன் மூலமாக ரூபா. 24 மில்லியன்களை மேலதிக வருமானமாக ஈட்டிக்கொள்ள முடிந்தது.

**சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் அடைவுகள்**

ஆண்டின் போது எமது நிறுவனத்தின் வெற்றி மற்றும் சமூகத்திற்கு செய்யப்பட்ட பங்களிப்புகள் வரவேற்கப்பட்டது. சட்டபூர்வமான கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் எமது ஊழியர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக நாம் காட்டிய அக்கறை மற்றும் அர்ப்பணிப்புக்களை வரவேற்கும் முகமாக “ஊழியர் நம்பிக்கை நிதியம்” இனால் நிறுவனத்திற்கு சன்மானம் கிடைக்கப்பெற்றது.

தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் கீழ் அரசுக்கு உரித்தான நிறுவனம் என்ற வகையில் எமது எதிர்பார்ப்பானது அனைத்து விடயங்களிலும் நிலையான அபிவிருத்தியை அடைந்து கொள்வதோடு அதன் பிரதிபலனை நாட்டின் முழு மொத்த மக்களுடனும் பகிர்ந்துகொள்வதும் ஆகும்.

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் இலாபகரமான மற்றும் மொத்த நாட்டு மக்களுக்கு மிக உபயோகமான முறையில் நாட்டின் மொத்த சொத்துக்களும் பயன்பட செய்வதற்கு தேவையான வழிகாட்டல்களை வழங்கும் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சிற்கு பொறுப்பான கௌரவ அமைச்சல், கௌரவ பிரதி அமைச்சர், அமைச்சின் செயலாளர் உட்பட ஊழியர்களுக்கும், சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பனிப்பாளர் சபையுடன் இணைந்து நிறுவனத்தின் அபிவிருத்திக்கு பங்களிக்கின்ற அனைத்து பிரிவின் பொறுப்பாளர்களுக்கும், அனைத்து ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கும் மேற்குறித்த நிறுவனத்தின் முன்னேற்றத்தை அடைந்து கொள்ள உரமளித்ததற்காக எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு.வீ.கே.சீ. ஹேரத்**
தலைவர்/பிரதான நினறவேற்று அதிகாரி

## பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்

திரு. வீ.கே.சீ. ஹேரத்
(தவிசாளர்/தலைவர்)
இல. 86, பௌத்தாலோக வீதி, குருநாகலை

திரு. எம்.கே.பீ. செனவிரத்ன.
(நிறைவேற்று பணிப்பாளர்) - வழக்கறிஞர்
இல. 14, லேடி கோர்டன் தொகுதி, கண்டி

திரு. பீ.பீ.எஸ் நொனிஸ்
பணிப்பாளர் (திறைசேரி பிரதிநிதி)
கொள்முதல் மேற்பார்வை தொகுதி - நிதி அமைச்சு

திரு. ஏ லக்கதாஸ்
(பணிப்பாளர்)
மேலதிக செயலாளர் - (பெருந்தோட்ட மற்றும் கைத்தொழில்)
மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு

திரு. கே.ஜீ. ஆனந்த புஷ்பகுமார
(பணிப்பாளர்)
"புஷ்பாவில" யம்பாவ, குலியாபிட்டிய.

திரு. எச்.எம்.என்.சீ. ஹேரத்
(பணிப்பாளர்)
எடிவென்ன தோட்டம், வெல்பல்ல (வடகிழக்கு)

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு

## பிரதான அலுவலகம்

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. வீ.கே.சீ. ஹேரத் | - | தவிசாளர் / தலைவர் |
| 02. | திரு. எம்.கே.பீ. செனவிரத்ன | - | நிறைவேற்று பணிப்பாளர் |
| 03. | திரு. கே.ஜீ. ஆனந்த புஷ்பகுமார | - | செயற்பாட்டு பணிப்பாளர் |
| 04. | திரு. டீ.ஜீ.ஏ.ஆர.டீ. சில்வா | - | பிரதிப் பொது முகாமையாளர் |
| 05. | திரு. டப்.எல்.டீ பிரனாந்து | - | உ.பொ.மு. பயிர்ச்செய்கை பொறியியலாளர் |
| 06. | திரு. பீ. ஹெட்டிஆரச்சி | - | உதவிப் பொது முகாமையாளர் |
| 07. | திரு. ஆர்.எம்.ஆர்.பீ. ரத்நாயக்க | - | சிரேஷ்ட கணக்காளர் |
| 08. | திரு. எச.பீ.எம்.டபிள்யு. ஹேமசந்திர | - | பிரதம உள்ளக கணக்காய்வாளர் |
| 09. | திரு எம்.எம். மர்லி | - | தோட்ட முகாமையாளர் |
| 10. | எம். ஆர். அஷோக ஆனந்த | - | தோட்ட முகாமையாளர் |
| 11. | திரு. டபிள்யு.கே. பிரதீப் | - | தொ.நுட்ப முகாமை ரூ அபிவிருத்திதி |
| 12. | திரு. ஏ.எம்.டீ.எச்.பீ அத்தபத்து | - | மனிதவள முகாமையாளர் |
| 13. | திரு. எம்.கே.என் அபேதீர | - | நிதி முகாமையாளர் |
| 14. | திரு ஏ.என்.ஏ.எஸ் கருணாதுங்க | - | விற்பனை முகாமையாளர் |
| 15. | திருமதி. பீ.என்.என. குணஸீல | - | திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு முகாமையாளர் |

## தோட்ட அத்தியட்சகர்கள்

| | | | |
|---|---|---|---|
| 16. | திரு.ஜே.எச்.பெர்ணான்டோ | - | அத்தியட்சகர், பளுகஸ்வெவ பிரதேச தோட்டம் |
| 17. | திரு.ஜீ.எம்.ஏ கருணாதிலக | - | அத்தியட்சகர், சிலாபம் பிரதேச தோட்டம் |
| 18. | திரு. டீ.எம்.ஜீ.ஏ. திசாநாயக்க | - | அத்தியட்சகர், பிங்கிரிய பிரதேச தோட்டம் |
| 19. | திரு. எம்.ஜீ.சீ. டயஸ் | - | அத்தியட்சகர், திவுலபிட்டிய பிரதேச தோட்டம் |
| 20. | திரு. பி.எம்.யு.பி பஸ்நாயக்க | - | அத்தியட்சகர், மாதம்பை பிரதேச தோட்டம் |
| 21. | திரு.ஏ.எம்.டீ. குணதிலக | - | அத்தியட்சகர், தம்பபன்னி பிதேச தோட்டம் |

# முகாமைத்துவ மீளாய்வு

### சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் பற்றிய சுருக்கமான அறிமுகம்

அரச தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் முகாமைத்துவ செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற இலாபகரமான அரச பெருந்தோட்ட நிறுவனம் ஒன்றாக சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தை அறிமுகம் செய்ய முடியும். சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் தென்னந் தோட்டங்கள் குருநாகல், கம்பஹா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களை பிரதான அடிப்படையாகக் கொண்டு வியாபித்துள்ளதோடு மொத்த நிலப்பரப்பு 14,161 ஏக்கர்கள் ஆகும். அதன் நிலப்பரப்பில் 9,450 ஏக்கர்களில் தென்னை பயிர்ச்செய்கையும், ஏனைய காணிகளில் பலதரப்பட்ட விவசாயம் மற்றும் சுற்றாடல் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. பளுகஸ்வெவ தோட்டம், சிலாபம், பிங்கிரிய, மாதம்பை, திவுலபிட்டிய மற்றும் தம்பபண்ணி தோட்ட வளையங்களாக பிரதானமாக 06 வளையங்களாக தோட்டங்கள் முகாமை செய்யப்படுவதுடன், அதன் கீழ் 85 அலகுகள் நிர்வகிக்கப்படுகின்றன. இந்தத் தோட்ட வலயங்கள் கீழ் நாட்டு உலர் மற்றும் இடைநிலை விவசாய காலநிலை வலயங்களின் கீழ் அமைந்துள்ளன. அந்தந்த காலநிலை நிலைமைகளுக்கு பொருத்தமான பிரகாரம் விவசாயம் வெற்றிகரமாக செய்யப்படுவதுடன் தென்னைப் பயிர்ச் செய்கைக்கு மேலதிகமாக துணை பயிர்களாக மரமுந்திரிகை, ரம்புட்டான், ரகன் புருட் மற்றும் அன்னாசி பழம் ஒன்றாகவும், மளிகைச் சாமான்களாக மிளகு மற்றும் கருவாவும் பயிரிடப்பட்டுள்ளன.

கால்நடை அதாவது எருமை மாடு வளர்ப்பு மற்றும் செம்மறி ஆட்டு வளர்ப்பு செயல் திட்டங்களை உள்ளடக்கிய பலதரப்பட்ட உயிரினங்கள் உச்ச அளவில் இலாபகரமாக மற்றும் வினைத்திறனான ஒழுங்கில் பயன்படுத்துகின்ற நிறுவனம் ஒன்றாக அறிமுகம் செய்ய முடியும். மேலும், பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களாக உயர் கொப்பரா, தூய்மைப்படுத்திய தேங்காய் எண்ணெய் உற்பத்தி, பதனிடப்பட்ட மரமுந்திரிகை உற்பத்தி மட்டுமல்லாது எருமை மாடு வளர்ப்பு ஊடாக உயர் பண்புடன் கூடிய தயிர் மற்றும் யோக்கட் உற்பத்தி போன்றவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

16 வருட தனியார் துறையின் முகாமை கால எல்லையினுள் போதிய அளவில் தென்னையுடன் குறுங்கால துணைப் பயிர்களினை வளர்க்க நடவடிக்கை எடுக்காததுடன் 2008 முதல் 2016 வரை 2,619 ஏக்கர் அளவில் தென்னை முதலான துணை பயிர்ச் செய்கைகள் மற்றும் புதிய பயிர்ச்செய்கைகளை ஆரம்பிப்பதற்கு சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்திற்கு இயலுமை கிடைத்தது. ஏற்படுகின்ற சுற்றாடல் காரணிகளின் பாதகமான தாக்கத்தின் படி சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் வருடாந்த தேங்காய் உற்பத்தியின் பால் உயர் தாக்கம் ஏற்பட்டு வருகின்றது. எனினும் இந்தக் காரணிகளின் தாக்கங்கள் நிலையான முகாமையின் ஊடாக மற்றும் பொருத்தமான விவசாய தொழில்நுட்ப முறைமையின் ஊடாக குறைத்துக்கொள்வதற்கு இயலுமை கிடைத்தது. எனினும், இக்கால எல்லையுள் ஆரம்பிக்கப்பட்டுள்ள துணை பயிர்கள் சிறந்த முறையில் பயன்தரும் நிலைக்கு வருவதற்கு மேலும் 10 தொடக்கம் 15 வருடங்கள் எடுக்க முடியும். அக்கால எல்லையில் நடைமுறையில் சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் தேசிய தேங்காய் உற்பத்திக்கு வழங்குகின்ற பங்களிப்பாக இருப்பதுடன் மிகவும் உயர் பங்களிப்பினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் எமது அபிலாசைகள் ஆகும்.

### திறைசேரிக்கு பங்கு லாபம் செலுத்துதல்

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம், பிரதேச பெருந்தோட்ட நிறுவனங்களின் விசேடமான பெருந்தோட்ட நிறுவனமாக நிலையானதும் விஞ்ஞான ரீதியாகவும் முகாமை செய்வதினூடாக நேர்மையாகவும், வினைத்திறனாகவும்/ முழுமையான ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் சார்பாக திறைசேரி மற்றும் அரசு சார்பாக தனியார்மயமாக்காமல் அரச தொழில் முயற்சிகளை முகாமை செய்து அதன் உற்பத்தி மற்றும் உச்ச பங்கு இலாபத்தின் நலன்களின் படி நியதிச்சட்ட கொடுப்பனவுகளை (ஊழியர் சேமலாப நிதியம் / ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் / பணிக்கொடை) ஆகியவற்றையும் பதவியணியினருக்கு பரிசில்கள் மற்றும் ஊக்கக் கொடுப்பனவுகளை வழங்குவதுடன் அதன் உரிமையாளர்களான திறைசேரிக்கு ரூபா. 426 மில்லியன் தொகையினை வழங்கி இலாபம் வழங்குவதுடன் பயன்படுத்தப்படுகின்ற காணிகள் தொடர்பாக குத்தகை வாடகையாக ரூபா 350 மில்லியன் அளவில் திறைசேரிக்கு வழங்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### தென்னங் காணிகள் பன்முகப்படுத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள்

பளுகஸ்வெவ தோட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட முதல் நிலை வென்கொப்பராவினை பயன்படுத்தி அங்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேங்காய் ஆலையின் ஊடாக தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுவதுடன் அந்த உற்பத்தி எமது விற்பனை நிலையங்களில் ஊடாகவும் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் மூலமும் போத்தல்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. விசேடமாக 2016 ஆம் ஆண்டு முதல் பொதுமக்களுக்கு எமது கொழும்பு சந்தைப்படுத்தல் நிலையத்தினூடாக அவ் உற்பத்திகளின் தரத்தின் காரணமாக அதற்கான கேள்வி அதிகரித்து காணப்படுகின்றது.

பதனிடப்பட்ட மரமுந்திரிகை தொடர்பாக காணப்படுகின்ற கேள்வியின் படி எம்மால் தம்பபண்ணி தோட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள மரமுந்திரிகை பதனிடல் நிலையத்தில் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதுடன் அதன் உற்பத்திகளை எமது சந்தைப்படுத்தல் நிலையத்தின் ஊடாக விற்பனை செய்யப்படுகின்றது. சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தில் 800 ஏக்கறுக்கும் அதிகமான பகுதியில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கை காணப்படுவதுடன் அதன் வருடாந்த உற்பத்தி 60,000 - 70.000 கிலோ அளவாகும். உற்பத்தியில் அதிக அளவானவை கோதுடன் கூடிய மரமுந்திரிகை ஆக விற்பனை செய்யப்படுவதுடன் ஒரு பகுதி தம்பபண்ணி தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மரமுந்திரிகை பதனிடும் ஆலைக்கு மூலப்பொருளாக பெறப்பட்டு மரமுந்திரிகை பதனிடப்படுகின்றது.

பழுகஸ்வெவ தோட்டத்தில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்ற எருமை மாடு வளர்ப்பு செயல் திட்டத்தின் ஊடாக தயாரிக்கப்படும் தயிர் தொடர்பாக பாரிய கேள்வி காணப்படுவதுடன் நாளாந்த உற்பத்தி அளவு சில மணித்தியாலங்களுக்குள் பழுகஸ்வெவவில் தாபிக்கப்பட்டுள்ள சந்தைப்படுத்தல் கருமபீடத்தில் ஊடாக விற்பனை செய்யப்படுகின்றது. எனவே உற்பத்தி அளவினை எதிர்வரும் வருடங்களில் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதேபோன்று யோக்கட் உற்பத்தி தொடர்பாக விநியோகிக்க முடியாத அளவுக்கு கேள்வி காணப்படுகின்றது.

இருக்கும் நிலத்தினை உச்ச மற்றும் வினைத்திறனாக பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்வதற்கு எங்களுடைய கவனம் செலுத்தப்பட்டுள்ளது, அதன்பிறகு காணிகளில் துணை பயிர்ச்செய்கை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. துணைப் பயிர்ச்செய்கையாக மரமுந்திரிகை, ரெகன் புருட், மிளகு, கருவா, ரம்புட்டான் மற்றும் அன்னாசி பயிரிடப்பட்டுள்ளன.

உயர் தரத்துடன் கூடிய விதைத் தேங்காய் உற்பத்தியினை நோக்காக கொண்டு தென்னை ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து கினியம தோட்டத்தில் அமைந்துள்ள விதைத் தேங்காய் தோட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதுடன், அதன்

மூலம் வினைத்திறன் மற்றும் நிலைத்த தன்மையை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஊழியர் பற்றாக்குறை மற்றும் இயந்திர மயம்**

நிலவும் ஊழியர் பற்றாக்குறையின் பிரகாரம் தோட்டங்களின் தேவை கருதி ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்கள் வெளி இடங்களிலிருந்து பெற்றுக்கொள்ள படுவதுடன், அதற்கு மாற்று வழியாக உரமிடுதல் போன்ற பணிகளுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தும் திட்டம் தீர்மானிக்கப்பட்டுள்ளது

**பாரியளவான தென்னை தோட்டம் தொடர்பாக காணப்படுகின்ற இடர் நிலைமை**

பெருந்தோட்டக் கைத்தொழிலில் நிலவும் பிரதான தடையாக மழை இல்லாத நீண்ட வரட்சிக் கால நிலைமையைக் குறிப்பிட முடியும். ஓரளவு அந்த நிலைமையை சீர் படுத்திக் கொள்வதற்காக பயனின்றி மழைநீர் கடலுக்கு அடித்துச் செல்லப்படுவதை குறைத்து உச்ச அளவில் மழைநீரை தோட்டத்தினுள் தேக்கி வைத்துக் கொள்வதற்காக தேவையான செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் மண் ஈரலிப்பை பாதுகாப்பதுடன் சேகரிக்கப்பட்ட நீரினை துணை பயிர்கள், புதிய பயிர்ச் செய்கைகள் தொடர்பாக பயன் தருகின்ற பயிர்களுக்கு தேவையானபோது நீர் விநியோகம் செய்வதற்கு பயன்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

அதன் பிரகாரம் சிறிய நீர் தேக்கங்கள் / குட்டைகளை எமது தோட்ட பகுதியில் உருவாக்கும் முகமாக மாதம்பை கல்வாகார மற்றும் ஹிம்மெலியாகார தோட்டங்களில் 04 ம், செம்புக்கட்டிய தோட்டத்தில் 02 ம், திவுலபிட்டிய கட்டுக்கெந்த தோட்டத்தில் 02 ம், சிறிலந்த தோட்டத்தில் 02ம் மற்றும் பிங்கிரிய அதுருமந்த தோட்டத்தில் 02 ம் ஆக இத்தகைய நீர்த்தேக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும் பியுரேரியா மூடு பயிராகவும் கிலிசீரியா நிழல் தாவரமாகவும் பயிரிடப்பட்டுள்ளன. அதனூடாக போதிய அளவான சேதன பசளையை மண்ணுக்கு வழங்குவதற்கும், மண் ஈரத்தன்மையை பாதுகாக்கும் முகமாக இருப்பதுடன் பருப்பு வகை குடும்பத்தைச் சேர்ந்த ரிசல்ட் நைதரசன் தீர்வாக செயற்படுகின்றது.

தென்னை கைத்தொழில் முகம் கொடுக்கின்ற ஏனைய பிரதான இடர்கள் மற்றும் அச்சுறுத்தல்களாக தேங்காய் எண்ணெய் தொடர்பாக காணப்படுகின்ற பாதிலீடாக இந்த நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற தாவர எண்ணெய் மற்றும் பாம் எண்ணை என்பவற்றை குறிப்பிட முடியும். இந்த நிலைமை தேங்காய் எண்ணெய் ஆலை தொடர்பாக பாதிப்பினை ஏற்படுத்தல், தென்னந்தும்பு தொடர்பாக பதில் பொருளாக காணப்படுகின்ற நைலோன் மற்றும் பிளாஸ்டிக் உற்பத்தி பொருட்கள் தும்புக் கைத்தொழில் துறைக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அதன் பிரகாரம் தெங்கை பிரதானமாக கொண்ட கைத்தொழிலிலின் கேள்வி இந்நிலைமையில் படி வீழ்ச்சி அடைந்துள்ளதுடன், கறித் தேங்காய்த் தேவை அதிகரிக்கின்றமை தெங்கினை பிரதானமாகக் கொண்ட கைத்தொழில் தொடர்பாக மிகக் கடுமையாக தாக்கம் செலுத்தியுள்ளது.

**மனிதவள கொள்கைகள்**

பெருந்தோட்டத்துறையின் அபிவிருத்தியில் மனித வளம் மிக முக்கியமான வளமாகவும் சொத்தாகவும் கருதப்படுவதுடன் உயர் விவசாய உற்பத்தி மற்றும் நிலையான இலாபத்தினை பெற்றுக்கொள்வதில் முக்கிய காரணியாக குறிப்பிட முடியும். குறிப்பாக தோட்டமட்டத்ததில் தோட்ட அதிகாரிகள், கள அலுவலர்கள், தோட்ட முகாமைத்துவ உதவியாளர் மற்றும் ஒத்துழைப்பு பதவியணி, காவல்காரர்கள், ஊழியர்கள் ஆகியவர்களுக்கு தேவையான பிரதான வசதிகளுடன் தோட்டம், பங்களா மற்றும் உத்தியோகபூர்வ இல்லம் தங்கி இருப்பதற்காக வழங்கி அறிவு மற்றும் திறன்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளை அவர்களுக்கு ஏற்பாடு செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது







(எங்களுடைய ஊழியர்களள் தொடர்பான சிறந்த பாதுகாப்பு முக்ட்ப்பு மற்றும் கரிசனை தொடர்பில் எமது பணியை அங்கிகரித்து ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையினால் விருதொன்று வழங்கப்பட்டது - 2016,)

## தெங்கு உற்பத்தித்திறன்

சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியால் 5733.23 ஹெக்டயார்கள் நிருவகிக்கப்படுவதுடன் அதனூடாக 3825.94 ஹெக்டயார்களில் தெங்கு பயிரிடப்பட்டுள்ளன. இந்தக் காணி புத்தளம் முதல் காட்டுநாயக்கன் வரை கடற்கரையோர பகுதியிலும் திவுலபிட்டிய முதல் நிக்கவெரட்டிய வரையும் உள்ள மேட்டு நில எல்லையினுள் உலர், இடைநிலை மற்றும் ஈர நிலம் ஆகிய பல தரப்பட்ட காலநிலைகளின் கீழ் அமைந்துள்ளன. அதன் விபரம் வருமாறு.

| | தோட்டம் | அளவு (ஹெக்டயார்) | வலயம் |
|---|---|---|---|
| 1 | பிங்கிரிய பிரததேசத் தோட்டங்கள் | 1,509.66 | இடைவெப்பம் |
| 2 | சிலாபம் பிரதேச தோட்டங்கள் | 645.57 | இடைவெப்பம் |
| 3 | திவுலபிடிய பிரதேச தோட்டங்கள் | 424.49 | ஈர வலயம் |
| 4 | மாதம்ப பிரதேச தோட்டங்கள் | 655.86 | ஈர வலயம் |
| 5 | பழுகஸ்வெவ | 672.22 | இடைவெப்பம் |
| 6 | தம்பபன்னி | 1,825.43 | உலர் வலயம் |

### தேசிய மட்டத்தில் தேங்காய் விதை உற்பத்தி

| வருடம் | தெங்கு அறிவடை (விதைகள்) | விலகல் % | மரங்களின் எண்ணிக்கை | விலகல் % | உற்பத்தித்திறன் (ஒரு மரத்திற்கான காய்கள்) | இலங்கை உற்பத்தி (மில்லியன்கள்) | விலகல் % |
|---|---|---|---|---|---|---|---|
| 1992 | 20,782,648 | 0 | 421,875 | | 49 | 2,296 | 0 |
| 1993 | 19,145,214 | -8 | 407,512 | -05 | 47 | 2,164 | -06 |
| 1994 | 21,382,314 | +12 | 426,722 | +03 | 50 | 2,622 | +21 |
| 1995 | 22,603,156 | +6 | 441,379 | +04 | 51 | 2,275 | +05 |
| 1996 | 19,336,658 | -14 | 421,716 | -04 | 46 | 2,546 | -08 |
| 1997 | 19,235,974 | -1 | 412,006 | -02 | 47 | 2,630 | +03 |
| 1998 | 18,921,808 | -2 | 415,718 | +01 | 46 | 2,522 | -04 |
| 1999 | 21,348,626 | +13 | 393,360 | -05 | 54 | 2,828 | +12 |
| 2000 | 23,216,882 | +9 | 399,454 | +02 | 58 | 2,396 | +09 |
| 2001 | 21,829,630 | -06 | 395,435 | -01 | 55 | 2,769 | -11 |
| 2002 | 15,031,795 | -31 | 413,465 | +05 | 36 | 2,392 | -14 |
| 2003 | 17,585,652 | +17 | 402,937 | -03 | 44 | 2,562 | +11 |
| 2004 | 18,354,614 | +04 | 401,162 | 00 | 46 | 2,591 | +01 |
| 2005 | 14,391,265 | -22 | 408,006 | +02 | 35 | 2,515 | -03 |
| 2006 | 17,070,324 | +19 | 411,968 | +01 | 41 | 2,785 | +11 |
| 2007 | 17,815,317 | +04 | 395,762 | -04 | 45 | 2,869 | +03 |
| 2008 | 16,280,051 | -09 | 378,333 | -04 | 43 | 2,908 | +01 |
| 2009 | 18,632,247 | +14 | 380,000 | 00 | 49 | 2,762 | -05 |
| 2010 | 18,256,007 | -2 | 340,586 | -10 | 54 | 2,317 | -16 |
| 2011 | 14,527,770 | -20 | 353,113 | +04 | 41 | 2,808 | +09 |
| 2012 | 15,807,753 | +09 | 312,456 | -12 | 51 | 2,940 | +05 |
| 2013 | 9,595,275 | -39 | 313,048 | +01 | 31 | 2,513 | -14 |
| 2014 | 12,969,381 | 35 | 283,449 | -9 | 46 | 2,870 | +14 |
| 2015 | 12,517,083 | -3 | 288,951 | 2 | 43 | 3,026 | +5 |
| 2016 | 16,522,290 | 32 | 304,043 | 5 | 54 | 2,845 | -7 |







## தெங்கு பயிரிடப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பு (ஹெக்டயார்)

2016 திசம்பர் 31 முடிவில்

| பிரதேசம் | பளுகஸ்வெவ | திவுலபிடிய | பிங்கிரிய | சிலாபம் | மாதம்பே | தம்பபன்னி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| தேங்காய் உள்ள மரங்கள் (ஹெக்) | 444.16 | 289.74 | 653.92 | 368.99 | 486.95 | 555.82 | **2,797.58** |
| முதிர்வடையாதவை (ஹெக்) | 175.00 | 114.00 | 365.99 | 116.37 | 116.70 | 138.31 | **1,026.37** |
| மொத்த தேங்காய்கள் | 619.16 | 403.74 | 1,019.91 | 485.36 | 603.65 | 694.13* | **3,825.94** |

**குறிப்பு : 590.35 ஹெக்டயார் மரமுந்திரிகை பரப்பளவின் காரணமாக 2016 இல் சீராக்கப்பட்டது.



**2016 ஆம் ஆண்டில் சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் தென்னை மரங்களின் வயது பற்றிய பகுப்பாய்வு**

| வயது வகை | 50 இற்கு மேல் | 20 - 49 | 10 - 19 | 5 - 9 | 0 - 4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| மரங்களின் எண்ணிக்கை | 157,956 | 219,957 | 23,532 | 39,948 | 112,071 | **553,464*** |
| % - மொத்தம் | 29% | 40% | 4% | 7% | 20% | |

*காய் உள்ள, முதிர்வடையாத, செனில், டெபரிங்க மரங்கள்,




## ஈர நாட்கள் மற்றும் மழை வீழ்ச்சி

சிலாபம் பெருந்தோட்டப் பிரதேச தோட்டத்தில் கிடைத்த வருடாந்த மழை வீழ்ச்சி 29 சதவீதம் - 48 சதவீதம் ஆக இருப்பதை தெளிவாக காட்டுவதுடன் இது கடந்த வருடத்திலும் பார்க்க குறைவானது.

| தோட்டம் | 2016 சனவரி – திசம்பர் மழை வீழ்ச்சி ( மி.மி) | 2016 சனவரி – திசம்பர் ஈர நாட்கள் (எண்ணிக்கை) | கடந்த வருட மாறிலி (மழை வீழ்ச்சி – மி.மீ) |
|---|---|---|---|
| பிங்கிரிய | 849 | 44 | -35% |
| சிலாபம் | 883 | 38 | -48% |
| திவுலபிடிய | 1,205 | 53 | -29% |
| மாதம்பே | 925 | 29 | -37% |
| பழுகஸ்வெவ | 1,220 | 55 | -29% |
| தம்பபன்னி | 910 | 34 | -43% |






## மரபுரீதியாக மேம்படுத்தப்பட்ட தென்னை நாற்றுக்களின் உற்பத்தி மற்றும் கையினால் மகரந்த சேர்க்கை

நாற்றுமேடை பராமரிப்பில் முதல் 5 மாதத்தில் மகரந்தச்சேர்க்கை செய்யப்படாத விதைகள் அகற்றப்பட்டு (15-அளவில்) எரிக்கப்படுகின்றன. இதே போன்று முதல் ஏழு மாதங்களில் மகரந்தச் சேர்க்கை செய்யப்பட்ட நாற்றுக்களில் மோசமான நாற்றுகள் (10 சதவீதம்) தெரிவு செய்யப்பட்டு அகற்றப்பட்டு எரிக்கப்படுகின்றன. பின்னர் கிடைக்கின்ற மரபுரீதியாக உயர் தரத்தினை கொண்ட நாற்றுக்கள் பழுகஸ்வெவ தோட்டம் உள்ளடங்கலாக ஏனைய தோட்டங்களுக்கு வழங்கப்படுவதுடன் அதனூடாக உயர்வான உற்பத்தி எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.

தெங்கு கைத்தொழிலில் உயர் இலாபம் மற்றும் உற்பத்தியினை பெற்றுக் கொள்வதற்கு உயர்வு தகுதியினை கொண்ட நோயற்ற மரங்கள் தேவையாகும். அது தொடர்பாக நோயற்ற, உயர் பண்புகளைக் கொண்ட வறட்சிக்கு ஈடுகொடுக்கக்கூடிய நாற்றுக்களை நடுதல் மிக முக்கியமாகும்.

கையினால் மகரந்தச்சேர்க்கை செய்வதன் ஊடாக உற்பத்தி செய்யப்பட்ட நாற்றுக்கள் பழுகஸ்வெவ தோட்டத்தில் நாற்று மேடையில் விதை நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு அந்த நாள்றுக்கள், துணை பயிர்களுக்கு மத்தியில் அவை தற்பொழுது நாட்டப்பட்டுள்ளதுடன் அவை வலுவாகவும் நோயின்றியும் வளர்ந்து வருகிறது. உயர் விளைச்சல் கொண்ட மரங்களாக உறுதிப்படுத்த முடியும்.





கையினால் மரபுரீதியாக மகரந்தச்சேர்க்கை செய்யப்பட்டு மேம்படுத்தப்பட்ட தேங்காய் நாற்று உற்பத்தி

| ஆண்டு | சந்ரமன மலர்கள் | அறுவடை செய்யப்பட்ட விதைத் தேங்காய்கள் | நாற்று மேடையில் உள்ள விதைகள் (TSR) |
|---|---|---|---|
| 2012 | 2,556 | 4,847 | இடவில்லை |
| 2013 | 4,098 | 16,121 | 20,968 |
| 2014 | 1,976 | 17,452 | 17,112 |
| 2015 | 1,956 | 13,446 | 11,634 |
| 2016 | 1,816 | 11,273 | 10,017 |
| **Total** | **12,402** | **63,139** | **59,731** |

### விதை தென்னந் தோட்டம் ( கினியம 'கப்ருக' விதைத் தோட்டம்)

தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தினருக்கிடையே ஒருங்கிணைந்த செயல்திட்டமாக" கப்ருக" கலப்பு விதை தோட்டம் கினியம தோட்டத்தில் பராமரிக்கப்படுகின்றது. வளர்ந்து வருகின்ற தெங்கு நாற்று வலுவான வெற்றிகரமான செயற்திட்டம் என தோன்றுகின்றது (2012 ஆம் தினத்தில் ஆரம்பிக்கப்பட்டது)

## முதலீட்டு அளவு

### புதிய பயிர்கள் மற்றும் துணைப் (கீழ்) பயிர்கள்

தென்னை மரங்கள் முதிர்வடைவதை தொடர்ந்து அதன் விளைச்சல் படிப்படியாக குறைவடைதல் புதிய பயிர்களுக்கு மற்றும் மீள் பயிரிடலை தாமதமின்றி ஆரம்பிக்கப்பட வேண்டிய தேவையை சுட்டிக்காட்டுகின்றது. அதன் காரணி ஒன்றாக மரங்களின் வயது, விளைச்சல், உயர் பயிர்களின் உள்ளடக்க இயலளவு மற்றும் ஒரு ஏக்கரில் மரங்களின் எண்ணிக்கை பற்றி தென்னை பயிர் செய்கை ஒன்றை மேற்கொள்ளும்போது கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

மீள் பயிரிடல் ஆரம்பிப்பதற்காக தாக்கம் செலுத்தும் என்ற ஒரே காரணியாக மரங்கள் முதிர்வடைதல் மட்டுமல்லாது தோட்டத்தில் காணப்படுகின்ற மரங்களின் செறிவு கிளைகளின் உள்ளடக்கம் மற்றும் நிழல், மண் பேதமைகள் போன்றவற்றை கவனத்தில் கொண்டு சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் புதிய தென்னை பயிரின் கீழான பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாரிய அளவில் புதிய மற்றும் துணைப் பயிர்கள் தொடர்பாக முன்னரிலும் பார்க்க கவனம் செலுத்தப்படுவதன் காரணமாக சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பிரதான முதலீடாக துணை பயிர்கள் மற்றும் புதிய பயிர்களை மீள் பயிரிடுவதற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. மொத்த தென்னை மரங்களில் 157,956 மரங்கள் 50 வருடங்களுக்கு மேற்பட்ட முதிர்வைக் கொண்ட மரங்களாக இருப்பதுடன் அதன் சதவீதம் மற்ற பயிர்களில் 29 சதவீதமாகும். அதே போன்று அதன் அறுவடை குறைவடைந்துள்ளதுடன் 2016 ஆம் ஆண்டு நிறைவடையும் போது சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தினால் 1,026.37 ஹெக்டயார்களில் தென்னையின் கீழான துணை பயிர்கள் மற்றும் புதிய பயிர்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த பயிர்கள் 5 அல்லது ஆறு வருடங்களில் விளைச்சலைத் தரும் நிலைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது

31.12.2016, ல் புதிய/கீழ் நடுதல் (முதிர்வுறாத) பயிர்ச்செய்கைகளில் முதலிடப்பட்ட திரண்ட முதலீடு பற்றிய விபரங்கள்

| தோட்டங்கள் | புதிய/கீழ் பயிர்ச்செய்கை பரப்பு (ஹெ) | 31 டிசம்பர் 2016 இன் போது மொத்த முதலீடு |
|---|---|---|
| பளுகஸ்வெவ | 175.00 | 70.1 |
| சிலாபம் பிரதேசம் | 116.37 | 52.7 |
| திவுலபிட்டிய பிரதேசம் | 114.00 | 52.3 |
| தம்பபன்னி பிரதேசம் | 138.31 | 67.8 |
| பிங்கிரிய பிரதேசம் | 365.99 | 154.6 |
| மாதம்பை பிரதேசம் | 116.70 | 56.4 |
| **மொத்தம்** | **1,026.37** | **453.9** |




2016, திசம்பர் 31 இல் உள்ளவாறு முதிர்வடையாத பயிர்கள் - வருட வாரியாக

| ஆண்டு | புதிய/துணைப் பயிர்கள் அளவு ( ஹெக்) |
|---|---|
| 2009 | 101.10 |
| 2010 | 107.93 |
| 2011 | 128.17 |
| 2012 | 266.84 |
| 2013 | 183.76 |
| 2014 | 124.57 |
| 2015 | 68.00 |
| 2016 | 46.00 |
| மொத்தம் | **1,026.37** |



## துணை பயிர்கள் மற்றும் கால்நடை செயற்திட்டம்

### எருமை மாட்டுச் செயற்திட்டம்

பளுகஸ்வெவ தோட்டத்தில் அமைந்துள்ளது.

- எருமை மாடுகளின் எண்ணிக்கை - 330
- திசம்பர் முடிவில் பால் தரும் பசுக்களின் எண்ணிக்கை - 45
- மொத்த பால் உற்பத்தி லீற்றர்கள் - 37,371.58 (ட)

| உற்பத்தி விபரம் | அலகுகளின எண்ணிக்கை |
|---|---|
| தயிர் - 1000 மி.லீ | 19,580 |
| தயிர் - 500 மி.லீ | 6,547 |
| தயிர் - 175 மி.லீ | 6,580 |
| யோகட் - 80 மி.லீ | 50,266 |




### எருமைமாடு / செம்மறியாடு எண்ணிக்கை

| தோட்டம் | எருமைமாடு (எண்ணிக்கை) | செம்மறியாடு (எண்ணிக்கை) |
|---|---|---|
| பழுகஸ்வெவ | 330 | - |
| சிலாபம் | 32 | - |
| மாதம்பே | 10 | 115 |
| பிங்கிரிய | - | 487 |
| **மொத்தம்** | **373** | **602** |




## பல்லாண்டு துணை பயிர்களை நடுதல்

நிலையான மற்றும் உயர்வான முதலீட்டு நன்மையினை பெற்றுக்கொள்வதற்கு சிக்கலாக காணப்படுகின்ற சந்தை நிலமை, ஊழியர் பற்றாக்குறை, அறுவடைகளை சேகரித்தல், திருட்டு போன்ற விடயங்கள் மற்றுமல்லாது விவசாய காலநிலை மற்றும் நிலவேறுபாடுகளை கவனத்தில் கொண்டு பொருத்தமான துணை பயிர்களை பயிரிடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் திவுலபிட்டிய தோட்டப் பகுதியில் தென்னையுடன் உச்சப் பயனைப் தருகின்ற துணை பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளதுடன், பழுகஸ்வெவ தோட்டத்தில் தென்னைப் பயிர்ச் செய்கையுடன் இணைந்த வகையில் எருமை மாடு வளர்ப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

## றம்புட்டான் பயிர் செய்கை

கம்பஹா மாவட்டத்தை பிரதானமாகக் கொண்டு ரம்புட்டான் பயிற்செய்கை இலங்கையில் பிரபல்யப்படுத்த பட்டுள்ளதுடன் ரம்புட்டான் தொடர்பாக சந்தையில் உயர் கேள்வி காணப்படுகின்றது. வருடத்தின் ஜுன் ஜுலை மாதம் தொடங்கியதும் ரம்புட்டான் அறுவடைக்காலம் ஆரம்பிக்கப்படுவதுடன் அக்காலத்தில் உயர் அறுவடை பெற்றுக் கொள்வதற்கு இயலுமை கிடைக்கப்பெற்றுள்ளதுடன் வருடத்தின் ஆரம்ப மாதங்கள் இரண்டில் பருவகால ஓய்வு அறுவடையை சிறிதளவில் காண முடியும்.



பொருளாதாரரீதியாக ரம்புட்டான் உயர் வருமானத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய பயிர் ஒன்றாக இருப்பதுடன் சிலாபம் பெருந்தோட்ட கம்பெனியின் திவுலபிட்டிய தோட்ட வளையத்தில் கோபி தோட்டத்தில் அண்ணளவாக 50 ஏக்கரில் ரம்புட்டான் பயிற்செய்கை 1995 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் தென்னைப் பயிர்ச் செய்கையுடன் துணை பயிராக பயிரிடப்பட்டுள்ளது. பயிர்ச்செய்கை தொடர்பாக உயர் தகுதியுடைய மண்ணாக கோபி தோட்ட மண் காணப்படுவதனால் நியூ சாப்பிட்டியா தோட்டப்பாளையத்தின் ஏனைய வலயங்களில் ரம்புட்டான் பயிர்ச்செய்கைக்கு மிகவும் பொருத்தமின்றி இருப்பதனால் இது பயிர்ச்செய்கைக்கு பொருத்தமான இடைவெளி போதிய அளவில் இருக்கும் வகையில் இல்லாமை இந்த பயிரை மேலும் விரிவுபடுத்துவதற்கு காணப்படும் பிரதான தடையாக உள்ளது.



## மிளகுப் பயிர்ச் செய்கை

பிரதானமாக ஈர மற்றும் இடைநிலை விவசாய காலநிலை வளையங்களில் பயிரிடக் கூடிய பயிர் ஒன்றாக மிளகு பயிர்ச்செய்கையை அறிமுகம் செய்ய முடியும். சிலாபம் பெருந்தோட்ட கம்பெனியின் தோட்ட பிரிவு அனேகமாக இடைநிலை வளையத்துக்கு உரியதாக இருப்பதுடன் இந்த பயிர்ச்செய்கைக்கு கலப்பு மண் தேவையாக இருப்பதுடன் வருடாந்த மழைவீழ்ச்சி மில்லி மீட்டர் 1,750 இற்கு அதிகமாக இருக்க வேண்டும். இந்த பயிர்ச்செய்கைக்கு மிகவும் விரும்பத்தக்க சூழலினை கட்டியெழுப்புவதாக சிலாபம் பெருந்தோட்ட கம்பெனி பெருந்தோட்ட வலயத்துக்கு மாத்திரம் இது வரையறுக்கப்பட்டுள்ளது. 1998 முதல் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் அறுபத்து நான்கு ஏக்கர்களில் மிளகு பயிர்ச்செய்கை தென்னைப் பயிர்ச் செய்கையின் கீழ் துணை பயிர்ச்செய்கையாக தனி நிரல் முறைக்கு பயிரிடப்பட்டுள்ளது. அதே போன்று சகல வருடங்களிலும் குறிப்பிடத்தக்க வருமானம் இப்பயிரின் மூலம் ஈட்டப்படுகின்றது. எனினும் சில வருடங்களாக கம்பகா மாவட்டத்திற்கு முன்னைய வருடத்திற்கு ஒப்பீடாக குறைந்த மழை வீழ்ச்சி கிடைக்கப்பெற்றமை இப்பயிர் பராமரிப்பு மற்றும் விரிவாக்கத்திற்கு கடுமையான அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.





## கருவா பயிர்ச்செய்கை





கருவாப் பயிர்செய்கைக்கு சந்தையில் தற்போது பாரிய கேள்வி நிலவுகின்றது. இப்பயிர்ச்செய்கையானது கரையோரப்பகுதிகளில் நீர்க்கொழும்பிலிருந்து மாதரைக்கும் நாட்டின் உட்பகுதிக்குள் களுத்தரையிலிருந்து இரத்தினபுரி வரையும் பயிரிடப்பட்டுள்ளது. சிலா/ பெருந்தோட்ட நிறுவனத்தின் கருவா பயிர்ச்செய்கையானது 2011 இல் திவுலபிட்டிய பகுதியின் குறைந்த அபிவிருத்தி திறன் கொண்ட தோட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டது. இன்றுவறை திவுலபிட்டியவில் சுமார் 27 ஏக்கர்களில் குறிப்பாக தொம்பவின்ன, சரஸ்வதி தோட்டங்களிலும், பிங்கிரிய பகுதியில் கொளமுனுஓய, சியம்பலாவெவ தோட்டங்களைள உள்ளடக்கிய 23.22ஏக்கர்களிலும், 2.98 ஹெக்டேயர் அளவில் சிலாபம் தோட்டய்களிலும் கருவா பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

திவுலபிட்டிய பகுதியில் பயிரிடப்பட்ட கருவா பயிர்ச்செய்கை முதிரச்சி நிலையை அடைந்துகொண்டு வருகின்ற அதே வேலை ஏனைய தோட்டங்களின் பயிர்கள் இன்னும் முதிர்வுறாத நிலையிலேயே உள்ளன.

## ட்ரகன் பழ பயிர்ச்செய்கை





உலர் மற்றும் இடைவெப்ப வலையத்தில் வளர்கின்ற ட்ரகன் பழ பயிர்ச்செய்கையானது பிங்கிரியவில் உள்ள கின்னியம தோட்டத்தில் 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் 2016 முடியும் வரையும் மொத்தமாக 31 ஏக்கர் நிலப்பரபில் பிங்கிரிய, திவுலபிட்டிய, மாதம்பை, பளுகஸ்வெவ தோடங்களில் இப்பயிர்ச.செய்கை சீரான முறையில் பராமரிக்கப்பட்டுவருகின்றது. இப்பயிர்ச்செய்கையை ஸ்தாபிப்பதற்கென பாரிய முதலீடு முதலிடப்பட்ட போதிலும் இவற்றை பராமரிப்பது மிக இலகுவாகவே உள்ளது.

இலங்கைக்கு இப்பழங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட போது இவற்றுக்கு பாரிய கேள்வி காணப்பட்டாலும் கிலோவுக்கு (kg) ரூபா. 250/- காணப்பட்ட விலை தற்போது ரூபா. 200/- ஆக குறைவடைந்து பயிரிடப்படும் பரப்பினை எல்லைப்படுத்தப்பட்டுள்ளது.

**2016 ஆம் ஆண்டில் மொத்த உள்ளக பயிர் வருமானம்** **Rs.**

| தோட்டம் | மரமுந்திரிகை | மிளகு | ரம்புட்டான் | ரகன் புருட் | கருவா |
|---|---|---|---|---|---|
| தம்பபன்னி | 17,609,101.87 | - | - | - | - |
| பிங்கிரிய | 1,061,028.93 | - | - | 741,635.00 | - |
| சிலாபம் | 1,415,976.07 | - | - | 7,360.00 | - |
| மாதம்பே | - | - | - | 3,750.00 | - |
| திவுலபிடிய | - | 937,260.00 | 375,000.00 | 225,420.00 | 391,975.00 |
| பமுகஸ்வெவ | 686,821.00 | - | - | - | - |
| **மொத்தம்** | **20,772,927.87** | **937,260.00** | **375,000.00** | **978,165.00** | **391,975.00** |

## உற்பத்திகள், உற்பத்தி தொடர்பாக பெறுமதி சேர்த்தல் மற்றும் சந்தைப்படுத்தல்

### மரமுந்திரிகை செயற்திட்டம்

### தம்பபன்னி பிரதேச தோட்டங்களில் அமைந்துள்ள மரமுந்திரிகை பதனிடும் நிலையம்



தம்பபண்ணி பிரதேச தோட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள மரமுந்திரிகை நாற்று மேடை ஊடாக மரமுந்திரிகை பயிர்செய்கையாளர்களுக்கு அறுவடையை வழங்குகின்ற நாற்றுக்களின் வினியோகம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது

2016 ஆம் ஆண்டில் அறுவடை செய்யப்பட்ட மொத்த மரமுந்திரிகை விளைச்சல் 67,266 கிலோ கிராம் ஆக இருப்பதுடன், கோதுடன் கூடிய மரமுந்திரிகை தொடர்பாக சந்தையில் குறிப்பிடத்தக்க விலை கிடைக்கப்பெற்றது. மரமுந்திரிகை விளைச்சலின் ஒரு பகுதி தம்பபண்ணி பிரதேச மரமுந்திரிகை பதனிடும் நிலையத்தில் பதனிடப்பட்ட பொருளாக நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்திற்கு சொந்தமான மரமுந்திரிகை செய்கைப் பிரதேச அளவு 827.63 ஹெக்டயாருக்கு அண்மித்தாகும். தற்பொழுது விசேடமாக புத்தளம் மாவட்டத்தில் தம்பபண்ணி தோட்டப் பிரதேசம், பளுகஸ்வெவ தோட்ட பிரதேசங்களில் மரமுந்திரிகை பயிர் செய்கை அதிக அளவில் விஸ்தரிப்பு செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கை தொடர்பாக விஷேட இடமாக புத்தளம் மாவட்டத்தை அறிமுகம் செய்ய முடிவதுடன் சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் மரமுந்திரிகை பயிர்ச்செய்கையின் பாரிய பரப்பானது அமைந்திருப்பது புத்தளம் மாவட்டத்தில் என்பதனால் நிறுவனம் என்ற வகையில் எமக்கு சாதகமானதாகும்.

தற்பொழுது இலங்கையினுள் மரமுந்திரிகை தொடர்பாக அபரிமிதமான கேள்வி காணப்படுவதுடன். இலங்கையில் தற்பொழுது உற்பத்தி செய்யப்படுகின்ற வருடாந்த உற்பத்தி அளவு 10,000 மெட்ரிக் தொன் இது அண்ணளவாக இருப்பதுடன் நிறுவனம் என்ற வகையில் நாம் அதற்கு பங்களிப்புச் செய்வது 0.8 சதவீத அளவில் மாத்திரமே ஆகும். இந்த அளவு 2020 ஆம் ஆண்டாகும் போது 1.5 சதவீதம் அளவில் அதிகரித்துக் கொள்வதற்கு நிறுவனத்திற்கு எதிர்கால திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டுக்கு முன்பாக சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்திற்குரிய அறுவடை வெளியக வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டதுடன் 2012 ஆம் ஆண்டு முதல் எங்களுக்குரிய அறுவடையினை எங்களுடைய உற்பத்தியாக பதப்படுத்தி சந்தைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் தம்பபண்ணி தோட்டத்தில் மரமுந்திரிகை பதப்படுத்தும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதுடன் அது பயன் உறுதியாகவும் மிகவும் நலன் தரும் வகையிலும் நடாத்திச் செல்வதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.

**மரமுந்திரிகை பதனிடல் கருத்திட்டத்தின் நோக்கங்கள்**

1. நிறுவனத்தின் தோமுடன் கூடிய மர முந்திரிகை உற்பத்திக்கான அதிக விலையை பெற்றுக்கொள்ளல்
2. பெறுமதி கூடிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துதல்
3. நிறுவனத்தின் உற்பத்திகளுக்கான சர்வதேச சந்தையில் இடம்பிடித்துக்கொள்ளல்
4. நிறுவனத்தின் உற்பத்திக்கான SLS/GMP/ISO தரச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல்

**மர முந்திரிகை பதனிடல் கருத்திட்டத்தின் மூலம் நிறுவனம் அடைந்து கொள்ள முயலும் எதிர்கால இலக்குகளாவன.**

1. நிறுவனத்திந் வருடாந்த பதப்படுத்தப்பட்ட மரமுந்திரிகை உற்பத்தியின் அளவை 5,000 Kg இலிருந்து 30,000 Kg ஆக அதிகரித்துக் கொள்ளல்
2. இதற்காக நிறுவன மட்டத்தில் மற்றும் வெளித்தரப்பினர்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளல்
3. ஏற்றுமதி சந்தைக்கு எமது பொருட்களை விற்பனை செய்தல்.
4. நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் வலையமைப்பை வியாபித்தல்
5. நுகர்வோருக்கான நல்ல தரமானதும் திருப்திகரமானதுமான உற்பத்திகளை வழங்குதல்

**தேங்காய் எண்ணெய் செயல்திட்டம் ( உற்பத்தி தகவல்கள் )**

புதிய உற்பத்தி கொள்கையின் பிரகாரம் முதலீட்டு நலன்கள், சந்தை நிலைமை, இடர் நிலமை பகுப்பாய்வு மற்றும் தொழிலாளர் உழைப்பு போன்ற காரணிகளினை கவனத்தில் கொண்டு தென்னை மற்றும் துணைப் பயிருடன் புதிதாக பயிர்கள் தொடர்பாக முன்னெடுப்புகள் செய்யப்பட்டுள்ளன.




பலுகஸ்வெவ தோட்டத்தில் காணப்படுகின்ற உயர் பண்பு சார் கொப்பராவினைப் பயன்படுத்தி உற்பத்தி செய்தல் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. எமது செயற்பணியாக இலங்கை மக்களின் சுகாதார நிலைமையை உயர்த்தும் முகமாக துப்பரவு செய்தல், பாதுகாத்தல் மற்றும் ஒரு வாடை கொல்லி நாசினிகள் அல்லாத நடை நடைமுறையின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற தாவர எண்ணெய் மற்றும் வெப்பச் சுட்டி எண்ணெய்க்கு பதிலாக இயற்கையான உயர் தரத்துடன் கூடிய தூய்மையான தேங்காய் எண்ணெயினை போட்டி விலையில் சந்தைக்கு அறிமுகம் செய்தலாகும்.

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் தேங்காய் எண்ணை உற்பதி விபரம் - 2016 நிறைவில்

**சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் எண்ணெய் உற்பத்தி தொடர்பான விபரங்கள் - 2016 முடிவில்**

| போத்தலின் பருமன் | போத்தல்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1,000 மி.லீ | 2,739 |
| 750 மி.லீ | 352 |
| 500 மி.லீ | 1,352 |
| 250 மி.லீ | 360 |

**மழை நீர் அறுவடை**







**மழை நீர் அறுவடை**

இடர்முகாமைத்துவ முன்னெடுப்பாக மற்றும் மண்ணின் ஈர தன்மை சதவீதத்தினை மேம்படுத்தும் முகமாக நீரை சேகரித்து கொள்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

## நிதி மீளாய்வு

### ஒரே கண்ணோட்டத்தில் நிறுவனத்தின் நிதிச் செயலாற்றுகை

| விடயம் | 2016 ரூபா. மில். | 2015 ரூபா. மில். | வேறுபாடுகள் (2015 - 2016) | | |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா. மில். | % | பிரதான காரணிகள் |
| வருமானம் | 383 | 399 | (16) | (4) | தேறிய விற்பனை சராசரிக் குறைவு மற்றும் உயர் இறுதி இருப்பு |
| விற்பனைக் கிரயம் | 234 | 250 | (16) | (6) | குறைவான ஆரம்ப இருப்பின் காரணமாகவும் உயர் இறுதி இருப்புத் தொகை காரணமாகவும் |
| ஏனைய வருமானம் | 66 | 80 | (14) | (18) | பெறுமதியானமர விற்பனை வருமானம் கிடைக்கப் பெறாமை |
| நிருவாகச் செலவீனம் | 103 | 106 | (3) | (3) | பெறுமானத்தேய்வுக்கான ஏற்பாட்டுக் குறைவு |
| ஏனைய செலவீனங்கள் | 9 | 13 | (4) | (30) | ஏனைய செலவீனங்களின் குறைவு |
| நிதி வருமானம் | 14 | 11 | 3 | 27 | நிலையான வைப்பு வட்டி வீத அதிகரிப்பு |
| நிதிச் செலவீனம் | 33 | 32 | 1 | 3 | மொத்த உள்நாட்டு உற்பத்திக் காரணிகளின் அதிகரிப்பின் காணரமாக ஜேஈடிபி சொத்தின் மீதான குத்தகை வட்டி அதிகரித்துள்ளது. |

### தெங்கு அறுவடை

2015 ஆம் ஆண்டின் 12.5 மில்லியன் தேங்காய்களுடன் ஒப்பீடு செய்யும் போது 2016 ஆம் ஆண்டில் 16.5 மில்லியன் தேங்காய்களை கம்பனி உற்பத்தி செய்தது. இது முன்னைய வருட தேங்காய் அருவடையுடன் ஒப்பீடு செய்யும் போது 32 சதவீது அதிகரிப்பாகும். எனினும், ஆண்டின் போதான தேறிய நிகர விற்பனை சராசரி 25/- ஆகும். இது முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது 17 சதவீத வீழ்ச்சியாகும்.




### வருமானம்

ஆண்டின்போதான நிகர விற்பனை சராசரி குறைவடைந்தமை மற்றும் உயர் இறுதி இருப்பின் காரணமாக ரூபா 399 மில்லியன்களிலிருந்து ரூபா 383 மில்லியன்கள் வரை வருமானம் குறைந்துள்ளது







### விற்பனைக் கிரயம்

முன்னைய ஆண்டின் போதான ரூபா. 250 மில்லியன்களுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வு ஆண்டுக்கான விற்பனைக் கிரயம் ரூபா. 234 மில்லியன்கள் ஆகும்.

| | 2016 | 2015 |
|---|---|---|
| **உற்பத்திக் கிரயம்** | **268** | **227** |
| - ஆரம்ப இருப்பு | 22 | 45 |
| - இறுதி இருப்பு | (56) | (22) |
| **விற்பனை கிரயம்** | **234** | **250** |

2015 ஆம் ஆண்டின் ரூபா. 227 மில்லின்களுக்கு எதிராக 2016 ஆம் ஆண்டுக்கான உற்பத்திக் கிரயம் ரூபா. 268 மில்லியன்கள் ஆகும். இது ரூபா. 41 மில்லின் அதிகரிப்பொன்றைக் காட்டுகின்றது. இந்த செலவீன அதிகரிப்புக்கான காரணங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

- 4/2016 ஆம் ஆண்டின் சட்டத்தின் பிரகாரம் (வரவு செலவு திட்ட முன்மொழிவு) 22%, இனால் ஊழியர் சம்பளங்கள் 2015 ஆம் ஆண்டுக்கு ரூபா. 87 மில்லியன்கள் அத்தோடு 2016 ஆம் ஆண்டுக்கான ஊழியர் சம்பளங்கள் ரூபா. 106 மில்லியன்கள் ஆகும்.

  4/2016 ஆம் ஆண்டின் சட்டத்தின் பிரகாரம் 2015.05.01 முதல் 2015.12.31 ஆம் திகதி வரையான கால எல்லைக்கான மதிப்பிடப்பட்ட ஊழியர்களுக்காக 2016 ஆம் ஆண்டில் சம்பள நிலுவை ரூபா. 8 மில்லியன் செலுத்தப்பட்டது.

- 2016 ஆம் ஆண்டில், சிவில் பாதுகாப்பு சேவை தொடர்பாக மேலதிக தொகையாக ரூபா. 13 மில்லியன்கள் நிறுவனத்தினால் செலவு செய்யப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டு சனவரி முதல் மாதாந்தம் தேங்காய் பறித்தல் அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ரூபா. 28 மில்லியன்களிலிருந்து ரூபா. 48 மில்லியன்கள் வரை அறுவடைக் கிரயம் அதிகரிக்கப்பட்டது. (ஒரு வருடத்திற்கு மேலதிகமாக 5 முறை தேங்காய் பறித்தல்)
- 2016 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டின் போது சாதகமற்ற காலநிலை நிலைமை காணப்பட்டமையின் காரணமமாக மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசங்களுக்கு மாத்திரம் வளமாக்கி விண்ணப்பப் படிவங்கள் அமுல் படுத்தப்பட்டமையின் காரணமாக 2015 முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா. 30 மில்லியன்களிலிருந்து ரூபா. 19 மில்லியன்களை வரை முதிர்வடைந்த மரங்களுக்கான வளமாக்கி விண்ணப்பப் படிவக் கிரயம் குறைவடைந்துள்ளது.
- எனினும் குறைவான ஆரம்ப இறுப்பு மற்றும் உயர் இறுதி இறுப்பு காரணமாக ரூபா. 250 மில்லியன்களிலி, இருந்து ரூபா. 234 மில்லியன்கள் வரை விற்பனைக் கிரயம் குறைவடைந்துள்ளது.

### மொத்த இலாபம்

2015 ஆம் ஆண்டின் ரூபா 148.7 மில்லியன்களுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வு ஆண்டுக்கான மொத்த இலாபம் 148.7 மில்லியன்கள் ஆகும். முன்னைய நிதி ஆண்டின் 37.2 சதவீதத்துடன் ஒப்பீடு செய்யும் போது நடைமுறை நிதியாண்டுக்கான மொத்த இலாப எல்லை 38.8 சதவீதமாகும்.




### ஏனைய செயற்பாட்டு வருமானம்

மரமுந்திரிகை, தேங்காய் மட்டை, அரி மரங்கள், கால் நடைகள், வயல்கள், இறந்த விழுந்த தென்னை மரங்கள் போன்றவற்றின் விற்பனையை உள்ளடக்கிய ஏனைய செயற்பாட்டு வருமானம் முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா. 80.3 மீல்லியன்கள் முதல் ரூபா 65.9 மில்லியன்கள் வரை 18 சதவீதத்தால் விழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த வருடத்தில் கம்பனி ரூபா. 24.5 மில்லியன் பயன்பாட்டு உயிரியல் சொத்துக்களை (பெறுமதிமிக்க அரி மரங்கள்) ஊடாக உழைத்துக் கொண்டது. எனினும் 2016 ஆம் ஆண்டில் அது ரூபா. 5.1 மில்லியன்கள் ஆகும். இது ஏனைய வருமானங்கள் குறைவடைவதற்கு தாக்கம் செலுத்தியுள்ள பிரதான காரணியாகும். (பெறுமத்தியான அரி மரங்களின் வருமானம் வீழ்ச்சி தொடர்பாக அதிகார சபைகளினால் உரிய பிரகாரம் அங்கிகாரம் கிடைக்கப் பெறாமையை குறிப்பிட முடியும்) ஏனைய வருமானங்களுக்குரிய விளக்கம் கணக்கீட்டுக் குறிப்பு இல 20 இல் காட்டப்பட்டுள்ளது.

### நிருவாக, ஏனைய செயற்பாட்டு செலவீனங்கள்

2015 ஆம் ஆண்டின் ரூபா. 106 மில்லியன்களிலிருந்து 2016 ஆம் ஆண்டில் ரூபா. 102 மில்லியன்கள் வரை குறைவடைந்துள்ளதுடன் இது 4 சதவீத வீழ்ச்சியாகும்.

2015 ஆம் ஆண்டின் ரூ. 13.4 மில்லியன்களுக்கு எதிராக 2016 ஆம் ஆண்டுக்கான ஏனைய தொழிற்பாட்டு செலவீனங்கள் ரூ. 8.6 மில்லியன்கள் ஆகும். இங்கு ரூ. 4.8 மில்லியன்கள் வீழ்ச்சியை வெளிப்படுத்துகின்றது.

### நிதி வருமானம்

2015 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது குறுங்கால வைப்பிலிருந்தான (நிலையான வைப்பு மற்றும் திறைசேரி உண்டியல்கள்) வட்டி வருமானத்தை நிதி வருமானம் வெளிப் படுத்துகின்றது. நிலையான வைப்புக்களின் வட்டி வீதம் அதிகரித்தமையின் காரணமாக குறுங்கால வைப்புக்கள் ரூபா. 10.7 மில்லியன்களிலிருந்து 14.1 மில்லியன்களாக அதிகரித்துள்ளன.

### நிதிக் கிரயம்

JEDB அறுதி உறுதி சொத்துக்கள் மீது அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட வட்டி மற்றும் எதிர்பாராத குத்தகை வாடகையை நிதிக் கிரயம் பிரதானமாக வெளிப் படுத்துகின்றது. 2016 ஆம் ஆண்டுக்குரிய கிரயம் ரூ. 32 மில்லியன்களாக இருப்பதுடன் முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது 3 சதவீத அதிகரிப்பாகும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான வருடாந்த அடிப்படையின் அதிகரிப்பாகும்




### தேறிய இலாபம்

முன்னைய வருட இலாபமான ரூபா. 81.4 மில்லியன்களுக்கு எதிராக 2016 திசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கம்பனி ரூபா 70.7 மில்லியன் தொகையை உழைத்துள்ளது. குறைவான தேறிய இருப்புச் சராசரிக்கு ஏற்ப இந்த குறைவு பகிர்வு செய்யப்படும்.

### பங்கிலாபங்கள்

அனேகமான அரச நிறுவனங்கள் அரச நிதியில் தங்கியிருப்பதுடன், சிலாபம் பெருந்தோட்ட நிறுவம் 2008 ஆம் ஆண்டு மே மாதம் மீண்டும் அரசாங்கத்திற்கு முகாமையைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் திறைசேரிக்கும், பொன்னான பங்கு உரிமையாளர்களுக்கும் ரூபா. 265 மில்லியன்களை பங்கிலாபமாக செலுத்தியுள்ளது.

2008 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை நிறுவனம் உழைத்த இலாபத்தை ஒப்பீடு செய்யும் போது, இது குறிப்பாக பாரிய தொகையாகும். இருந்த போதும், மொத்தமாக திறைசேரிக்கு செலுத்தப்பட்ட தொகை 1992 ஆம் ஆண்டு முதல் 2016 நிறைவடையும் வரை ரூபா. 426 மில்லியன்கள் ஆகும்.

### மனித வள சேவை அங்கிகாரம்

நிறுவனம் ஒன்றின் மிக முக்கியமான சொத்தாக மனித வளம் இருக்கின்றது என்பதை வெகுவாக புரிந்து கொண்டு, கம்பனியானது 2016 ஆம் ஆண்டில் ஊழியர்களுக்கான ஊக்கக் கொடுப்பனவாக ரூ. 14.5 மில்லியன்களை செலுத்தியுள்ளதுடன் இது முன்னைய வருடத்திலும் பார்க்க ரூ. 15.2 மில்லியன் அதிகரிப்பாகும். அத்தோடு இது ஒரு ஊக்க காரணியாகவும் உள்ளது.

இதற்கு மேலதிகமாக, 2016 ஆம் ஆண்டில் செயற்பாட்டு இலாபத்திலிருந்து ஊழியர்களுக்கு ரூ 7.8 மில்லியன்கள் செலுத்தப்பட்டதுடன், 1995 ஆம் ஆண்டில், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் பெருந்தோட்ட முகாமை கண்காணிப்பு பிரிவின் அங்கிகாரத்துடன் கம்பனி அறிமுகப் படுத்தியிருந்த திட்டத்திற்கு ஏற்ப 10 சதவீத ஊழியர் இலாப பங்காக செலுத்தப்பட்டது.

### பங்கு ஒன்றுக்கான உழைப்பு

முன்னைய வருடத்தின் ரூபா 3.93 மில்லியன்களுடன் ஒப்பீடு செய்யும போது 2016 ஆம் ஆண்டில் ரூ 3.48 மில்லியன்கள் ஆக காணப்பட்டது.




### மூலதன உழைப்பு மீதான திரும்பல் (ROCE) மற்றும் உரிமையாண்மை மீதான திரும்பல் (ROE)

மூலத உழைப்பு மீதான திரும்பல் 11 சதவீதத்திலிருந்து 10.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்ததுடன் முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது உரிமையாண்மை மீதான திரும்பல் 10 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இதற்கான காரணம் முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது இலாபத்தில் ஏற்பட்ட பிரதான குறைவாகும்.




### சொத்து அடிப்படை

நிதி வருட இறுதியில் கம்பனியின் சொத்து அடிப்படையாக ரூ. 1.278 மில்லியன்கள் பதிவு செய்யப்பட்டதுடன் இது முன்னைய வருடத்தையும் பார்க்க ரூ. 135 மில்லியன்கள் அதிகரிப்பாகும்.

| இருப்பு அடிப்படை | 2016 ரூபா. மில். | 2015 ரூபா. மில். |
|---|---|---|
| JEDB/SLSPC தோட்டத்தின் தரிசு நிலத்தின் குத்தகை உரிமை | 76 | 79 |
| JEDB/SLSPC தோட்டத்தின் குத்தகை ஆதன பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 1 | 2 |
| JEDB/SLSPC தோட்டத்தின் பௌதீக ரீதியான சொத்துக்களின் குத்தகை உரிமையாளர் | 27 | 31 |
| உயிரியல் சொத்துக்கள் (தோட்டத்தின் பௌதீக ரீதியான சொத்துக்களின் குத்தகை உரிமையாளர்) | 723 | 632 |
| நுகரக்கூடிய உயிரியல் சொத்துக்கள் | 42 | 37 |
| அறுதி உறுதி ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 97 | 105 |
| நடைமுஹ சொத்துக்கள் | 312 | 257 |
| **மொத்த சொத்துக்கள்** | **1,278** | **1,143** |

நிறுவனத்தின் சொத்துக்கள் தொகுதி பிரதானமாக உயிரின சொத்துக்களைக் கொண்டது. அது முதிர்வடையாத தென்னை மரங்கள், மரமுந்திரிகை தோட்டம் மற்றும் ஏனைய பல்லாண்டுப் பயிர்களை உள்ளடக்குகின்றது. அது மொத்த சொத்துக்களில் 3% ஆகும்.

### நடைமுறையல்லாச் சொத்துக்கள்

பிரதானமாக வைத்துக் கொள்ளப்பட்ட உயிரின விஞ்ஞான சொத்துக்கள் அதிகரித்தமையின் காரணமாக வருடத்தின் போது நடைமுறையல்லாச் சொத்துக்கள் 9 % ஆல் அதிகரித்துள்ளது. வைத்துக் கொள்கின்ற உயிரின சொத்துக்களின் அதிகரிப்பு நோக்கி புதிய பயிர்ச் செய்கைகள் / துணை பயிர்ச் செய்கைகளை உருவாக்குதல் தொடர்பாக முதலீடு செய்தல் மற்றும் தற்பொழுது நிலவும் முதிர்வடையாத பயிர்களைப் பராமரிப்பதற்குப் செய்யப்படும் செலவீனம் பிரதான காரணமாக உள்ளது.

2016 ஆம் ஆண்டின்போது நிறுவனம் தென்னைத் தோட்டம் / துணை பயிர் மற்றும் முதிர்வடையாத பயிர் பராமரிப்பு செய்தல் தொடர்பாக்க 1036 ஹெக்டயார் தொடர்பாக ரூபா. 86 மில்லியன் ரூபாக்களை முதலீடு செய்துள்ளது. எதிர்காலத்தில் இலாபத்தை உழைத்துக் கொள்வதற்காக நிறுவனத்திற்கு உள்ள இயலுமை இதன் ஊடாக தெளிவாகின்றது.

ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களில் ரூபா. 17 மில்லியன் தொகையை நிறுவனம் முதலீடு செய்துள்ளது. ( 2015 இல் - ரூபா. 18 மில்லியன்கள் )

**1. உரிமையாண்மை**

2015 ஆம் ஆண்டின் ரூபா. 854.9 மில்லியன்களிலிருந்து 2016 ஆம் ஆண்டில் ரூபா. 895.7 மில்லயன்கள் வரை 5% ஆல் அதிகரித்துள்ளது.

உரிமையாண்மை குறிப்பிடப்பட்ட மூலதனமான ரூபா. 200 மில்லியன்கள் மற்றும் ஒதுக்கமான ரூபா. 695.7 மில்லியன்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

**2. பங்குதாரர்களின் நிதி விகிதம்**

மீளாய்வு ஆண்டின் மொத்த சொத்தின் 70% கு சமமாக பங்காளரின் நிதி காணப்படுகின்றது.




**தொழிற்படு மூலதனம்**

தொழிற்படு மூலதனமானது 2015 இல் ரூபா. 202.1 மில்லியன்களிலிருந்து 2016 இல் ரூபா. 177.8 மில்லியன்களாக குறைவடைந்துள்ளது. இது பிரதான காரணமாக ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் திறைசேறிக்கான பங்குலாபச் செலுத்தல்கள் திகழ்கின்றன.

**நடைமுறை விகிதம்**

முன்னைய ஆண்டின் 4.7 தடவைகளுடன் ஒப்பீடு செய்யும் போது, மீளாய்வு ஆண்டில் 2.3 தடவைகளினால் குறைந்துள்ளமையின் காரணமாக நடைமுறை விகிதம் வீழ்ச்சிப் போக்கை வெளிப்படுத்துகின்றது. ஏனைய சென்மதிகள் மற்றும் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய பங்கிலாபம் போன்ற நடைமுறை பொறுப்புக்களின் அதிகரிப்பு இதற்கு பிரதானமாக இருக்கின்றது.

எனினும், ஆண்டுக்கான 2.3 என்ற நடைமுறை விதிதமானது நிறுவனத்தின் குறுங்கால நிதித் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு போதியளவாக இருக்கின்றது என நிறுவனம் திருப்தியடையும் வகையான பொருளுண்மையானதாக உள்ளது.




**காசுப்பாய்ச்சல்**

சென்ற ஆண்டில் உழைத்த ரூபா. 146.3 மில்லியன்களுக்க ஒப்பீடாக இந்த ஆண்டில் நிறுவனம் தனது செயற்பாட்டு நடவடிக்கைகளின் ஊடாக ரூபா. 90.6 மில்லியன் தொகையை நிகர நிதித் தொகையை உருவாக்கி உள்ளது. இந்த செயற்பாட்டு காசுப்பாய்ச்சலில் வீழ்ச்சி தொடர்பாக நிறுவனத்தின் பிரதான வருமானம் உழைக்கின்ற விடயமாக தேங்காயின் விலை குறைவடைவதன் காரணமாக வருமானம் குறைவடைதல் மற்றுமன்றி செலவீனம் அதிகரித்தமையைக் குறிப்பிட முடியும்.

கடந்த ஆண்டின் முதலீட்டு செயற்பாடுகள் தொடர்பாக நிகர காசுப் பாயச்சல் ரூபா. 99.9 மில்லியன்களுக்கு ஒப்பீடாக்க நடைமுறை ஆண்டில் முதலீட்டுச் செயற்பாடுகள் தொடர்பாக நிகர காசுப்பாய்ச்சல் ரூபா. 102.7 மில்லியன்களாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

மீளாய்வு ஆண்டின் போது ரூபா. 86.3 மில்லியன்கள் புதிய/துணை பயிர் செய்கை தொடர்பாகவும் ரூபா. 16.3 மில்லியன்கள் ஆதனம், பொறி, மற்றும் உபகரணம் தொடர்பாகவும் முதலீடு செய்யப்பட்டுள்ளது. முதலீட்டு செயற்பாடுகள் தொடர்பாக நிகர காசுப்பாய்ச்சல் வெளிச் செல்லல் தொடர்பாக இறுதியாக இது காரணமாக அமைந்துள்ளது.

மொத்த பெறுபேறாக கால எல்லையின் போது நிறுவனத்தின் காசு மற்றும் காசுக்கு சமமான விடயங்கள் தொடர்பான நிகர தாக்கமான ரூபா. 14 மில். பாய்ச்சலை குறிப்பிட முடியும். எனினும், மீளாய்வு ஆண்டின் முடிவின் போது காசு மற்றும் காசுக்கு சமமான விடயங்கள் ரூபா. 145.9 ஆகும். இது இலங்கை வங்கியில் உள்ள நிலையான வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள், காசு மற்றும் வங்கி நிலுவைகளை உள்ளடக்குகின்றன.




**2016 ஆம் ஆண்டில் தோட்ட தானிய பயிர் பங்களிப்பு**

| தோட்டம் | தானிய விதை |
|---|---|
| சிலாபம் | 2,279,409 |
| பழுகஸ்வெவ | 5,029,634 |
| தம்பன்னி | 2,186,778 |
| பிங்கிரிய | 2,798,682 |
| திவுலபிடிய | 1,735,347 |
| மாதம்பே | 2,492,440 |
| மொத்தம் | **16,522,290** |



# நிறுவனத்தின் ஆளுகை

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது, நேர்மை, நிறுவனரீதியான நடுநிலைப் போக்கு, வெளிப்படைத்தன்மை, நம்பகத்தன்மை ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுகின்றது. இது நிறுவனத்தில் ஆர்வம் கொண்டுள்ளவர்களுடன் சிறப்பான தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்குப் பெரும் பங்களிப்புச் செய்தது.

நியதிச்சட்டத் தேவைப்பாடுகள் மற்றும் நிறுவனத்தின் ஸ்தீரத்தன்மை என்பனவும் வர்த்தகப் பெறுமதி அதிகரிக்கும் முறையில் உருவாக்கப்பட்ட கொள்கைகள், செயலொழுங்குகள், நடைமுறைகள், சரியான கட்டமைப்புக்கள் மற்றும் தகவல்கள் என்பன மேற்படி தொடர்புகளை உறுதிப்படுத்துவதில் சிறந்த பங்களிப்புச் செலுத்தின.

### பனிப்பாளர் சபை உறுப்பினர்கள்

நிறுவனத்தின் பணிப்பாளர் சபை நிறுவனத்தின் செயலாற்றுகைக்குப் பொறுப்பாகவுள்ளதுடன் இறுதியில் அது தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கும் கடமைப்பட்டுள்ளது.

### பொறுப்பு

அடிப்படைக் கொள்கைகளையும் உபாய முறைக் குறிக்கோள்களை உருவாக்குவதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் பணிப்பாளர் சபை கடமைப்பட்டுள்ளது. நிறுவனத்தின் நிதித் தகவல்களின் நம்பகத் தன்மை மற்றும் உள்ளக நிர்வாக முறையின் வெற்றி என்பவற்றுக்கான இறுதிப் பொறுப்பையும் பணிப்பாளர் சபை கொண்டுள்ளது.

### ஆக்க அமைவு

2016 இல் பணிப்பாளர் சபையானது பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் நிறைவேற்று அதிகாரி உட்பட 7 பணிப்பாளர்களை கொண்டுள்ளது.

### பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மாதாந்தம் இடம்பெறுகின்றன. நிறுவனத்தின் உபாய முறை வழிமுறைகள், வருடாந்த வரவுசெலவுத் திட்டம், அனைத்துச் செயற்பாடுகளினதும் முன்னேற்றம், மூலதனச் செலவினங்கள் என்பன இக்கூட்டங்களின் போது மீளாய்வு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு கூட்டத்தை நடாத்துவதற்கு நியாயமான ஒரு காலப்பகுதிக்கு முன்னர் அது பற்றிய விபரங்கள் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டில் 17 தடவைகள் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

### கணக்காய்வு செயற்குழு

நிறுவனத்தின் கணக்காய்வுக் குழுவில் நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்கள் இருவருடன் பணிப் பாளர்கள் மூவர் அங்கம் வகிக்கின்றனர்.

நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளரான திரு. பீ.பீ.எஸ்.சீ. நொனிஸ் அவர்கள் கணக்காய்வுக் குழுவின் தலைவராகக் கடமையாற்றுவதோடு. இவ்வருடத்தில் 04 மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இக்குழுவின் மேற்பார்வையாளராக கணக்காய்வாளர் தலைமையகத்தின் அலுவலர் ஒருவர் பங்கேற்றுள்ளார்.

நிறுவனத்தின் தலைவர்/பிரதம நிறைவேற்று அலுவலர், உள்ளகக் கணக்காய்வாளர், சிரேட்ட கணக்காளர் ஆகியோர் இக்கூட்டங்களில் அழைப்பின் பேரில் பங்கேற்கின்றனர்.

### சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதல்

சங்கத்தின் நியதிச் சட்டம், சங்கத்தின் யாப்பு மற்றும் அரசாங்கத் தொழில் முயற்சிகள் தொடர்பில் ஏற்புடையதாகும் ஏனைய சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்கிய வகையில் செயற்படுவதற்கு பணிப்பாளர் சபை இயன்றவரை அனைத்து முயற்சிகளையும் செய்கின்றது.

இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கும் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் தேவைகளுக்கு இணங்கியதாக நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குப் பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுத்துள்ளது

## அபாய முகாமைத்துவம்

விஷேடமாக நிறுவனமானது மாறிவருகின்ற சூழலொன்றை கொண்டுள்ளதோடு சூழலில் தளம்பல்கள் மற்றும் வெவ்வேறு மட்டங்களில் அபாயங்கள் கண்டறியப்பட்டுள்ளதோடு காலநிலை மட்டங்கள் மற்றும் சந்தை தளம்பல் நிலைகள் மீதான உயர்ந்த அபாய நிலையை காட்டுகின்றது. எமது அபாய முகாமைத்துவ செயற்பாடு மூலம் அறிவுடனும் முன்நோக்குடனும அபாயங்களை தாக்குபிடிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதை நோக்காகக்கொண்டுள்ளது.

**அபாயக்கட்டுப்பாட்டு உபாய முறைகள்**

| அபாயக் காரணி | அபாயம் பற்றிய மதிப்பீடு | ஆபாயக் கட்டுப்பாட்டு உபாயமுறைகள |
|---|---|---|
| காலநிலை மாற்றங்கள் | தெங்கு, மரமுந்திரிகை மற்றும் ஏனைய பெரும்போக பயிர்களின் விளைச்சல்கள் பல மாதங்களாக தொடர்கின்ற எதிர்பாராத மற்றும் நீண்ட வரட்சியின் காரணமாக மோசமான காலநிலை நிலைமைகளினால் எதிர்பாராத வித தளம்பல் நிலைமையை கொண்டுள்ளன. | பாரிய கிடங்குகளில் புதைக்கப்பட்ட சிதைவுகளின் வழியினூடாக அதிகரித்த மண் ஈரலிப்புத்தன்மை பாதுகாப்பு பணியை பொறுப்பேற்றலும் பெருந்தோட்ட மண்ணினுள் மழை நீரை சேகரிப்பதற்கான அதிக வடிகால்களும் அதிக நிழலுக்காக, உயரம் குறைவான கிளிசீரியா போன்ற மரங்களை நடுதலும் காப்பு பயிர்களான பூரேரியா போன்ற மரங்களும் நடப்பட்டு வருகின்றன.<br><br>மழை நீரை சேமிப்பதற்காக அதிக தேக்கங்களை புனரமைக்கப்படுகின்றன. அத்தகைய சேகரித்த நீர் தேக்கங்களின் அருகிலுள்ள மண்ணின் ஈரத்தன்மையை பேணுவதனுாடாக பனை மரங்களின் வேர்களுக்கு நீரூட்டுதலின் பின்னர் நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்தப்பட முடியும் |
| உற்பத்திகளுக்கான சேதம் | 50 வயதுக்கு மேற்பட்ட முதிர்ந்த நிலை தாவரங்களாக மாறி பயனற்ற வயதுகூடிய மற்றும் பலனற்றதாக அதிக எண்ணிக்கையான விகிதம் மாறியிருப்பதன் காரணத்தினாலும் இந்நிலை ஏற்பட்டுள்ளது.<br><br>இதற்கு மேலதிகமாக ஏதாவது கண்ணுக்கு புலப்படாத நோய்களும் பனை மரங்களுக்கும் பெருந்தோட்டங்களுக்குமான இயற்கை காரணங்களுமாகும் | வயது முதிர்ந்த பனை தொகையை பதிலீடுசெய்வதற்கு புதிய தோட்டங்கள் மற்றும் தோட்டங்களை பொறுப்பெடுத்தல்<br><br>பலுகஸ்வெவ தோட்டம் மற்றும் திவுலபிடிய தோட்டங்களில் இரண்டு பூச்சி நாசினி ஆய்வுகூடங்களை தாபித்தல். |
| பொருள் சுழற்சி | குறைவான விலைகளும் நிலையற்ற விற்பனைகள், தெங்கு நுகரத்தக்க பொருட்களுக்கான கேள்வில் வீழ்சசியை ஏற்படுத்தி பதிலீடுகள் அதிகரித்தமை, நுகர்வோரின் கேள்வியில் தங்கியியருத்தல் என்பன மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் அதிக எண்ணிக்கையான தேங்காய்கள் தோட்டங்களில் வெறுமனே வீழ்ந்து கிடக்கின்ற நிலைமையை உருவாக்கும்.<br><br>நுகர்வோர் அதிகம் கவரப்பட்டுள்ள பாம் எண்ணெய் போன்ற நெருங்கிய பதிலீடுகளின் போட்டி, குறைந்த விலை என்பனவும் கேள்வி மற்றும் விலைகளில் தாக்கம் செலுத்துகின்றன. | கொழும்பு தெ.அ.அ ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படாத தேங்காய்கள் வாராந்த தெ.அ.அ தேங்காய் ஏல விற்பனைக்கு மேலதிகமாக தலைமை அலுவலகத்திலுள்ள "பொல் பொல" என பெயரிடப்பட்ட இரு வாரங்களுக்கு ஒருமுறை விற்பனை செய்யும் நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படுகின்றது.<br><br>பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களை தயாரிப்பதற்கு கவனம் செலுத்துதல்<br><br>இந்த இரண்டு ஏல விற்பனைகளிலிலும் விற்கப்படாத காய்கள் கொப்பராவாக மாற்றப்படுவதேதாடு அதன் ஒரு பகுதி ஏலவிற்பனை மூலமும் ஏனைய அல்லது பிரதான பகுதி பலுகஸ்வெவ எண்ணெய் ஆலையில் தூய எண்ணெய்யாகவும் மாற்றப்படுகின்றது |
| மூலதன முதலீட்டு ஆபத்து | ஏதிர்பார்த்த இலாபம் கடைக்கப் பெறாமை மற்றும் முதலீட்டின் மீது எதிர்பார்த்த வருமானம் கிடைக்கப் பெறாமை போன்ற அபாயங்கள் | முதலீட்டு மட்டம் மற்றும் மீளச்செலுத்தவேண்டிய தொகை என்பவற்றின் அடிப்படையிலான மூலதன செலவினத்திற்கு கடுமையான அங்கீகார நடைமுறையை பின்பற்றுதல். |

| அபாயக் காரணி | அபாயம் பற்றிய மதிப்பீடு | ஆபாயக் கட்டுப்பாட்டு உபாயமுறைகள |
|---|---|---|
| முகாமைத்துவ ஆளணி | ஊக்குவித்தல் குறைவாக காணப்படுகின்றமை, தொழில் பற்றிய குறைவான அறிவு என்பவனுவும் குறைந்த விளைவுப்பெருக்கம் மற்றும் வெளியிடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தகின்றன.<br><br>சிறந்த ஊதியம் அல்லது உயர் பதவிகளுக்கு ஏனைய கைத்தொழில்களுக்கு அல்லது கம்பனிகளுக்கு ஊழியர்கள் செல்கின்றமை | பொறுப்பேற்ற செயலமர்வுகள் மற்றும் பயிற்சி பாடநெறிகள்<br><br>நிதிசார் ஊக்குவிப்புகள் மற்றும் நலனோம்புகை நடவடிக்கைகள் என்ற வகையில் ஊழியர் நலன்களை மேம்படுத்தல்<br><br>வழமையாக கலந்துரையாடல்கள் ஊடாக தொழிற் சங்கங்களுடன் ஆரோக்கியமான தொடர்புகளை பேணுதல்.<br><br>ஊழியர்களுக்கு உரித்தான நலன்கள் தொடர்பில் அனைத்து ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுடனும் இயைந்து செல்வதை உறுதிப்படுத்தல்.<br><br>சாத்தியமான வகையிலும் பொருத்தப்பாட்டுக்கு தக்கதாகவும் சிரேட்ட பதவிநிலைகளுக்கு உள்ளிருந்து பதவிஉயர்வுகளை உறுதிப்படுத்தல் |
| ஆதன ஆபத்துகள் | தீ, கொள்ளை, இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் சீர்குலைவு.<br><br>மின்னல்:. வேள்ளம், கிருமிநாசனிகள் விலங்குகள் மற்றும் காரணிகளினால் ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தங்கள் | ஆதனங்களுக்குமான விரிவான காப்புறுதி காப்பை பெற்றுகொள்ளுதல்.<br><br>ஒரு இடத்திலிருந்து மற்றுமொரு இடத்திற்கு ஆதனங்களை நகர்த்துவது தொடர்பாக கடுமையான நடைமுறைகளை பின்பற்றுதல்.<br><br>நிலங்களை சுற்றிவர தீ பரவாமல் இருப்பதற்கு தீ இடைவெளி மற்றும் ஏனைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தாபித்தல்.<br><br>தடுப்பு பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அடிக்கடி மேற்கொள்ளல்<br><br>நல்ல விவசாய முறைகளை பின்பற்றுதல |
| புகழுரு ஆபத்து | வேலைவாய்ப்பு, வியாபாரம் மற்றும் ஒரு தாபனத்தின் ஏனைைய நடைமுறைகள் தொடர்பான கோட்பாடுகள், நடைமுறைகள், தராதரங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றிய அறிவு போதியதாக இன்மை.<br><br>உற்பத்திகள் நுகர்வோர் அல்லது சந்தை கேள்விகள் மற்றும் தராதரங்களை அடையாமை.<br><br>செயலாற்றுகை, இலக்குகள் மற்றும் தராதரங்கள் தொடர்பான குறைவாகன அறிவு. | ஊழியர்கள், வங்கியாளர்கள், வாடிக்கையாளர்கள்,ஒழுங்குறுத்துகையாளர்கள் போன்ற பல்வேறு பங்குதாரர்களுடன் வினைத்திறன்மிக்க தொடர்பாடலை உறுதிப்படுத்தல்.<br><br>உற்பத்தி மற்றும் தயாரிப்பு செயன்முறை மற்றும் உடன்பாட்டு தராதரங்களில் தரத்தை உறுதிப்படுத்தல்.<br><br>நிறுவனத்தின் செயலாற்றுகையை தொடராக இலக்குப்படுத்தப்பட்டதாக இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு மாதாந்த அடிப்படையில் வரவு செலவுத்திட்ட செயன்முறை மற்றும் வரவு செலவுத்திட்ட கட்டுப்பாட்டு பொறிமுறை என்பவற்றை உரிய முறையில் கொண்டிருத்தல்<br><br>பொருட்கள் சேவைகளின் உற்பத்தி திறன் பற்றி நுகர்வோர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளல். |

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது, 2003 ஜுன் 2 ஆம் திகதிய நல்லாட்சிக்கான அரச தொழில்முயற்சிகளுக்கான வழிகாட்டல்கள் மற்றும் பொதுத்தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2010 டிசம்பர் 14 ஆம் திகதிய PED/55 ஆம் இலக்க சுற்று நிருபம் ஆகியவற்றின் பிரகாரம் தாபிக்கப்பட்டதாகும்.

2016 ஆம் ஆண்டு கீழ்காட்டப்பட்ட திகதிகளில் 4 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் இடம்பெற்றதோடு 182 கணக்காய்வு விசாரணை அறிக்கைகள் குறிப்பிட்ட கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் தினங்கள | கலந்தாராய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கணக்காய்வு மற்றும் புலனாய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 30 மார்ச் 2016 | 47 |
| 17 மேய் 2016 | 48 |
| 29 செப்டெம்பர் 2016 | 72 |
| 22 டிசம்பர் 2016 | 15 |

கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்கள் பின்வருமாறு. (29.09.2016 முதல்)

| அலுவலர்களின் பெயர்கள் | பதவி |
|---|---|
| 1. திரு. பீ.பீ.எஸ்.சீ நொனிஸ் | தவிசாளர் - கணக்காய்வுக்குழு - சி.பெ.நிறுவனம் |
| 2. திரு. ஏ. லக்கதாஸ் | உறுப்பினர் - கணக்காய்வுக்குழு - சி.பெ.நிறுவனம் |
| 3. திரு. ஆனந்த புஷ்பகுமார | உறுப்பினர் - கணக்காய்வுக்குழு - சி.பெ.நிறுவனம் |
| 4. கணக்காய்வாளர் தலைமையகம் | கணக்காய்வுக் குழுவின் மேற்பார்வையாளர் - சி.பெ.நிறுவனம் |

முன்னைய கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்கள் பின்வருமாறு. (29.09.2016 வரை)

| அலுவலர்களின் பெயர்கள் | பதவி 28.09.2016 வரை |
|---|---|
| 1. திரு. எம்.ஆர்.வீ.ஆர் மீபுர | தவிசாளர் - கணக்காய்வுக்குழு |
| 2. திரு. எச்.எம்.என்.சீ. ஹேரத் | உறுப்பினர் - கணக்காய்வுக்குழு |
| 3. திரு. ஐயர் மற்றும் திருவாளர்கள் - வெளிக் கணக்காய்வாளர்கள் | கணக்காய்வுக் குழுவின் மேற்பார்வையாளர் - சி.பெ.நிறுவனம் |

## பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

சிலா / பெருந்தோட்ட நிறுவனத்தின் 2016 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றினையும் ஆண்டறிக்கையையும் நிறுவனம் சார்பாக சமர்ப்பிப்பதில் பணிப்பாளர் சபை பெருமகிழ்ச்சி அடைகின்றது.

### சட்ட நிலை

1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பகிரங்க கம்பனிகளுக்குள் அரச உடைமை வியாபார பொறுப்பேற்றல் சட்டம் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனங்களின் மாற்றத்திற்கமைய 18 யூன், 1992 ஆந் திகதி 719/15 ஆம் இலக்க அதி விசேட வர்த்த மானியினால் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டுள்ள அரசாங்க உடைமையாக்கப்பட்ட கம்பனி. புத்தளம் மாவட்டத்தினுள் JEDB (IV) இனால் உடைமையாக்கப்பட்டுள்ள எல்லா தோட்டங்களையும் உள்ளடக்குகின்ற எல்லா பயிர்ச்செய்கை சொத்துக்கள், அதி விசேட வர்த்தமானிக்கமைய ஊீடு இற்கு அளிக்கப்பட்டுள்ளதுடன் குத்தகை ஒப்பந்தங்களின் எண்ணிக்கைக்கமைய 53 ஆண்டுகளுக்காக JEDB மற்றும் CPL இற்கிடையில் குத்தகை ஒப்பந்தங்கள் பின்னர் கைசாத்திடப்பட்டது.

நிறுவனத்தின் பதிவுசெய்யப்பட்ட பிராதான அலுவலகம் இல. 165, புத்தளம் வீதி, சிலாபம் மற்றும் இல. 191, ஜே.ஆர். ஜயவர்தன கேந்திரம், தர்மபால மாவத்தை, கொழும்பு 07 இலும் அமைந்துள்ளது. தோட்டங்கள் புத்தளம், குருணாகலை, கம்பஹா மாவட்டங்களில் அமைந்துள்ளன.

கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறு 06 தோட்டங்களின் கீழ் பரிபாளிக்கப்படுகின்றது.

- பளுகஸ்வெவ தோட்டம்
- சிலாபம் பிரதேச பெருந்தோட்டம்
- தம்பபன்னி பிரதேச பெருந்தோட்டம்
- திவுலபிட்டிய பிரதேச பெருந்தோட்டம்
- பிங்கிரிய பிரதேச பெருந்தோட்டம்
- மாதம்பை பிரதேச பெருந்தோட்டம்

### பிரதான செயற்பாடுகள்

சிலா/பெருந்தோட்ட நிறுவனத்தின் பிரதான செயற்பாடபனது பயிர்ச்செய்கை, தென்னை உற்பத்தி மற்றும் விற்பனை, மரமுந்திரிகை, ஏனைய விவசாய உற்பத்தி மற்றும் பாற்பண்ணை.

### நிதிக்கூற்று

36 தொடக்கம் 66 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களானவை 24 ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினரால் அங்கீகரிக்கப்பட்டது.

### கணக்காய்வாளரின் அறிக்கை

கணக்காய்வாளர் தலைமையகத்தின் கணக்காய்வாளர் கூற்றானது நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களில் பக்கம் 33-35 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் ஏற்று நடை முறைப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பக்கம் 40-50 களில் இணைக்கப்பட்டுள்ளன. அத்துடன் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும்போது ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் எதுவுமில்லை.

### தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

எதிர்காலத்தில் அதன் இயக்கங்களைத் தொடர்வதற்கு போதிய வளங்களை கம்பனி கொண்டுள்ளதையிட்டு பணிப்பாளர் சபையானது திருப்தியடைகின்றது. இதற்கமைய நிதிக்கூற்றுகள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுக்கு அமைவாகத் தயாரிக்கப்படுகின்றன.

### பணிப்பாளர் சபை

2016ஆம் ஆண்டில் நிறுவனத்தின் பணியாற்றிய பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் - 2016

| | |
|---|---|
| திரு. வீ.கே.சீ. ஹேரத் (14.07.2016 இலிருந்து) | தலைவர் |
| திரு. எம்.கே.பீ. செனவிரத்ன (08.05.2015 இலிருந்து) | நிறைவேற்று பணிப்பாளர் |
| திரு. பீ.பீ.எஸ்.சீ. நொனிஸ் (05.09.2016 இலிருந்து) | பணிப்பாளர் / திறைசேரி பிரதிநிதி |
| திரு. ஏ லக்கதாஸ் (19.05.2016 இலிருந்து) | பணிப்பாளர் |
| திரு. கே.ஜீ.ஏ புஷ்பகுமார (14.07.2016 இலிருந்து) | பணிப்பாளர் (செயற்பாட்டு அதிகாரியாக 14.07.2016 வரை) |
| திரு. எச்.எம்.என்.சீ. ஹேரத் (20.03.2015 இலிருந்து) | பணிப்பாளர் |

01.01.2016 இலிருந்து 31.12.2016 வரை காலப்பகுதிக்குள் நீங்கிய பணிப்பாளர்கள்

| | |
|---|---|
| திரு. ரவீந்திர ஹேரத். | தலைவர் (25.01.2016 வரை) |
| திரு. எம்.ஆர்.வீ.ஆர் மீபுர | (பணிப்பாளர்/திறைசேறி பிரதிநிதி) (05.09.2016 வரை) |
| திரு. டீ.எம்.எல் பண்டாரநாயக | பணிப்பாளர் (26.04.2016 வரை) |
| திரு. எஸ்.எம்.ஏ புன்னிய குமார | பணிப்பாளர் (14.07.2016 வரை) |

### கணக்காய்வுக் குழு

சபையின் பின்வரும் பணிப்பாளர்கள் கணக்காய்வுக் குழுவில் கடமையாற்றி வருடத்தின்போது நான்கு மதிப்பீடுகளை நடத்தினர்

### கணக்காய்வுக் குழு - 2016 (29.09.2016 இலிருந்து)

| | |
|---|---|
| திரு. பீ.பீ.எஸ்.சீ. நொனிஸ் | தலைவர் (AMC) |
| திரு. ஏ லக்கதாஸ் | உறுப்பினர் (AMC) |
| திரு. கே.ஜீ.ஏ புஷ்பகுமார | உறுப்பினர் (AMC) |
| கணக்காய்வாளர் தலைமையகம் | கண்காணிப்பாளர் (AMC) |

### முன்னால் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள். (29.09.2016 வரை).

| | |
|---|---|
| திரு. எம்.ஆர்.வீ.ஆர் மீபுர | தலைவர் (AMC) |
| திரு. எஸ்.எம்.ஏ புன்னிய குமார | உறுப்பினர் (AMC) |
| திரு. எச்.எம்.என்.சீ. ஹேரத் | உறுப்பினர் (AMC) |
| திருவாளர். ஐயர் மற்றும் கம்பனி (வெளிக் கணக்காய்வாளர்கள்) | கண்காணிப்பாளர் |

#### செயல் நிறைவேற்றுகை மீளாய்வு

ஆண்டின் போது நிறுவனத்தில் செயல் நிறைவேற்றுகை பற்றிய மீளாய்வும் முக்கியமான முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் தலைவரின் மீளாய்வு மற்றும் முகாமைத்துவ மீளாய்வின் கீழ் வழங்கப்பட்டுள்ளன

### வருமானம்

2016 ஆம் ஆண்டுக்கான நிறுவனத்தின் வருமானம் ரூபா. 383 மில். (2015 - ரூபா. 399 மில்.) ஆண்டுக்கான ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா. 66 மில். ஆண்டுக்குள் ஈட்டப்பட்ட வட்டி வருமானமானது ரூபா. 14 மில். இது தொடர்பான தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நிதிப் பெறுபேறு

நிறுவனத்தின் வரிக்கு பின் இலாபமானது 70.7 மில். ஆகும். (2015 - ரூபா. 81.4 மில்) நிதிப் பெறுபேறுகள் தொடர்பான தகவல்கள் முற்றடக்க வருமானக் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நிலையான சொத்துக்கள்

2016 ஆம் ஆண்டில் நிறுவனமானது ரூபா. 86 மில். (2015 - ரூபா. 87 மில்) கீழ் / புதிய பயிர்ச்செய்கையில், முதிர்வுறாத பயிர்ச்செய்கைகள் முகாமைத்துவத்திலும் மற்றும் ரூபா. 17 மில். களை ஆதனம், பொறி, உபகரணங்களிலும் முதலீடு செய்தது. (2015 – ரூபா. 18 மில்).

நடைமுறை அல்லாத சொத்துக்களில் தேறிய புத்தகப் பெறுமதியானது (ஆதனம், பொறி, உபகரணங்கள், குத்தகை உரிமை, உயிரியல் ஆதனங்கள் etc…) 2016 இல் ஐந்தொகை தினத்தில் ரூபா. 966 மில். (2015 - ரூபா. 886 மில்) ஆகும். இது தொடர்பான தகவல்கள் குறிப்புக்களில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### குறுங்கால முதலீடுகள்

நிறுவனத்தின் குறுங்கால முதலீடுகளாவன 2015 ஆம் ஆண்டின் ரூபா. 152.6 மில்லியன்களுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா. 140.8 மில்லியன்களாகும். இம்முதலீடானது இலங்கை வங்கியின் நிலையான வைப்பு ரூபா. 112.8 மில்லியன்களையும் ரூபா. 28 மில்லியன்கள் திறைசேறி உண்டியல்கள்களையும் உள்ளடக்கி உள்ளது.

### ஒதுக்கங்கள்

31.12.2016 இல் நிறுவனத்தின் ஒதுக்குகனை பிரதிநிதித்துவப்படுத்தி நிறுத்தி வைத்த இலாபங்கள் ரூபா. 633.8 மில. மற்றும் தேக்கு மர ஒதுக்குகள் 61.8 மில்லியன்களும் ஆகும்.

ஒதுக்கல்களில் நகர்வுகளும் ஆக்கக்கூறுகளும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உரிமையாண்மை மாற்றல் கூற்றுக்களின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளன.

### கூறப்பட்ட மூலதனம்

31.12.2016 இல் மொத்த கூறப்பட்ட மூலதனமாக ரூபா. 200,000,010. இது சாதாரண பங்குகள் 20,000,001 சாதாரண பங்குகள் உட்பட பொன்னான கங்கொன்றையும் உள்ளடக்கியுள்ளது. வருடத்துக்கும் பங்கு வழங்கள்கள் எதுவும் இடம்பெறவில்லை.

### மூலதனக் கடப்பாடுகளும் வருநிகழ்வான பொறுப்புக்களும்.

வருநிகழ்வான பொறுப்புக்கும் மூலதனக் கடப்பாடுகளும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் இறிப்பு 27 இல் விபரிக்கப்பட்டுள்ளன.

### ஐந்தொகை திகதிக்கு பின்னரான நிகழ்வுகள்.

ஐந்தொகை திகதிக்கு பின்னர் நிறுவனத்தில் பொருள் ரீதியான தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு புறம்பாக வேறெந்த நிகழ்வுகளும் இடம்பெறவில்லை.

### ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் ஆர்வங்கள்

இறிப்பு இல 26 இல் குறிப்பிட்டுள்ளதை தவிர நிறுவனங்களுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் நேரடியான அல்லது மறைமுகமான ஆர்வங்களை கொண்டிறுக்கவில்லை.

### பணிப்பாளர்களின் பங்குகள்

நிறுவனத்தின் பணிப்பாளர்களோ அல்லது அவர்களின் வாழ்க்கை துணையினரோ பங்குகள் எதனையும் வைத்திருக்கவில்லை.

### தொழில்வாய்ப்பு

நிறுவனமானது வேலைவாய்ப்பு உள்ளிட்ட அதனுடன் தொடர்புடைய தெரிவுசெய்தல், பயிற்சி, பதவி உயர்வு, ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆகியவற்றில் சமமான வாய்ப்பு கொள்கையினை நடைமுறைப்படுத்தி வருவதுடன் நிறுவனத்தின் தெறிவுகள் யாவும் நிறுவனத்தின் நீடுறுதியான நன்மையை கருத்தில் கொண்டு அரசாங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுக்கு விதிகளுக்கு ஏற்ப தகுதியின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. நிறுவனம் பால்நிலை, இனத்துவம், சமயம், திருமண அந்தஸ்த்து அரசியல் அபிப்பிராயம் மற்றும் உடல் ரீதியான அங்கவீனம் ஆகியவற்றினை கருத்தில் கொள்ளாது நிறுவனத்தின் நலனுக்கு இயைபுற்று சமமான வாய்ப்பு எனும் கொள்கையை பின்பற்றி வருகின்றது.

### நியதிச்சட்ட கொடுப்பனவு

பனிப்பாளர்கள் அவர்களது அறிவுக்கு எட்டிய வகையில் நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய சகல வரிகள், தீர்வைகள், கொடுப்பனவுகள், நிறுவனத்தின் ஊழியர்கள் சார்பில் அவர்களுக்காக செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் வரிகள் போன்றவற்றையும் ஏனைய நிறுவனங்களினால் செலுத்தப்பட வேண்டிய சகல நியதிச்சட்ட கொடப்பனவுகளையும் ஐந்தெகை திகதியில் உள்ளவாறாக செலுத்தியுள்ளனர், அல்லது பொருத்தமானவாறாக அதற்கான ஏற்பாடுகளை வழங்கியுள்ளனர்.

### கணக்காய்வாளர்கள்

2016 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் மூலம் கணக்காய்வு செய்யப்பட்டது.

**வருடாந்த பொதுக்கூட்டம்**

வருடாந்த பொதுக்கூட்டமானது இல. 02, யோர்க் தெரு, கொழும்பு 01இல் அமைந்துள்ள “கிரேன்ட் ஓரியன்டல் ஹோட்டலில்” 19.12.2017 அன்று பி.ப 1.30 அளவில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வருடாந்த பொதுக்கூட்டத்துக்கான அறிவித்தலும் பெறுகைப்படிவமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பனிப்பாளர் சபைக்காகவும் அதன் சார்பிலும்

……………………….. ………………………………

திரு.வீ.கே.சீ. ஹேரத் திரு .எம்.கே.பீ. செனவிரத்ன

தலைவர்/பி.நி. அதிகாரி நிறைவேற்று பனிப்பாளர்

………………………………………

பெரு நிறுவன ஆலோசனை சேவைகள் தனியார் நிறுவனம்

செயலாளர்கள் -

சிலா/ பெருந்தோட்ட நிறுவனம்

கொழும்பு.

## பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிதி அறிக்கைப்படுத்தல் தொடர்பில் தாம்

கொண்டுள்ள பொறுப்பை சிலாபம் பெருந்தோட்டக் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை ஏற்றுக்கொள்கின்றது. நிறுவனத்தின் கணக்காய்வாளரான கணக்காய்வாளர் தலைமையகம், பொறுப்புக்கள் தொடர்பில் தங்களது அறிக்கையில் சுருக்கமாக விளக்கியுள்ளனர்.

இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள 2016 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடையும் வருடத்திற்கான கணக்குகளை இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு இணங்கத் தயாரித்துள்ளதுடன் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க தகவல்களை அதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளது.

நிறுவனம் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்தியுள்ளது எனவும் அம் முறைகளும் கணக்கீட்டுக் கொள்கைப்படுத்தல்களும் இந்நிதிக் கூற்றைத் தயாரிக்கும் போது எப்போதும் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும் பணிப்பாளர் சபை உறுதியளிக்கின்றது.

இத்தர நியமங்கள் மாற்றமடையும் சந்தர்ப்பங்கள் ஏதும் இருப்பின் அவற்றை உரிய முறையில்

சுட்டிக்காட்டி அதற்கான நியாயங்கள் கூறப்பட்டுள்ளன. யதாரத்தபூர்வமான முறையிலும் நியாயமான முறையிலும் அனைத்துத் தீர்மானங்களும் மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்துகின்றது.

இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களும் மதிப்பீடுகளும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் கூறும் பொறுப்பை பணிப்பாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். நிறுவனம் தமது நிதி நிலைமையையும் உண்மைத் தன்மையையும் காட்டும் கணக்கீட்டு அறிக்கைகளை உரிய முறையில் பேணி வரப்படும் என பணிப்பாளர் சபை உறுதியளிக்கின்றது. ஆண்டறிக்கையில்

காட்டப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் மூலம் நிறுவனம் நாளாந்த செயற்பாடுகள் உண்மையான முறையிலும் நியாமான முறையிலும் மேற்கொள்ளப்படுகின்றன என்று பணிப்பாளர் சபை 31 டிசம்பர் 2016 இல் உறுதிப்படுத்துகின்றது.

நிறுவனத்தின் உள்ளக நிர்வாகத் தொகுதி தொடர்பான முழுமையான பொறுப்பு பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. திரவத்தன்மை தொடர்பான பிழையான கூற்றுக்கள் மற்றும் மோசடிகளை முழுமையாக நடைமுறைப்படுத்தி உள்ளகச் சுருக்கம், உள்ளகக் கணக்காய்வு, நிதி மற்றும் வேறு நிர்வாக முறைகள் மூலம் ஏற்படக்கூடிய திரவத் தன்மை தொடர்பான பிழையான கூற்றுக்கள் மற்றும் மோசடிகளை அல்லது நியாயமான காலத்தினுள் அறிந்து கொள்வதற்கு முடியுமான முறையில் அனைத்துச் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கும் கொடுக்கல் வாங்கல்களை உரிய முறையில் காட்டுவதற்கு முடியுமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் உறுதிப்படுத்துகின்றது. எதிர்வரும் பல வருடங்களில் தொடர்ச்சியாகப் பேணிவருவதற்கான வளங்கள் போதியளவு உள்ளது எனவும் பணிப்பாளர் சபை கருதுகின்றது. அத்துடன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கின்ற போது தொடர்ச்சியாக மாற்றமின்றிப் பின்பற்றப்படும்.

நிறுவனத்தின் கணக்காய்வாளர்களான கணககாய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் - பட்டயக் கணக்காளர்கள் தனது பொறுப்பை மேற்கொள்வதற்கு அவசியமான அனைத்துத் தகவல்களையும் ஒத்துழைப்பையும் பணிப்பாளர் சபை வழங்கியது.

கணக்காய்வாளர்கள் அனைத்து நிதிக் கூற்றுக்களையும் நிதி அறிக்கைகளையும் உரிய தரவுகளையும் பரிசீலித்து தங்களது சுதந்திரமான கருத்துக்களைச் சமர்ப்பித்துள்ளனர். அவ்வறிக்கை இதில் உள்ளடக்கப்படட்டுள்ளது.

நிறுவனம் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது செலுத்தவேண்டியிருந்து கண்டறியப்பட்ட அனைத்து வரிகளும் நிறுவனத்தின் ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளும் நிறுவனம் செலுத்த வேண்டிய ஏனைய நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளன அல்லது செலுத்துவதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளன என பணிப்பாளர்கள் உறுதியளிக்கின்றனர்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,



வ/ப கோபரேட் அட்வைசர் சேர்விஸ்ஸ (தனியார்) நிறுவனம்
செயலாளர்கள் - சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்

මගේ අංකය
எனது இல.
My No. } பிசல்ஏ/ஏ/சீபிஎல்/01/16//26

මබේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 2017 செப்தெம்பர் 30

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின்
பங்குதாரர்களிற்கு

**வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் ('கம்பனி'') 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

**கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள்

அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) ரூபா 142,502,287 பெறுமதியான 5,733 ஹெக்டெயர்கள் பரப்பளவுள்ள அத்துமீறப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட காணிகள் மற்றும் குத்தகைக்கு பெறப்பட்ட காணிகள் என்பன அத்துமீறப்பட்ட காணிகளின் பட்டியல் மற்றும் காணிகளை அத்துமீறி பெற்ற நபர்கள், காணிகளை விடுவிப்பதற்கான நோக்கம், காணிகளின் திட்டங்கள் மற்றும் தற்போதுள்ளமைக்கான உறுதிப்படுத்தல்கள் போன்ற சான்றாதாரங்கள் காணப்படாமை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

(ஆ) ரூபா 7,302,940 கிரயமான முற்றாக பெறுமானத்தேய்விடப்பட்ட மோட்டார் வாகனங்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் (எல்கேஏஎஸ்) 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் 51 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அவற்றின் ஆயுட்காலத்தை மீளாய்வு செய்யாமல் கம்பனியால் பயன்படுத்தப்படுகின்றது.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

---

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

**பாராளுமன்றத்திற்கான அறிக்கை**

---

அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியலபடுத்தப்படும்

~~අ/ස. එච්. එම්. ගාමිණී විජේසිංහ~~
~~විගණකාධිපති~~

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்

முற்றடக்க வருமானக் கூற்று

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கானது. | குறிப்புக்கள் | 2016 ரூபா | 2015 மீள் கூறப்பட்ட ரூபா |
|---|---|---|---|
| வருமானம் | 19 | 383,089,914 | 399,365,998 |
| விற்பனைக் கிரயம் | | (234,382,941) | (250,617,694) |
| **மொத்த இலாபம்** | | **148,706,973** | **148,748,305** |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானங்கள் மற்றும் கிடைப்பனவுகள் | 20 | 65,941,736 | 80,380,044 |
| நிர்வாகச் செலவுகள் | | (102,545,104) | (106,461,392) |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | | (8,692,761) | (13,492,529) |
| **தொழிற்பாடுகள் மூலம் உழைக்கப்பட்ட இலாபம்** | | **103,410,843** | **109,174,428** |
| நிதி வருமானம் | 21 | 14,193,632 | 10,734,205 |
| நிதிச் செலவு | 21.A | (32,787,852) | (31,616,099) |
| வரிக்கு முன்னரான இலாபம் | 22 | **84,816,623** | **88,292,534** |
| வரிச் செலவுகள் (ஏற்பாடு) | 23 | (15,144,615) | (9,610,612) |
| **வருடத்துக்கான இலாபம்** | | **69,672,008** | **78,681,922** |
| **ஏனைய முற்றடக்க வருமானம்** | | | |
| **திட்டவட்டமான ஊழியப் பயன்திட்ட மதிப்பீட்டுப்** பெறுகை / இழப்பு | | 1,091,543 | 2,761,980 |
| **வருடத்துக்கான மொத்த முற்றடக்க வருமானங்கள் வரிகளின் பின்** | | **70,763,551** | **81,443,902** |
| பங்கு ஒன்றுக்கான அடிப்படை உழைப்பு (ரூபா) | 24 | **3.48** | **3.93** |

அடைப்புக்குறிகளுக்குள் காட்டப்பட்டுள்ளவை கழிக்கப்பட வேண்டியவற்றைக் குறிக்கும்.

பக்கங்கள் 40 முதல் 66 வரை உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டுக் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுக்களின் ஒரு அவசியமான பகுதியாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்

**சிலாபம்**

**ஆகஸ்ட் 24, 2017**

## வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்

முற்றடக்க வருமானக் கூற்று

| டிசம்பர் 31 இல் உள்ளவாறாக | குறிப்பு | 2016 | 2015 மீள் கூறப்பட்ட |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| JEDB/SLSPC பெருந்தோட்டங்களின் வெற்றுக் காணிகளுக்கான குத்தகை உரிமை | 04 | 76,488,705 | 79,177,427 |
| JEDB/SLSPC பெருந்தோட்டங்களின் குத்தகையிலான ஆதனம்,பொறி,உபகரணம் (காணிப் பயன்பாட்டு உரிமை மற்றும் குத்தகையிலான உயிரியல் ஆதனங்கள் தவிர) | 05 | 1,434,812 | 2,484,859 |
| JEDB/SLSPC பெருந்தோட்டங்களின் குத்தகை கொள்ளப்பட்ட உயிரியல் ஆதனங்கள் | 06 | 26,893,743 | 30,441,473 |
| JEDB/SLSPC உயிரியல் ஆதனங்கள் (குத்தகை கொள்ளப்பட்ட உயிரியல் ஆதனங்கள் தவிர) | 07 | 722,636,467 | 632,136,502 |
| நுகரத்தக்க உயிரியல் ஆதனங்கள் | 7.3 | 42,245,501 | 37,096,469 |
| குத்தகையில்லாத ஆதனம், பொறி, உபகரணங்கள் | 08 | 96,643,719 | 104,957,876 |
| | | 966,342,948 | 886,294,608 |
| **நடைமுறைச் சொத்துககள்** | | | |
| இருப்புக்கள் | 09 | 104,999,422 | 47,613,234 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 10 | 48,435,673 | 36,496,447 |
| அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான நிதி வசதிகள் | 11 | | |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 11.1 | 11,011,936 | 8,256,427 |
| ஏனைய நடைமுறை சொத்துக்கள் | | 1,929,727 | 4,453,242 |
| குறுங்கால முதலீடுகள் | 12 | 140,868,261 | 152,646,142 |
| கையிருப்பாகவும் வங்கியிலும் உள்ள காசு | | 5,087,898 | 7,416,487 |
| | | 312,332,917 | 256,881,980 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,278,675,864** | **1,143,176,587** |
| **உரிமையாண்மை மற்றும் பரிப்புக்கள்** | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 13 | 200,000,010 | 200,000,010 |
| நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் | | 633,885,863 | 598,276,777 |
| மர (Timber) ஒதுக்கங்கள் | | 61,840,917 | 56,686,452 |
| **மொத்த உரிமையாண்மை** | | 895,726,790 | 854,963,239 |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்களும் பிற்போடப்பட்ட வருமானங்களும்** | | | |
| பிற்போடப்பட்ட வரிப்பொறுப்புக்கள் | 14 | 61,850,251 | 49,092,652 |
| பிற்போடப்பட்ட கொடைகள் மற்றும் மானியங்கள் | 15 | 6,791,464 | 7,190,426 |
| ஓய்வுதியப் பயன் கடப்பாடுகள் | 16 | 72,493,267 | 67,834,120 |
| JEDB/SLSPC பெருந்தோட்ட குத்தகைக் கொடுப்பனவுப் பரிப்புக்கள் | 17 | 107,223,139 | 109,356,591 |
| | | 248,358,121 | 233,473,789 |
| **நடைமுறைப் பரிப்புக்கள்** | | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 18 | 135,832,364 | 54,880,651 |
| செலுத்தப்பட வேண்டிய வருமான வரி | | (3,374,863) | (2,192,488) |
| JEDB/SLSPC பெருந்தோட்ட குத்தகைக் கொடுப்பனவுப் பரிப்புக்கள் | 17 | 2,133,452 | 2,051,396 |
| | | 134,590,953 | 54,739,559 |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பரிப்புக்கள்** | | **1,278,675,864** | **1,143,176,587** |

அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்டுள்ளவை கழிக்க வேண்டியவற்றை குறிக்கும்.-
40 முதல் 66 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டுக் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுக்களின் ஒரு அவசியமான பகுதியாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்

**உறுதிப்படுத்துதல்**

2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கமபனிகள் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதிக் கூறறுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றேன்

திரு. ரொஹான் ரத்நாயக
**சிரேஷ்ட கணக்காளர்**

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முன்னிலைப்படுத்தல் என்பன பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.
வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்காகவும் அவர்கள் சார்பாகவும் அங்கீகாரமளிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டது.

**திரு. வீ.கே.சீ ஹேரத்**
(தவிசாளர்)

**திரு. எம்.கே.பீ. செனவிரத்ன**
நிறைவேற்றுப் பணிப்பாளர்

**சிலாபம்**
**ஆகஸ்ட் 24, 2017**

**உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று**
31 டிசம்பர் 2016 அன்று முடிவடைந்த ஆண்டுக்கான

| விபரம் | கூறப்பட்ட மூலதனம் | மர ஒதுக்குகள் | திரண்ட இலாபம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| **2015 ஜனவரி 01 அன்று இருந்தவாறான மீதி** | 200,000,010 | 32,151,932 | 543,861,623 | 776,013,565 |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கங்கள் குறிப்பு - A | | | (2,494,228) | (2,494,228) |
| ஆண்டுக்கான தேறிய இலாபம்/நட்டம் குறிப்பு - B | | | 78,681,922 | 78,681,922 |
| ஏனைய முற்றடக்க வருமானங்கள் | - | | 2,761,980 | 2,761,980 |
| மர (Timber) ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டது. | - | 24,534,520 | (24,534,520) | - |
| மொத்த முற்றடக்க வருமானங்கள் | - | 56,686,452 | 54,415,154 | 78,949,674 |
| **2015 டிசம்பர் 31 அன்று இருந்தவாறான மீதி** | **200,000,010** | **56,686,452** | **598,276,777** | **854,963,239** |
| ஆண்டுக்கான இலாபம் | - | | 69,672,008 | 69,672,008 |
| ஏனைய முற்றடக்க வருமானங்கள் | | | 1,091,543 | 1,091,543 |
| மர (Timber) ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டது. | | 5,154,465 | (5,154,465) | - |
| மொத்த முற்றடக்க வருமானங்கள் | 200,000,010 | 61,840,917 | 663,885,863 | 925,726,790 |
| மர (Timber) ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டது. 2015க்கான பங்கிலாபங்கள் | | | (30,000,000) | (30,000,000) |
| **2016 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான மீதி** | **200,000,010** | **61,840,917** | **633,885,863** | **895,726,790** |

**குறிப்பு A - முன்னைய ஆண்டுகள் தொடர்பான வழுக்களின் திருத்தங்கள்**

| | |
|---|---|
| 2012 முதல் 2014 வரையான மிளகு வளர்ப்புத் திட்டத்துக்கான செலவீனங்கள் முதிர்வடையாத பயிர்ச்செய்கைக்கு மாற்றப்பட்டது. | 958,918 |
| 1992-2014 வரையான அகற்றப்பட்ட தென்னை மரங்களுக்கான புத்தகப் பெறுமதிச் சீராக்கம். | (3,453,146) |
| | **(2,494,228)** |

**குறிப்பு B - 2015 ஆம் ஆண்டுக்கான இலாபச் சீராக்கம்**

| | |
|---|---|
| முன்னர் அறிக்கையிடப்பட்டவாறான 2015க்கான இலாபம் | 76,171,897 |
| மிளகு வளர்ப்புத் திட்டத்துக்கான செலவீனங்கள் முதிர்வடையாத பயிர்ச்செய்கைக்கு மாற்றப்பட்டது. | 277,588 |
| மாங்காய் வளர்ப்புத் திட்டத்துக்கான செலவீனங்கள் முதிர்வடையாத பயிர்ச்செய்கைக்கு மாற்றப்பட்டது. | 202,696 |
| நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களின் மதிப்பீட்டினால் ஏற்பட்ட விளைவு | |
| பலகை மரங்களின் விற்பனை பெறுமதி | (22,355,425) |
| நுகரத்தக்க உயிரியல் சொத்துகளின் சீர்மதிப்பு மாற்றம் காரணமாக ஏற்பட்ட பிரதிலாபம் | 24,534,520 |
| அகற்றப்பட்ட உயிரியல் சொத்துக்களின் பெறுமதிச் சீராக்கம். | (149,353) |
| **2015 ஆம் ஆண்டுக்கான மீள்கூறப்பட்ட இலாபம்** | **78,681,922** |

அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்டுள்ளவை கழிக்க வேண்டியவற்றை குறிக்கும்.

40 முதல் 66 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டுக் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுக்களின் ஒரு அவசியமான பகுதியாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்

**சிலாபம்**
**ஆகஸ்ட் 24, 2017**

**காசுப்பாய்ச்சல் கூற்று**

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கானது | 2016<br>ரூபா. | 2015<br>ரூபா. |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | 84,816,623 | 88,292,534 |
| **சீராக்கங்கள்:** | | |
| - பெறுமானத் தேய்வுகள் / பெறுமான இழப்புக்கள் | 39,174,417 | 40,139,139 |
| - ஊழியர் இலாபப் பங்குகளுக்கான ஒதுக்கங்கள் | 7,828,181 | 8,868,397 |
| - மானியங்களுக்கான பெறுமான இழப்புக்கள் | (398,962) | (429,158) |
| - அரசாங்க குத்தகைக் கட்டணங்கள் மீதான நிதிக் கட்டணங்கள் | 32,115,849 | 31,090,320 |
| - அறவிட முடியாத கடன்களுக்கான ஏற்பாடு | (421,258) | 546,258 |
| - நிதி வருமானம் | (14,193,632) | (10,734,205) |
| - திட்டவட்டமான பயன்திட்டச் செலவுகளுக்கான ஏற்பாடுகள் | 12,983,458 | 12,432,089 |
| - ஆதனம், பொறி, உபகரண அகற்றல் மூலமான இலாபங்கள் | 30,187 | (294,015) |
| - தென்னை மரங்களின் அகற்றல் மூலமான இலாபங்கள் | (17,356,052) | (19,532,788) |
| | 144,578,811 | 150,378,571 |
| **மாற்றங்கள்** | | |
| - கையிருப்புக்கள் | (57,386,187) | 25,818,339 |
| - பால் உற்பத்திக் கால்நடைகள் | (11,490,500) | (1,672,000) |
| - நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் | (5,149,032) | (2,194,122) |
| - வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | (9,994,653) | (2,808,477) |
| - ஏனைய நடைமுறை சொத்துக்கள் | 2,523,515 | (3,193,463) |
| - ஏனைய நிதிச் சொத்துக்கள் | (2,755,509) | |
| - வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 51,991,929 | (5,105,917) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் உருவான காசு** | 112,318,375 | 161,222,930 |
| - விசேட பயன்திட்டக் கிரயங்களின் கொடுப்பனவு | (7,232,768) | (6,956,474) |
| - ஊழியர் இலாபப் பங்குக் கொடுப்பனவுகள் | (8,868,397) | (5,713,435) |
| - செலுத்தப்பட்ட நிதிச் செலவுகள் | (32,115,849) | (31,090,320) |
| - கிடைக்கப்பெற்ற நிதி வருமானங்கள் | 12,670,316 | 11,488,388 |
| - வருமான வரிக் கொடுப்பனவுகள் | (3,569,391) | (2,273,223) |
| - தென்னை மர விற்பனை மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் | 17,465,910 | 19,682,141 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசு** | 90,668,196 | 146,360,007 |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| - ஆதனம், பொறி மற்றும் உபகரண சேர்த்தல்கள் | (16,344,955) | (12,830,427) |
| - துறைசார் அபிவிருத்திச் செலவு | (86,348,127) | (87,397,326) |
| - ஆதனம், பொறி மற்றும் உபகரண அகற்றல் மூலமான வருமானம் | (30,187) | 294,040 |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திய தேறிய காசுப்பாய்ச்சல்** | (102,723,270) | (99,933,713) |
| **நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| - பங்கிலாப செலுத்தல்கள் | - | - |
| - அரசாங்க குத்தகை மூலதன மீளச்செலுத்தல்கள் | (2,051,396) | (1,972,497) |
| **நிதி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்** | (2,051,396) | (1,972,497) |
| **காசு மற்றும் அதற்குச் சமனானவற்றில் ஏற்பட்ட தேறிய (அதிகரிப்பு/குறைவு)** | (14,106,470) | 44,453,797 |
| **அ.** காசு மற்றும் அதற்குச் சமனானவற்றின் வருட ஆரம்ப மீதி | 160,062,629 | 115,608,832 |
| **ஆ.** காசு மற்றும் அதற்குச் சமனானவற்றின் வருட இறுதி மீதி | **145,956,159** | **160,062,629** |
| **குறிப்பு - அ** | | |
| காசு மற்றும் அதற்குச் சமனானவற்றின் வருட ஆரம்ப மீதி | | |
| குறுங்கால முதலீடுகள் | 152,646,142 | 113,275,930 |
| கையிலுள்ள காசு மற்றும் வங்கி மீதி | 7,416,487 | 2,332,902 |
| | 160,062,629 | 115,608,832 |
| **குறிப்பு - ஆ** | | |
| காசு மற்றும் அதற்குச் சமனானவற்றின் வருட இறுதி மீதி | | |
| குறுங்கால முதலீடுகள் | 140,868,261 | 152,646,142 |
| கையிலுள்ள காசு மற்றும் வங்கி மீதி | 5,087,898 | 7,416,487 |
| | **145,956,159** | **160,062,629** |

அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்டுள்ளவை கழிக்க வேண்டியவற்றை குறிக்கும்.
40 முதல் 66 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டுக் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுக்களின் ஒரு அவசியமான பகுதியாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்

**சிலாபம்**
**ஆகஸ்ட் 24, 2017**

## 1 கூட்டுநிறுவனத் தகவல்கள்

### 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

#### 1.1.1 உருவாக்கமும் சட்டக் கட்டமைப்பும்

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனமானது (கம்பனி) 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அரச கூட்டுத்தாபனத்தாபனங்கள் அல்லது அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை பொதுக் கம்பனிகளாக்கும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க 1982 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கூட்டிணைக்கப்பட்டு சட்ட நியதிப்படுத்தப்பட்ட (2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீளப் பதிவு செய்யப்பட்டது) ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஆகும்.

கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது இலக்கம் 165, புத்தளம் வீதி, சிலாபம் என்னும் முகவரியிலும், கொழும்பு அலுவலகமானது ஜே. ஆர். ஜயவர்த்தன நிலையம், இலக்கம் 07, தர்மபால மாவத்தை, கொழும்பு 07 என்னும் முகவரியிலும் அமைந்திருக்க, அதன் பெருந்தோட்டங்கள் சிலாபம், குருநாகல், கம்பஹா ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளன.

#### 1.1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

தெங்குப் பயிர்ச்செய்கை, கொப்பரா உற்பத்தி மற்றும் பச்சைத் தேங்காய் மற்றும் கொப்பரா விற்பனை என்பனவே இவ்வருடத்தில் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்பாடுகள் ஆகும்.

#### 1.1.3 தாய் நிறுவனம் மற்றும் உச்ச தாய் நிறுவனம்

நிறுவனத்தின் தாய் நிறுவனம் இலங்கை அரசாங்கமாகும்

### 1.2 வெளியிடுவதற்கான அங்கீகாரம் அழிக்கபட்டுள்ள திகதி

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் 31 டிசம்பர் 2016 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 24 ஆகஸ்ட் 2017 அன்று பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக வெளியிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டது.

## 2 தயாரிப்பதற்கான அடிப்படை

### 2.1 இணக்கப்பாட்டுக் கூற்று

இந் நிதிக்கூற்றுக்களானவை, இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் வழங்கப்பட்டுள்ள இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடனான (SLFRS/LKAS) இணக்கப்பாட்டை வலியுறுத்தும், 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணக்கமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக் கூற்றுக்களுக்கான 04, 05, 06 ஆம் குறிப்புக்களில் விபரிக்கப்பட்டவாறு மீள்மதிப்பிடப்பட்ட JEDB/SLSPC பெருந்தோட்டங்களின் குத்தகைச் சொத்துக்கள் தவிர்ந்த அனைத்து விடயங்களிலும் இந் நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய எண்ணக்கருவுக்கு இணக்கமான அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமான இடங்களில் விசேடமான கொள்கைகள் தொடர்ந்து வரும் குறிப்புக்களில் விளக்கப்பட்டுள்ளதுடன், நிதிக்கூற்றுக்களில் பணவீக்கக் காரணிகள் தொடர்பில் எதுவித செம்மையாக்கமும் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.3 தொழிற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்

நிதிக் கூற்றுக்கள் நிறுவனத்தின் தொழிற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயமான இலங்கை ரூபாய்களில் (Rs.) முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை ரூபாய்களில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து நிதித் தகவல்களும் கிட்டிய ரூபாய்களில் வழங்கப்பட்டுள்ளன.

### 2.4 மதிப்பீடுகள் மற்றும் சுயதீர்ப்புக்களின் பயன்பாடு

SLFRS/LKAS நியமங்களுக்கு இணங்கி நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தலில், கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் சொத்துக்கள், பரிப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களின் அறிக்கையிடப்பட்ட தொகைகள் முதலியவற்றின் பிரயோகத்தின் மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய சுயதீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை முகாமைத்துவம் மேற்கொள்ளுமாறு தேவைப்படுத்தப்படுகின்றன.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை எடுகோள்கள் ஆகியன தொடர்ச்சியான முறையில் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான மீளாய்வானது அக் காலப்பகுதியை மாத்திரம் பாதிக்கும் எனில், அந்த மீளாய்வு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியிலும், பாதிப்புக்கு உள்ளாகும் எதிர்கால காலப்பகுதிகளுக்கும் ஏற்பிசைவு செய்யப்படும்.

### 2.5 தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

நிறுவனத்தின் முகாமைத்தவமானது, நிறுவனத்தின் தொடர்ந்து இயங்கும் தன்மைக்கான இயலுமை தொடர்பான மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டுள்ளதுடன், நிறுவனம் கட்புலனாகக்கூடிய எதிர்காலத்துக்குத் தொடர்ந்து இயங்கக்கூடிய வகையில் வளங்களைக் கொண்டுள்ளதாகத் திருப்தியடைந்துள்ளது. மேலும், நிறுவனம் தொடர்ந்தியங்கும் தன்மையுடன் செயற்படுவதற்கான இயலுமை மீது கணிசமான சந்தேகங்களை ஏற்படுத்தக்கூடிய பொருண்மைத்தன்மை வாய்ந்த நிச்சயமற்றதன்மை தொடர்பான எந்த ஒரு விடயம் தொடர்பிலும் முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. ஆகவே, நிதிக்கூற்றுக்கள் தொடர்ச்சியான முறையில் தொடர்ந்தியங்கும் தன்மையின் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

### 2.6 ஒப்பீட்டுத் தகவல்கள்

கணக்கீட்டுக் கொள்கைகள் நிறுவனத்தினால் தொடர்ச்சியான முறையில் பிரயோகிக்கப் பட்டுள்ளதுடன், பிரத்தியேகமாகக் குறிப்பிடப்பட்டு அவசியமான இடங்களில் நடைமுறை ஆண்டின் தொகைகளுக்கு இணங்கும் வகையில் முன்னைய ஆண்டுகளின் தொகைகள் மற்றும் சொற்றொடர்கள் மீள ஒழுங்கமைக்கப்படாதவிடத்து, அக் கொள்கைகள் முன்னயை வருடங்களில் பயன்படுத்தப்பட்ட கொள்கைகளுக்கு நிலைமாறாது காணப்படுகின்றன.

### 2.7 அறிக்கையிடல் திகதிக்குப் பின்னான நிகழ்வுகள்

அறிக்கையில் திகதிக்குப் பின்னர் நிகழும் அனைத்துப் பொருண்மைத்தன்மை வாய்ந்த நிகழ்வுகளும் கருத்தில் கொள்ளப்பட்டு, பொருத்தமான இடங்களில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 3 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 3.1 சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டின் அடிப்படைகள்

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப் பட்டுள்ள சொத்துக்களானவை காசு மற்றும் அறிக்கையிடல் திகதியில் இருந்து ஒரு வருட காலம் அல்லது நிறுவனத்தின் சாதாரண தொழிற்பாட்டு சுற்றோட்டம் ஆகியவற்றில் குறைவான காலப்பகுதியினுள் காசாகத் தேறச் செய்யப்படத்தக்க சொத்துக்களாகும். நடைமுறை சொத்துக்கள் தவிர்ந்த சொத்துக்களானவை, நிறுவனம் அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்கு மேற்பட்ட காலத்துக்கு வைத்திருக்க எதிர்பார்க்கும் சொத்துக்களாகும்.

#### 3.1.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

#### 3.1.1.1 ஏற்பிசைவு மற்றும் அளவீடு

ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகளானவை அவற்றின் கிரயத்தில் (அல்லது வெற்றுக் காணியின் குத்தகை உரிமை எனின், மதிப்பீட்டுப் பெறுமதியில்) திரண்ட பெறுமானத் தேய்வுகள் மற்றும் திரண்ட சேத இழப்பு நட்டங்கள் எவையேனுமிருப்பின், கழிக்கப்பட்ட பெறுமதியில் அளவிடப்படும்.

**(அ) உரிமை கொள்ளப்பட்ட சொத்துக்கள்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயமானது, அவற்றின் கொள்வனவு தொடர்பாக நேரடியாக சுமத்தப்படத்தக்க செலவுகளை உள்ளடக்கும். சுய-உருவாக்க சொத்துக்களின் கிரயமானது குறித்த சொத்தின் எதிர்பார்த்த பயன்பாட்டுக்கான தொழிற்படு நிலைமைக்கு அதனைக் கொண்டு வருவதற்காக நேரடியாக சுமத்தக்கூடிய மூலப்பொருட் கிரயம், நேர் ஊழியம் மற்றும் ஏனைய நேர்ச் செலவுகளை உள்ளடக்கும். தொடர்புபட்ட உபகரணங்களின் அவசியதான பகுதியானவுள்ள கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருட்கள் அவ் உபகரணங்களின் ஒரு பகுதியாக மூலதனமாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஏதேனும் முக்கிய பாகங்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மாற்றீடு செய்யப்பட வேண்டுமாயின், நிறுவனம் அப் பாகங்களை முறையே பிரத்தியேகமான ஆயுட்காலம் மற்றும் பெறுமானத் தேய்வைக் கொண்ட தனியான சொத்துக்களாக ஏற்பிசைவு செய்யும். அதே போன்று, பிரதான சோதனையொன்று நடாத்தப்படும் சந்தர்ப்பத்தில், ஏற்பிசைவு மூலக்கூறுகள் திருப்தி செய்யப்பட்டிருப்பின், அதன் கிரயமானது குறித்த பொறி மற்றும் உபகரணத்தின் கொண்டு செல்லல் பெறுமதியில் ஒரு மாற்றீடாக ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய அனைத்து திருத்த மற்றும் பராமரிப்புக் கிரயங்கள் யாவும் அவை எற்படும் போதே முற்றடக்க வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

மூலதனக் குறைவேலை இருப்புக்களானது, சொத்தின் முதலாவது பயன்பாட்டுக் காலத்தில் அல்லது அது உருவாக்கப்பட்டதும் தொடர்புபட்ட சொத்துக்கு மாற்றப்படும்.

**(ஆ) குத்தகை சொத்துக்கள்**

நிதிக்குத்தகையின் கீழ் பெறப்பட்ட சொத்துக்கள் (குத்தகைக்கு பெறப்பட்ட சொத்துக்களின் உரிமைக்குக் கிடைக்கத்தக்க கணிசமான பயன்களை பயனுறுதி மிக்க வகையில் மாற்றம் செய்யும்) அவற்றின் சீர்மதிப்பு (நியாயமான பெறுமதி) மற்றும் ஆகக் குறைந்த குத்தகைக் கட்டணங்களின் இற்றைப் பெறுமதி (தற்போதைய பெறுமதி) ஆகியவற்றில் குறைந்த பெறுமதிக்கு சமமாக மூலதனமாக்கல் செய்யப்பட்டு, நிறுவனம் அச்சொத்துக்களை பயன்படுத்துவதற்கு உத்தேசித்திருக்கும் காலப்பகுதி முழுவதிலும் பெறுமானத் தேய்வு அல்லது காலத் தேய்மானம் செய்யப்படும்.

இது தொடர்பில் குத்தகைக்காரருக்குச் செலுத்த வேண்டிய மூலதன (அசல்) பெறுமதியானது ஒரு பரிப்பாகக் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிதியாண்டுக்குமான குத்தகைக் கடப்பாட்டின் வட்டிப் பாகம் குத்தகை முடிவு வரைக்கும், ஒவ்வொரு காலப்பகுதிக்கும் மீதமாகவுள்ள கடப்பாட்டின் நிலுவையில் ஒரு நிலையான கால வீதத்தை ஏற்படத்தக்கூடிய வகையில் அந்தந்த ஆண்டுகளுக்கான முற்றடக்க வருமானக் கூற்றில் பதியப்படும்.

குத்தகை ஆதனங்களின் மீதான விருத்திகளுக்கான கிரயமானது மூலதனமாக்கப்பட்டு, எஞ்சிய குத்தகைக் காலம் அல்லது விருத்திகளின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட் காலம் ஆகிய இரண்டில் குறைந்த காலப்பகுதிக்கு பெறுமானத் தேய்விடப்படும்.

**3.1.1.2 பிற்பட்ட கிரயங்கள்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பாகங்களை மாற்றீடு செய்யும் கிரயமானது, அப்பாகத்துடன் தொடர்புபட்ட எதிர்கால பொருளாதாரப் பயன்கள் நிறுவனத்திற்கு கிடைப்பதற்கான நிகழ்தகவு காணப்பட்டு, அதன் கிரயம் நம்பகமாக அளவிடத்தக்கதாககவும் காணப்படுமாயின், குறித்த ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியின் கொண்டுசெல்லல் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படும். மாற்றீடு செய்யப்பட்டு அகற்றப்பட்ட பாகங்கள் கீழே தரப்பட்டுள்ள ஏற்பிசைவு நீக்கல் கொள்கைக்கு இணங்க ஏற்பிசைவு நீக்கப்படும். ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நாளாந்த பராமரிப்புக் கிரயங்கள் அவை ஏற்படும் போதே இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**3.1.1.3 ஏற்பிசைவு நீக்கல்**

ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படி ஒன்றின் கொண்டு செல்லும் பெறுமதியானது அது அகற்றப்படும் போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றல் மூலம் எதிர்காலப் பொருளாதாரப் பயன்கள் எதுவும் இருக்காது என எதிர்பார்க்கப்படும் போது அது ஏற்பிசைவு நீக்கப்படும். ஏற்பிசைவு நீக்கல் காரணமாக கிடைக்கும் நயங்கள் அல்லது நட்டங்கள் இலாபநட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன், அதன் நயங்கள் வருமானமாக வகைப்படுத்தப்பட மாட்டாது.

**3.1.1.4 பெறுமானத் தேய்வு மற்றும் காலத் தேய்மானம்**

**(அ) பெறுமானத் தேய்வு**

பெறுமானத் தேய்வானது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பாகங்களின் மதிப்பிடப்பட்ட பொருளாதார பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் நேர்கோட்டு முறையின் அடிப்படையில் முற்றடக்க வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலங்களுக்கான மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு:

| | வருடங்கள் | வீதம் (%) |
|---|---|---|
| கட்டடங்கள் | 40 | 2.50 |
| பொறி மற்றும் உபகரணம் | 15 | 6.67 |
| தளபாடம் மற்றும் பொருத்துகள் | 10 | 10.00 |
| மோட்டார் வாகனங்கள் | 05 | 20.00 |
| உபகரணங்கள் | 08 | 12.50 |
| நிரந்தர காணி அபிவிருத்தி | 30 | 3.33 |
| வேலி அமைத்தல் | 03 | 33.33 |
| நீர் வழங்கல் | 20 | 5.00 |

ஏதேனும் ஒரு சொத்தின் பெறுமானத் தேய்வானது அது பயன்பாட்டுக்குத் தயாராக உள்ளபோது ஆரம்பிப்பதுடன், அச்சொத்து விற்பனைக்காக வைத்திருக்கப்படும் சொத்தாக வகைப்படுத்தப்படும் போது அல்லது ஏற்பிசைவு நீக்கப்படும் போது பெறுமானத் தேய்வு நிறுத்தப்படும். பெறுமானத் தேய்வு முறை, பயன்தரு ஆயுட்காலம் மற்றும் எச்சப் பெறுமதி ஆகியன அறிக்கையிடும் திகதியில் மீள மதிப்பிடப்பட்டுள்ளதுடன், தேவையேற்படுமிடத்து, பிற்கால விளைவுள்ள வகையில் சீராக்கப்பட்டுள்ளன.

(அ) காலத் தேய்மானம்

குத்தகைக் காலத்தின் இறுதியில் நிறுவனம் சொத்தின் உரிமையைப் பெற்றுக் கொள்ளும் என்பது நியாயமான அளவில் உறுதிவாய்ந்ததாக இல்லாதவிடத்து, நிதிக் குத்தகையின் கீழ் உள்ள சொத்துக்கள் குத்தகைக் காலம் அல்லது அவற்றையொத்த உரிமை கொள்ளப்பட்டுள்ள சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் ஆகிய இரண்டில் குறைவான காலப்பகுதிக்கு காலத்தேய்வு செய்யப்படும். JEDB/SLSPC இடமிருந்து கையகப்படுத்தப்பட்ட காணிகளின் குத்தகைக் காலமானது 2045 இல் முடிவடையும்.

JEDB/SLSPC இடமிருந்து கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களுக்கான குத்தகை உரிமையானது எஞ்சியுள்ள குத்தகை காலம் மற்றும் பயன்தரு ஆயுட்காலம் ஆகியவற்றில் குறைவான காலப்பகுதிக்கு சமமான

தொகைகளில் காலத்தேய்வு செய்யப்படுவதுடன், தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலங்களுக்கான மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு:

| | வருடங்கள் | வீதம் (%) |
|---|---|---|
| வெற்றுக் காணிகளின் குத்தகை உரிமை | 53 | 1.89 |
| காணி அபிவிருத்தி | 30 | 3.33 |
| ஏனைய உரிமையளிக்கப்பட்ட சொத்துக்கள் | 30 | 3.33 |
| கட்டடங்கள் | 25 | 4.00 |
| இயந்திரங்கள் | 15 | 6.67 |
| நீர் வழங்கல் | 20 | 5.00 |

### 3.1.2 உயிரியல் சொத்துக்கள்

#### 3.1.2.1 முதிர்வுற்ற மற்றும் முதிர்வுறாத பயிர்ச்செய்கை

**(அ) அசையா, குத்தகை உயிரியல் சொத்துக்கள் (முதிர்வுற்ற/முதிர்வுறாத பயிர்ச்செய்கை)**

பெருந்தோட்டங்களின் தனியார் மயமாக்கல் காலப்பகுதியில் காணப்பட்ட, இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் அவசிய விடய செயற்பாட்டுக் குழுவின் (UITF) விதிமுறைகளுக்கு இணங்க, JEDB/SLSPC பெருந்தோட்டங்களில் நிதிக்குத்தகையில் காணப்பட்ட அசையாத, குத்தகை கொண்ட உயிரியல் சொத்துக்கள் 1992 ஆம் ஆண்டு ஜுன் 22 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரத்தக்கவாறு முன்விளைவுள்ள வகையில் நிறுவனத்தின் ஏடுகளில் பதியப்பட்டது.

அசையாத, குத்தகை கொண்ட உயிரியல் சொத்துக்களின் காலத்தேய்வானது சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்துக்கு நேர்கோட்டு முறையில் முற்றடக்க வருமானக் கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன், தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலங்களுக்கான மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு:

| | ஆண்டுகளின் | வீதம் (%) |
|---|---|---|
| முதிவுற்ற பயிர்ச்செய்கை | 30 | 3.33 |

**(ஆ) குத்தகை சொத்துக்களின் விருத்தி (முதிர்வுற்ற/முதிர்வுறாத பயிர்ச்செய்கை)**

பயிர் நடுகை மற்றும் அறுவடை (பயிரிடப்பட்ட பயிர்கள் எட்டு வருடங்களுக்குப் பின்னர் முதிர்வுறும்) ஆகியவற்றுக்கு இடையில் இடம்பெறும் நிலத் தயார்ப்படுத்தல், புதிய பயிர் விதைத்தல், மீள்விதைத்தல், ஊடுபயிரிடல் மற்றும் உரமிடல் முதலியவற்றுக்கான கிரயமானது முதிர்வுறாத பயிர்ச்செய்கையின் வகைப்படுத்தப்படும். முதிர்வுறாத பயிர்ச்செய்கை நேர்க் கிரயங்களுடன் சுமத்தப்படத்தக்க மேந்தலைச் செலவுகள் கூட்டப்பட்ட பெறுமதியில் காட்டப்பட்டுள்ளன. ஆண்டுக்காலத்தில் கொண்டுசெல்கைகளினுள் உள்ளடக்கப்படும் கொண்டுசெல்லும் உயிரியல் சொத்துக்களின் மீது ஏற்பட்ட செலவினங்கள் (அதாவது: தேங்காய்) முதிர்வுற்ற பயிர்ச் செய்கைக்கு மாற்றப்படும்.

குத்தகை ஆதனங்களின் மீதான விருத்திகளுக்கான தேய்மானமானது, மீதமுள்ள குத்தகை காலம் அல்லது அவ்விருத்திகளின் பயன்தரு ஆயட்காலம் ஆகியவற்றில் குறைவான காலப்பகுதியில் நேர்கோட்டு முறையில் மேற்கொள்ளப்படும்.

தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலங்களுக்கான மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு:

| | ஆண்டுகளின் | வீதம் (%) |
|---|---|---|
| தென்னை | 50 | 2.00 |
| மரமுந்திரிகை | 25 | 4.00 |
| ஏனையவை | 20 | 5.00 |

**(இ) நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள்**

நுகரத்தக்க பலகை மரங்கள் ஆரம்ப ஏற்பிசைவில் அளவிடப்படுவதுடன், ஒவ்வொரு அறிக்கையிடல் காப் பகுதியின் முடிவிலும் டுமுயுளு 41 நியமத்தின் அடிப்படையில் அவற்றின் சீர்மதிப்பில் விற்பனைக்கான செலவினங்கள் கழித்த பெறுமதியில் அளவிடப்படும். இளம் பயிர்களின் சீர்மதிப்பு இக் காலகட்டத்தில் விலை மீது கொண்டிருக்கக் கூடிய தாக்கம் பொருண்மைத் தன்மையற்றதாகக் காணப்படுவதால் கிரயமானது இளம் பயிர்களின் சீர்மதிப்பின் அண்மித்த பெறுமதியாகக் கொள்ளப்படும். பலகை மரங்களின் சீர்மதிப்பானது, பலகைகளின் நடைமுறை சந்தை விலையைக் கருத்தில் கொண்டு கழிவிட்ட காசுப் பாய்ச்சல் முறையைஈ முதிர்விலான மரம் ஒன்றின் எதிர்பார்க்கப்பட்ட பலகை உள்ளீடுகளுக்குப் பிரயோகித்து, சுயாதீன மதிப்பீட்டாளரினால் அளவிடப்படுள்ளது.

நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களின் சீர்மதிப்பில் விற்பனைக்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பெறுமதியிலான ஆரம்ப ஏற்பிசைவில் மற்றும் நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களின் சீர்மதிப்பில் விற்பனைக்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பெறுமதி முறையிலிருந்தான மாற்றங்கள் காரணமாக ஏற்படும் நயங்கள் அல்லது நட்டங்கள் அவை ஏற்பட்ட காலப்பகுதிக்கான இலாப நட்டங்களில் உள்ளடக்கப்படுவதுடன், ஏனைய எடுகோள்கள் யாவும் குறிப்பு 7.3 இல் தரப்பட்டுள்ளன.

**கழிவிட்ட காசுப்பாய்ச்சல் முறை கவனத்தில் கொள்ளும் முக்கிய மாறிகள் பின்வருமாறு:**

| **மாறி** | **கருத்து** |
|---|---|
| நாணய மதிப்பீடு | இலங்கை ரூபாய் (Rs.) |
| பலகை உள்ளடக்கம் | வேறுபட்ட புவியியல் பிராந்தியங்களில் வளரும் ஒவ்வொரு பயிர்களினதும் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, மரத்தின் தடிப்பு மற்றும் உயரம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது.<br>இது மரங்களின் அறுவடை தொடர்பான, நிறுவனத்தின் வனவியல் திட்டத்துடன் இணைந்த, நடைமுறையிலுள்ள அனைத்து சட்டரீதியான வதிமுறைகளையும் கவனத்தில் எடுத்தள்ளது. |
| பொருளாதார பயன்தரு ஆயுள் | ஒவ்வொரு பயிர் வகையினதும் சாதாரண வாழ்க்கைப் பரப்பின் அடிப்படையில், நிறுவனத்தின் வனவியல் திட்டத்துடன் இணைந்ததாக மதிப்படடப்பட்டுள்ளது. |
| விற்பனை விலை | இலங்கையின் தற்போதைய சந்தை விலையின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது. மரங்களை விற்கத்தகு நிலைமைக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து நிபந்தனைகளையும் கருத்தில் கொண்டதாகும். |
| கழிவு வீதம் | எதிர்காலக் காசுப் பயர்ச்சல்கள் பின்வரும் வீதங்களில் கழிவிடப்பட்டுள்ளன.<br>பலகை மரங்கள் 14மூ |

### 3.1.2.2 பால் உற்பத்திக் கால்நடைகள்

பாலுற்பத்திக் கால்நடைகள் அவற்றின் சீர்மதிப்பில் விற்பனைக்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. பாலுற்பத்திக் கால்நடைகளின் சீர்மதிப்பானது தேசிய கால்நடை அபிவிருத்தி சபையினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்திற்கு அமைவாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

### 3.1.3 விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லா சொத்துக்கள்

பாவனைக்காக அல்லாது விற்பனை மூலம் மீளப்பெற எதிர்பார்த்து வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்கள், விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்பட முன்னர் இச் சொத்துக்கள் அவற்றின் கொண்டு செல்லல் பெறுமதி அல்லது சீர்மதிப்பில் விற்பனைக்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பெறுமதி ஆகியவற்றில் குறைந்த பெறுமதியில் அளவிடப்பட்டிருந்தன. விற்பனை அதிகளவு நிகழ்தகவு இருந்து, தற்போதைய நிலைமையில் சொத்த உடனடியாக விற்பனை செய்வதற்குத் தயாராக இருப்பின் மாத்திரமே நடைமுறையல்லாச் சொத்துக்கள் விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்பட்டால், அவை பெறுமானத்தேய்வு அல்லது காலத்தேய்வு செய்யப்பட மாட்டாது.

### 3.1.4 இருப்புக்கள்

இருப்புக்களானவை, காலங்கடந்த மற்றும் மெதுவாக நகரும் இருப்புக்களுக்கான பொருத்தமான கழிப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு, கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட தேறத்தக்க நிகர பெறுமதி ஆகியவற்றில் குறைந்த பெறுமதியில் அளவிடப்படும். தேறத்தக்க நிகர பெறுமதி இருப்புக்களை அவற்றின் தற்போதுள்ள நிலைமையில் இருந்து தேறச் செய்வதற்கான அல்லது நிலைமாற்றுவதற்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பின்னரான, சாதாரண வணிக நிலைமைகளில் இருப்புக்களை விற்பனை செய்யத்தக்க பெறுமதி ஆகும்.

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**
31 டிசம்பர் 2016 முடிவடைந்த ஆண்டுக்கான

| நுகர்வுக்கான மற்றும் உதிரி உள்ளீட்டு பொருட்கள் | உண்மையான கிரயத்தில் FIFO அடிப்படையில் |
|---|---|
| வளரும் பயிர்கள் - நாற்றுக்கள் | நேர் மூலப்பொருள், நேர் ஊழியம் மற்றும் நேரடியாக ஒதுக்கீடு செய்யப்படத்தக்க மேந்தலைகளின் கிரயம் ஆகியவற்றில் |
| அறுவடைசெய்யப்பட்ட பயிர்கள் | உயிரியல் சொத்துக்களினால் இருந்த அறுவடை செய்யப்பட்ட விவசாய உற்பத்திகள் சீர்மதிப்பில் இருந்து அறுவடை செய்யப்பட்ட இடத்திலேயே விற்பனை செய்வதற்கான செலவுகள் கழிக்கப்பட்ட பெறுமதியில் அளவீடு செய்யப்படும்.<br><br>பூரணமாக அல்லது பகுதியாக நிறைவு செய்யப்பட்ட விவசாய உற்பத்திகள் அவற்றுக்கான நிலைமாற்றல் கிரயத்தினை சீர்மதிப்புடன் சேர்த்த பெறுமதியில் அளவீடு செய்யப்படும். |
| கால்நடைகள் | பால்தரும் கால்நடைகள் அவற்றின் சீர்மதிப்பிலிருந்து விற்பனைக்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பெறுமதியில் அளவீடு செய்யப்படும். கால்நடைகள் அவற்றின் சீர்மதிப்பானது தேசிய கால்நடை அபிவிருத்தி சபையினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்திற்கு அமைய தீர்மானிக்கப்படும். |

### 3.1.5 நிதிச் சொத்துக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 (LKAS 39) இன் நோக்கெல்லையின் கீழான நிதிச் சொத்துக்கள் இலாப நட்டங்களின் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள், கடன்கள் மற்றும் வருமதிகள், முதிர்வு வரை வைத்தருக்கப்படும் முதலீடுகள் அல்லது விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள் என வகைப்படுத்தப்படும்.

நிறுவனத்தின் நிதிச்சொத்துக்கள் காசு, குறுங்கால வைப்புக்கள் மற்றும் முதலீடுகள், வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகள் என்பவற்றை உள்ளடங்கும்.

### 3.1.5.1 இலாப நட்டங்களின் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள்

இலாப நட்டங்களின் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்களானவை விற்பனை நோக்கத்துக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் ஆரம்ப ஏற்பிசைவில் இலாப நட்டங்களின் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் ஆகியவற்றை உள்ளடக்கும். நிதிச்சொத்துக்கள் மிகக் கிட்டிய காலத்திற்குள் விற்கும் அல்லது மீள்கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருப்பின், அத்தகைய நிதிச் சொத்துக்கள் விற்பனை நோக்கத்துக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள் ஆக வகைப்படுத்தப்படும்.

இலாப நட்டங்களின் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள் நிதிநிலைமைக் கூற்றில் அவற்றின் சீர்மதிப்புடன், சீர்மதிப்பில் ஏற்படும் மாற்றங்கள் நிதி வருமானம் அல்லது நிதிச் செலவினங்கள் என முற்றடக்க வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட மாற்றங்களுடன் கொண்டு செல்லப்படும்.

நிறுவனம் எந்தவொரு நிதிச் சொத்தையும் அதன் ஆரம்ப ஏற்பிசைவில் இலாப நட்டங்களின் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள் என ஒதுக்கி வைத்திருக்கவில்லை.

### 3.1.5.2 கடன்கள் மற்றும் வருமதிகள்

கடன்கள் மற்றும் வருமதிகள் என்பது ஒரு உத்வேகமான சந்தையில் பட்டியல் படுத்தப்படாத, நிலையான அல்லது நிர்ணயிக்கப்படத்தக்க கொடுப்பனவுகளைக் கொண்ட பெறுதியல்லா நிதிச் சொத்துக்கள் ஆகும். இவை ஆரம்பத்தில் சீர்மதிப்புடன் அவற்றின் கொள்வனவு அல்லது வழங்கலுடன் நேரடியாகத் தொடர்புபட்ட கொடுக்கல்வாங்கல் கிரயங்கள் சேர்த்த பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளதுடன், பின்னைய காலங்களுக்கு பயனுறுதியுள்ள வட்டிவீதத்தைப் (EIR) பயன்படுத்தி காலத்தேய்மானம் செய்யப்பட்ட பெறுமதியில் கொண்டு செல்லப்படுகின்றன.

காலத்தேய்மானம் செய்யப்பட்ட பெறுமதியானது கொள்வனவின் போதான கழிவு அல்லது வட்டம் மற்றும் பயனுள்ள வட்டிவீதத்தின் ஒரு அவசியமான பகுதியாகக் காணப்படக்கூடிய கட்டணம் அல்லது கிரயங்களை கருத்தில் கொண்டு கணிக்கப்படும்.

பயனுள்ள வட்டிவீத காலத்தேய்மானமானது முற்றடக்க வருமானத்தின் நிதி வருமானங்களில் உள்ளடக்கப்படும். காலத்தேய்மானத்தில் இருந்து உருவாகும் நட்டமானது முற்றடக்க வருமானக் கூற்றில் நிதிச் செலவினங்களாக ஏற்பிசைவு செய்யப்படும்.

கடன்கள் மற்றும் வருமதிகளானவை வியாபார வருமதிகள், தொடர்புபட்ட தரப்பினரிடம் இருந்தான வருமதித் தொகைகள், வைப்புக்கள், முற்பணங்கள் மற்றும் ஏனைய வருமதிகள் மற்றும் காசு, காசுக்கு சமமானவற்றை உள்ளடக்கும்.

**வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்**

வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் ஆரம்பத்தில் சீர்மதிப்பில் அளவிடப்படுவதுடன், ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர், பின்வருவன தவிர்ந்த ஏனைய வருமதிகளுக்கு காலத்தேய்மானம் செய்யப்பட்ட பெறுமதியில் இருந்து சேத இழப்புக்கள் ஏதேனும் இருப்பின் அவற்றுக்கான ஏற்பாடுகளைக் கழித்த பின்னரான பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படும்.

- நிலையான மீள்செலுத்தல் நிபந்தனைகளின்றி தொடர்புபட்ட தரப்பினருக்கு வழங்கப்பட்ட வட்டியில்லாக் கடன்கள் அல்லது அவற்றின் கழிவிடல் விளைவானது பொருண்மையற்றதாக இருப்பின், அவை கிரயத்தில் இருந்து அறவிட முடியாக் கடன்களுக்கான ஒதுக்கங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றைக் கழித்த பெறுமதியில் அளவிடப்படும்.

- குறிப்பிடப்பட் வட்டிவீதம் ஒன்று காணப்படாத குறுங்கால வருமதிகள் அவற்றின் கழிவிடல் விளைவானது பொருண்மையற்றதாக இருப்பின், அவை அவற்றினி அசல் பட்டியல் பெறுமதியில் இருந்து அறவிட முடியாக் கடன்களுக்கான ஒதுக்கங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றைக் கழித்த பெறுமதியில் அளவிடப்படும்.

**காசும் காசுக்கு சமானனவையும்**

காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கங்களுக்காக, கையிருப்பிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள காசு, நிலையான மற்றும் சேமிப்பு வைப்பு என்பன காசு மற்றும் அதற்குச் சமானனவை என்பதில் உள்ளடங்கும்.

### 3.1.5.3 முதிர்வுவரை வைத்திருக்கப்படும் முதலீடுகள்

நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்வினைக் கொண்ட பெறுதியல்லாத நிதிச் சொத்துக்களை முதிர்வடையும் வரை வைத்திருப்பதற்கான நேரான விருப்பம் மற்றும் இயலுமையயை நிறுவனம் கொண்டிருக்கும் போது முதிர்வுவரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் என வகைப்படுத்தப்படும். ஆரம்ப அளவீட்டுக்குப் பிறகு, முதிர்வுவரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் பயனுறுதி வாய்ந்த வட்டிவீதத்தைப் பயன்படுத்திக் காலத்தேய்விடப்பட்ட கிரயத்தில் சேத இழப்புகக்ள் கழிக்கப்பட்ட பெறுமதியில் அளவிடப்படும். பயனுறுதி வாய்ந்த வட்டிவீத காலத்தேய்மானமானது நிதிக்கூற்றுக்களில் நிதி வருமானமாக உள்ளடக்கப்படும். காலத் தேய்மானத்தின் மூலம் ஏற்படும் நட்டங்கள் முற்றடக்க வருமானக் கூற்றில் நிதிச் செலவினங்களாக ஏற்பிசைவு செய்யப்படும்.

2016 ஆம் ஆண்டில் நிறுவனம் கொண்டுள்ளமுதிர்வு வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் ரூ. 40,868,261 (2015 ரூ. 152,646,142) குறுங்கால முதலீட்டின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.

### 3.1.5.4 விற்பனைக்குத் தயாராக வைத்திருக்கப்படும் முதலீடுகள்

விற்பனைக்குத் தயாராக வைத்திருக்கப்படும் முதலீடுகள்

விற்பனைக்குத் தயாராக வைத்திருக்கப்படும் முதலீடுகள் என்பது விற்பனைக்கான நிதிச்சொத்துகளாக ஒதுக்கப்பட்ட, அல்லது மேலே கூறப்பட்ட எந்தவொரு நிதிச் சொத்து வகையின் கீழும் வகைப்படுத்தப்படாத நிதிச் சொத்துக்கள் ஆகும். ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர், அவை சீர்மதிப்பில் அளவிடப்படுவதுடன், சேத இழப்பு நட்டங்கள் தவிர்ந்த மற்றைய சீர்மதிப்பு மாற்றங்கள் முற்றடக்க வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன், உரிமையாண்மையில் சீர்மதிப்பு ஒதுக்கத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. விற்பனைக்குத் தயாராக வைத்திருக்கப்படும் முதலீடுகள் மூலம் கிடைக்கும் வட்டி வருமானம் பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்டு இலாபநட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும். முதலீடுகள் ஏற்பிசைவு நீக்கப்படும்போது, உரிமையாண்மையில் திரட்டப்பட்ட நயம் அல்லது நட்டமானது இலாப நட்டத்திற்கு மீள வகைப்படுத்தப்படும்.

2016 ஆம் ஆண்டில் நிறுவனம் விற்பனைக்குத் தயாராக வைத்திருக்கப்படும் முதலீடுகள் எவற்றையும் கொண்டிருக்கவில்லை (2015 - இல்லை).

### 3.1.5.5 நிதிச் சொத்துக்களின் சேத இழப்பு

நிறுவனமானது ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் ஏதேனும் நிதிச் சொத்து ஒன்று சேத இழப்புக்கு உள்ளாகி இருப்பதற்கான கணிய ரீதியான சான்றுகள் உள்ளனவா என்பதை மதிப்பிட்டு, அவ்வாறான நிகழ்வு ஒன்று இடம்பெற்றிருப்பின், சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமதி மற்றும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுர் பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதி ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டை இழப்பாக அளவீடு செய்யும்.

## 3.2 பரிப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறைப் பரிப்புக்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ள பரிப்புக்கள் கோரும்போதோ அல்லது நிதிநிலைமைக் கூற்றுத் திகதியில் இருந்து ஒரு வருட காலப்பகுதியினுள்ளோ கொடுத்துத் தீர்க்க வேண்டியதான பரிப்புக்கள் ஆகும். நடைமுறைப் பரிப்புக்கள் என்பது நிதிநிலைமைக் கூற்றுத் திகதியில் இருந்து ஒரு வருட காலப்பகுதிக்குப் பின்னர் கொடுத்துத் தீர்க்க வேண்டியதான பரிப்புக்கள் ஆகும். இந் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அறியப்பட்ட அனைத்துப் பரிப்புக்களும் கணக்கிடப்பட்டுள்ளன. நிறுவனம் கடந்தகால நிகழ்வு ஒன்றின் விளைவாக, எதிர்காலத்தில் அதனைத் தீர்ப்பதற்காக பொருளாதாரப் பயன்களின் வெளிப்பாய்ச்சல்களை ஏற்படுத்தத்தக்க சட்டரீதியான அல்லது கருத்துமிக்க கடப்பாடு ஒன்றைக் கொண்டிருக்கும் போது பரிப்புக்கள் மற்றும் எற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படும்.

### 3.2.1. நிதிப் பரிப்புக்கள்

**ஆரம்ப ஏற்பிசைவு மற்றும் அளவிடல்**

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 (LKAS 39) இன் நோக்கெல்லையின் கீழான நிதிப் பரிப்புக்கள் இலாபநட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் நிதிப் பரிப்புக்கள் மற்றும் கடன் மற்றும் சென்மதிகள் எனப் பொருத்தமான அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. நிறுவனம் தனது நிதிப் பரிப்புகளின் வகைப்படுத்தல்களை ஆரம்ப எற்பிசைவின் போதே நிா்ணயித்துக் கொள்ளும். அனைத்த நிதிப் பரிப்புக்களும் ஆரம்ப ஏற்பிசைவில் சீர்மதிப்பில் அளவிடப்படுவதுடன், கடன்கள் மற்றும் கடன்படுகைகள் காலத்தேய்மானம் செய்யப்பட் பெறுமதியில் கொண்டு செல்லப்படும். இது நேரடியாக ஒதுக்கீடு செய்யத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயங்களை உள்ளடங்கும்.

நிறுவனத்தின் நிதிப்பரிப்புக்களில் வியாபார மற்றும் ஏனைய சென்மதிகளும் உள்ளடங்கும்

### 3.2.1.1 இலாபநட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் நிதிப் பரிப்புக்கள்

இலாப நட்டங்களின் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் நிதிப் பரிப்புக்களானவை விற்பனை நோக்கத்துக்காக வைத்திருக்கப்படும் நிதிப் பரிப்புக்கள் மற்றும் ஆரம்ப ஏற்பிசைவில் இலாப நட்டங்களின் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்பட்ட நிதிப் பரிப்புக்கள் என ஒதுக்கப்பட்ட நிதிப் பரிப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்கும். நிதிப் பரிப்புக்கள் மிகக் கிட்டிய காலத்திற்குள் விற்கும் நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருப்பின், அத்தகைய நிதப் பரிப்புக்கள் விற்பனை நோக்கத்துக்காக வைத்திருக்கப்படும் நிதிப் பரிப்புக்களாக வகைப்படுத்தப்படும்.

விற்பனை நோக்கத்துக்காக வைத்திருக்கப்படும் நிதிப் பரிப்புக்களினால் ஏற்படும் நயங்கள் அல்லது நட்டங்கள் முற்றடக்க வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

நிறுவனம் எந்தவொரு நிதிப் பரிப்பையும் அதன் ஆரம்ப ஏற்பிசைவில் இலாப நட்டங்களின் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் நிதிப் பரிப்புக்கள் என ஒதுக்கி வைத்திருக்கவில்லை.

### 3.2.1.1. கடன்களும் இரவல்களும்

ஆரம்ப ஏற்பிசைவின் பின், வட்டி செலுத்தப்பட வேண்டிய கடன்கள் மற்றும் கடன்படுகைகள் ஆகியன பின்னைய காலங்களில் பயனுள்ள வட்டிவீதத்தின் அடிப்படையிலான காலத்தேய்விடப்பட்ட பெறுமதியில் கொண்டு செல்லப்படும். பரிப்புக்கள் ஏற்பிசைவு நீக்கப்படும் போது, பயனுறுதி வாய்ந்த வட்டிவீத முறையின் ஊடாக நயங்கள் அல்லது நட்டங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்படும்.

ஏனைய நிதிப் பரிப்புக்கள் வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் மற்றும் சென்மதியாகவுள்ள வருமான வரிகள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

### 3.2.2. நிதி இடர் முகாமைத்துவ நோக்கங்கள் மற்றும் கொள்கைகள்

வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் மற்றும் சென்மதி வருமான வரி ஆகியவையே நிறுவனத்தின் முக்கிய நிதிப் பரிப்புக்களாகும். இந் நிதிப் பரிப்புக்களின் முக்கிய நோக்கம் நிறுவனத்தின் செயற்பாட்டுக்கான நிதியிடல் ஆகும். நிறுவனமானது அரச வணின முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள், வியாபார மற்றும் வருமதிகள் மற்றும் வியாபார நேரடியாக செயற்பாட்டின் மூலம் கிடைக்கும் காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

எனவே நிறுவனம் நிதிச் சாதனங்களை பயன்படுத்தும் போது கடன் இடர்கள், திரவத்தன்மை இடர்கள், நாணயமாற்று இடர்கள் மற்றும் வட்டி வீத இடர்கள் ஆகியவற்றுக்கு முகங்கொடுக்கும்.

இக்குறிப்பு நிறுவனம் முகங்கொடுக்கும் இவ்வாறான இடர்கள் மற்றும் அவற்றை மதிப்பிட்டு முகாமை செய்வதற்கான நிறுவனத்தின் நோக்கங்களினாலும் கொள்கைகளையும் விளக்குகின்றன.

### 3.2.2.1. கடன் இடர்

கடன் கொடுக்கப்பட்டுள்ள வாடிக்கையாளரொருவர் அல்லது தொடர்புடைய ஒரு பிரிவினர் தமது ஒப்பந்தத்தை கட்டுறுப்புக்களை கடைப்பிடிக்கத் தவறும் போது நிறுவனத்திற்குக் கிடைக்க வேண்டியவை கிடைக்காமல் செல்வதால் ஏற்படும் நிதி நட்டமாவதுடன் முக்கியமாக இது நிறுவனத்தின் வாடிக்கையாளர்களிடம் இருந்தான வருமதி காரணமாக ஏற்படலாம்.

### 3.2.2.2. திரவத்தன்மை இடர்

திரவத்தன்மை இடர் என்பது நிறுவனம் காசு அல்லது மற்றொரு நிதிச் சொத்து மூலம் தீர்க்கப்பட வேண்டிய தனது நிதிப் பரிப்புகளுடன் தொடர்புடைய கடமைகளை சந்திப்பதில் சிரமத்தை எதிர்கொள்ளும் இடர் ஆகும்.

திரவத்தன்மையை நிர்வகிப்பதற்கான நிறுவனத்தின் அணுகுமுறையானது, இயல்பான மற்றும் கட்டாய நிலைமைகளின் கீழ், ஏற்றுக்கொள்ள முடியாத இழப்புக்கள் அல்லது நிறுவனத்தின் புகழை சேதப்படுத்தும் இடரின்றி, எப்போதுமே அதன் பரிப்புகளைத் தீர்க்க போதுமான திரவத்தன்மையைக் கொண்டு இருப்பதை உறுதி செய்வதாகும்.

**3.2.3. ஊழியர் நலன்கள்**

**(அ) திட்டவட்டமான பங்களிப்பு திட்டங்கள் - சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை நிதி**

ஒரு திட்டவட்டமான பங்களிப்பு திட்டம் என்பது நிறுவனம் ஒரு குறிப்பிட்ட நிலையான பங்களிப்பை தனியானதொரு உரிமத்துக்கு செலுத்தி, மேலதிக தொகைகளை செலுத்துவதற்கான சட்டபூர்வமான அல்லது ஆக்கபூர்வமான கடமைகளைக் கொண்டிராத, வேலைவாய்ப்புக் காலத்துக்குப் பின்னான ஒரு பயன் திட்டமாகும், அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய சேமலாப மற்றும் நம்பிக்கை நிதியத்துக்கான பங்களிப்புகளுக்கான கடப்பாடுகளானவை, இலாப நட்டங்களில் ஒரு செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

நிறுவனம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர்களின் திரண்ட சம்பளத்தில் 12% இனையும்

ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ஊழியர்களின் திரண்ட சம்பளத்தில் 3% இனையும் பங்களிப்பு செய்கிறது.

**(ஆ) திட்டவட்டமான பயன் திட்டங்கள்**

திட்டவட்டமான பயன் திட்டம் என்பது திட்டவட்டமான பங்களிப்பு திட்டம் தவிர்ந்த ஒரு வேலைவாய்ப்புக் காலத்தின் பின்னான பயன் திட்டமாகும். திட்டவட்டமான பயன் திட்டங்களின் கிரயம், புள்ளிவிபர மதிப்பீடுகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகிறது. புள்ளிவிபர மதிப்பீடுகளானவை கழிவிடல் வீதம், எதிர்கால சம்பள அதிகரிப்புக்கள் மற்றும் ஊழியர் புரள்வு ஆகியன பற்றிய எடுகோள்களுடன் தொடர்புபடுகின்றது. இத்தகைய கடப்பாடுகளின் நீண்டகாலத்தன்மை காரணமாக, இத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டவை. மதிப்பீடுகளில் பயன்படுத்தப்படும் முக்கிய அனுமானங்களின் விவரங்கள் குறிப்பு 16 இல் உள்ளன.

இக் கடப்பாட்டின் பரிப்பானது இலங்கை வங்கியுடன் நிலையான வைப்புக்களில் வெளிவாரியாக நிதியிடப்பட்டுள்ளது.

## 3.3. பிற்போடப்பட்ட வருமானங்கள்

**கொடைகள் மற்றும் மானியங்கள்**

கொடைகள் கிடைக்கப்பெறும் என்பதுடன், அனைத்து இணைக்கப்பட்ட நிபந்தனைகளும் இணங்கப்படும் என்பதற்கான நியாயமான உறுதிப்பாடு காணப்படும் போது அரச கொடைகள் ஏற்பிசைவு செய்யப்படும். கொடை ஒரு செலவினத்துடன் தொடர்புபடும் போது, அது கொடையினை அது ஈடு செய்ய எதிர்பார்க்கப்படும் செலவினங்களுக்கு ஒரு முறையான அடிப்படையில் இணைக்கப்படுவதற்கு அவசியமான முறையில் அக் காலப்பகுதியிலேயே அது வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படுகிறது. கொடை ஒரு சொத்துடன் தொடர்புபடும் போது, அது ஒரு பிற்போடப்பட்ட வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட்டு, தொடர்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்தரு ஆயுட் காலத்தில் சமமான அளவில் தொகைகளில் வருமானமாக அனுமதிக்கப்படும்.

ஆதனம், பொறி, உபகரணங்கள் தொடர்புபட்ட கொடைகள் ஆரம்பத்தில் பிற்போடப்பட்டு, பயன்தரு ஆயுட் காலத்தில் ஒரு சீரான முறையில் பின்வருமாறு வருமானமாக அனுமதிக்கப்படுகிறது:

சொத்துக்கள் அவற்றின் பயன்தரு ஆயுள் அல்லது மீதமுள்ள குத்தகைக் காலங்கள் ஆகியவற்றில் குறைந்ததில் காலத் தேய்மானம் செய்யப்படுகின்றன.

| | |
|---|---|
| கட்டடங்கள் | 10 வருடங்கள் |
| நீர் வழங்கல் | 20 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 05 வருடங்கள் |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 10 வருடங்கள் |
| உபகரணங்கள் | 08 வருடங்கள் |

## 3.4 வருமானங்கள் மற்றும் செலவினங்கள்

வருமானக் கூற்றின் முன்னிலைப்படுத்தல் நோக்கத்திற்காக, நிறுவனத்தின் செயற்பாடுகளின் மூலகங்கள் தொடர்பாக நியாயான பிரதிநிதித்துவப்படுத்தலைக் காட்டும் செலவின முறைத் தொழின்முறை பயன்படுத்தப்படுகின்றது.

**3.4.1 வருமானம்**

பணக் கொடுப்பனவு எப்பொழுது பெறப்படுகின்றது என்பதைக் கருத்தில் கொள்ளாது, நிறுவனத்துக்கு பொருளாதாரப் பயன்பாடுகள் கிடைக்கத்தக்கவுள்ள நிகழ்தகவுக்கு, அவை நம்பகமான முறையில் அளவிடப்படக்கூடியதாக உள்ள போது, வருமானங்கள் ஏற்பிசைவு செய்யப்படும். வருமானமானது, ஒப்பந்த நியதிப்படியான கொடுப்பனவு நிபந்தனைகளைக் கருத்தில் கொண்டு, பெற்றுக் கொண்ட அல்லது வருமதியாகவுள்ள கைமானத்தின் வரி நீங்கலான சீர்மதிப்பில் அளவிடப்படும்.

அ) பொருட்களின் விற்பனை மூலம் பெறப்படும் வருமானமானது, பொருட்களின் உரிமைக்கான முக்கிய இடர்கள் மற்றும் வெகுமதிகள் வாடிக்கையாளருக்கு மாற்றப்பட்டதும், வழக்கமாக விநியோகத்தின் போது ஏற்பிசைவு செய்யப்படும். விற்பனைப் பட்டியல் பெறுமதியில் தரகுக்கட்டணங்கள், விற்பனைச் செலவினங்கள் மற்றும்

வருமானங்கள் தொடர்பான ஏனைய வரிகள் ஆகியவற்றைக் கழித்த பெறுமதியில் வருமானம் பதிவு செய்யப்படும்.

ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் அகற்றல் மூலமான நயங்கள் அல்லது நட்டங்களானது தேறிய விற்பனை வருமானங்களை அவற்றின் கொண்ட செல்ல்ல பெறுமதியுடன் ஒப்பிடுவதன் மூலம் தீர்மானிக்கப்பட்டு, வருமானக் கூற்றில் “ஏனைய தொழிற்பாட்டு வருமானங்கள்“ என ஏற்பிசைவு செய்யப்படும்.

இ) வட்டி வருமானமானது LKAS 39 நியமத்தில் குறிப்பிட்டவாறு விளைவுள்ள வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

ஈ) ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**3.4.1 செலவுகள்**

வியாபாரங்களை நடாத்திச் செல்லும்போது ஏற்படும் எல்லா செலவீனங்களும் ஆதனம், பொறி, உபகரணங்களை வினைத்திறனபகப் பராமரிப்பதற்கு ஏற்படும் அனைத்து செலவினங்களும் வருடத்தின் இலாப (நட்ட) கணிப்பீட்டின் போது வருமானத்திற்கு எதிராக அறவிடப்படும்.

## 3.5 வருமான வரி

வருமான வரியானது நடைமுறை வரி மற்றும் பிற்போடப்பட்ட வரி ஆகியவற்றைக் கொண்டது. உரிமையாண்மையில் நேரடியாக ஏற்பிசைவு செய்யப்படும் உருப்படி ஒன்று உரிமையாண்மையில் ஏற்பிசைவு செய்யப்படும் போது அதனுடன் தொடர்புடைய அளவு தவிர்ந்த அளவுக்கு வரிச் செலவுகள் இலாபநட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**அ) நடைமுறை வரி**

நடைமுறை வரி என்பது நடைமுறை வருடத்தின் வரி விதிக்கத்தகு வருமானத்தில், அறிக்கையிடல் திகதியில் சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதத்தினைப் பயன்படுத்தி, முன்னயை ஆண்டுகளுக்காக வரிகள் தொடர்பான சீராக்கத்தையும் மேற்கொண்டு நடைமுறை ஆண்டில் செலுத்தத் தக்கதாக உள்ள வரியின் அளவு ஆகும்.

வருமான வரிக்கான ஏற்பாடானது நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட வருமான மற்றும் செலவின் மூலகங்களின் அடிப்படையில் அமைந்ததாகவும், உள்நாட்டு இறைவரித் திணைக்களச் சட்டத்தின் மற்றும் அதன் திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கணிக்கப்பட்டதாகவும் காணப்படும்.

**ஆ) பிற்போடப்பட்ட வரி**

பிற்போடப்பட்ட வரியானது சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் தொடர்பான நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்கான கொண்டு செல்லல் பெறுமதி மற்றும் வரி நோக்கங்களுக்காக கொண்டு செல்ல் பெறுமதி ஆகுியவற்றுக்கு இடையிலான தற்காலிக வேறுபாடுகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு, ஐந்தொகை முறையைப் பயன்படுத்தி ஏற்பிசைவு செய்யப்படும். பின்வரும் தற்காலிக வேறுபாடுகளுக்காகப் பிற்போடப்பட்ட வரி ஏற்பிசைவு செய்யப்படுவதில்லை: கணக்கியல் அல்லது வரியியல் இலாபத்தின் மீது எதுவித தாக்கத்தையும் கொண்டிருக்காத வணிக இணைப்பு அல்லாத கொடுக்கல் வாங்கல் ஒன்றிலான சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் ஆரம்ப ஏற்பிசைவு மற்றும் கட்புலனாகக்கூடிய எதிர்காலத்தில் மீளப்பெறக்கூடியதல்லாத சாத்தியமான அளவுக்கு சேய்க் கம்பனிகளின் மீதான முதலீடுகள். மேலும், நன்மதிப்பின் ஆரம்ப ஏற்பிசைவில் ஏற்படும் வரிவிதிக்கத்தகு தற்காலிக மாற்றங்களுக்கு பிற்போடப்பட்ட வரி ஏற்பிசைவு செய்யப்படுவதில்லை. பிற்போடப்பட்ட வரியானது தற்காலிக வேறுபாடுகள் மீள்பெறுகையின் போது பிரயோகிக்கத்தக்கதான, அறிக்கையிடல் திகதியில் சட்டமாக்கப்பட்டுள்ள அல்லது கணிசமான அளவில் சட்டமாகவுள்ள வரி வீதத்தின் அடிப்படையிலேயே கணிக்கப்படும். பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள், நடைமுறை வரிச் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை எதிர்த் தீர்த்தல் செய்வதற்கான சட்டவலுத் தன்மையுள்ள உரிமை ஒன்று காணப்படுவதுடன் அவை அதே வகையான வரிவிதிப்பு அதிகாரசபையின் வரியாகவும் அதே காலத்துக்கானதாகவும் காணப்படுமிடத்து, எதிர்த் தீர்க்கப்படலாம்.

தற்காலிக வேறுபாட்டைப் பயன்படுத்தத்தக்க எதிர்கால வரிவிதிக்கத்தகு இலாபங்கள் காணப்படத்தக்க நிகழ்தகவின் அளவுக்கே பிற்போடப்பட்ட வரிச் சொத்து ஏற்பிசைவு செய்யப்படும். பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன், தொடர்புபட்ட வரிப் பயன் கிடைக்கத்தகாத நிகழ்தகவின் அளவினால் குறைக்கப்படும்.

சேய்க் கம்பனிகள் மற்றும் துணைக் கம்பனிகளின் பங்கிலாப வருமானத்தில் நிறுத்தி வைக்கப்படும் வரியானது ஒன்றித்த வருமானக் கூற்றில் செவலினமாக ஏற்பிசைவு செய்யப்படுவதுடன், தொடர்புபட்ட பங்கிலாபங்களை செலுத்துதற்கான பரிப்பானது ஏற்பிசைவு செய்யப்படும்.

## 3.6 துறைசார் அறிக்கையிடல்

நிறுவனத்தின் வெவ்வேறு வியாபாரத் துறைகள் தொடர்பான தகவல்கள் துறைசார் அறிக்கையில் உள்ளடங்குகின்றது. தோட்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள புவியியல் அமைப்புக்கள் பிரகாரம் வியாபாரத் துறைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளது. துறைசார் செயற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 19 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. பெருந்தோட்டய்களின் புவியியல்

ரீதியான அமைப்புக்கள் கீழ்க்காட்டப்பட்டுள்ளன.

| குழு 1 பெருந்தோட்டங்கள் | குழு 2 பெருந்தோட்டங்கள் |
|---|---|
| சிலாப பிராந்தியம் | பிங்கிரிய பிராந்தியம் |
| பளுகஸ்வெவ பெருந்தோட்டம் | திவுலபிட்டிய பிராந்தியம் |
| தம்பபன்னி பிராந்தியம் | மாதம்பை பிராந்தியம் |

## 3.7 வெளியிடப்பட்டு ஆனால் இன்னமும் அமுலுக்கு வராத நியமங்கள்

வெளியிடப்பட்டு, ஆனால் அறிக்கையிடும் திகதி வரை விளைவுக்கு வராத நியமங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இந்நியமங்கள் அமுலுக்கு வரும் போது நிறுவனம் அவற்றை பின்பற்றும். இந்த நிதிக் கூற்றுக்களின் பிரசுரத் திகதியில் அவை தொடர்பானதொரு விபரமான நிலுவை ஆய்வு சாத்தியமானதாக இருக்கவில்லை.

**(i) SLFRS 9 – நிதி சாதனங்கள்**

SLFRS 9 நியமமானது தற்போது அமுலிலுள்ள LKAS 39 நிதிக் கருவிகள்: ஏற்பிசைவு மற்றும் அளவீடு நியமத்தைப பிரதியீடு செய்கிறது. SLFRS 39 நியமமானது நிதிச் சாதனங்களின் வகைப்படுத்தல் மற்றும் ஏற்பிசைவு செய்தல் தொடர்பான மீளாய்வு செய்யப்பட்ட வழிகாட்டல்கள், நிதிச் சாதனங்களின் சேத இழப்பைக் கணிப்பதற்கான புதிய எதிர்பார்க்கப்பட்ட செலவு இழப்பு முறை மற்றும் புதிய தளம்பல் காப்புக் கணக்கீட்டத் தேவைப்பாடுகளை உள்ளடக்குகிறது. அத்தோடு LKAS 39 நியமத்தின் நிதிச் சாதனங்களை ஏற்பிசைவு செய்தல் மற்றும் ஏற்பிசைவு நீக்குவதற்கான வழிகாட்டல்களை முன்கொண்டு செல்கிறது. SLFRS 9 நியமமானது முற்காலப் பிரயோகம் அனுமதிக்கப்பட்டு, 2018 ஜனவரி 01 அன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கும் அறிக்கையிடல் காலங்களுக்கு விளைவுள்ளதாக இருக்கும்.

## 3.8 வெளியிடப்பட்டு ஆனால் இன்னமும் அமுலுக்கு வராத நியமங்கள் (தொடர்ச்சி...)

**(ii) SLFRS 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானங்கள்**

SLFRS 15 நியமமானது, வருமானம் ஏற்பிசைவு செய்யப்பட வேண்டுமா, எவ்வளவு மற்றும் எப்போது என்பன பற்றித் தீர்மானிப்பதற்கான விரிவான சட்டகம் ஒன்றை வழங்குகிறது. அது LKAS 18 வருமானம், LKAS 11 நிர்மாண ஒப்பந்தங்கள் மற்றும் IFRIC 13 வாடிக்கையாளர் விசுவாச நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கலான தற்போதுள்ள வருமான ஏற்பிசைவு வழிகாட்டல்களைப் பிரதியீடு செய்கிறது. இந்நியமம் 2018 ஜனவரி 01 அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கும் ஆண்டுக் காலப் பகுதிகளுக்கு விளைவுள்ளதாக இருக்கும்.

**(iii) LKAS 41** வேளாண்மை மற்றும் டுமுயுளு 16 ஆதனம், பொறி, உபகரணங்கள் நியமங்களுக்கான திருத்தங்கள்.

LKAS 41, கணக்கீட்டு நியமத்திற்கு பதிலாக LKAS 16 இன் உள்ளடங்களின் கீழ் ஆதனம், பொறி, உபகரணங்களின் கீழ் பெருந்தோட்டங்களை கொண்டு நடாத்துவது தொடர்பாக இம்மீளாய்வுடன் கூடியவைகள் உள்ளடங்கியுள்ளது. இந்நியமம் 2016.01.01 தினத்தில் அல்லது அத்தினத்திற்கு பின்னர் உபயோகிப்பபது அவசியமாக உள்ளது.

எவ்வாறாயினும் வகைப்படுத்தலும் அளவிடலும் தொடர்பான நிறுவனத்தின் தற்போதைய கணக்கீட்டு பின்பற்றல்களுக்கு இம் மீளாய்வுகளின் தாக்கங்கள் எதுவுமில்லை. நிறுவனத்தில் தற்போது விளைச்சல் தரும் மரங்களை வகைப்படுத்தல்கள் மற்றும் அளவிடல் LKAS 16 இன் படி மேற்கொண்டு செல்லப்படும்.

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**
31 டிசம்பர் 2016 முடிவடைந்த ஆண்டுக்கான

## 04. JEDB/SLSPC பெருந்தோட்டங்களின் வெற்றுக்காணிகளின் குத்தகை உரிமைகள்

அனைத்துப் பெருந்தோட்டங்களுக்குாக 53 வருட கால குத்தகைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இவ் அனைத்துக் குத்தகைகளும் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட தினமான 1992 ஜுன் 22 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் செயற்படுத்தப்படும். இவ்வனைத்து பெருந்தோட்டங்களுக்கும் உரித்தான காணி மீதான குத்தகையிலான உரிமையானது, இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் அவசிய விடய செயற்பாட்டுக் குழுவின் (UITF) இது தொடர்புபட்ட விதிமுறைகளுக்கு இணங்க, 1992 ஜுன் 22 அன்று நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட தினத்திலிருந்து உடனடியாகவே புத்தகங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக, 1995 மார்ச் 08 அன்று இடம்பெற்ற பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் இவ்வெற்றுக் காணிகளை, நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்கு முன்பாக திரு. டீ. ஆர் விக்ரமசிங்க வினால் மதிக்கப்பட்ட மதிப்பீடுகள் மீதிப்பீடு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

1992 ஜுன் 22 அன்று இச்சொத்துக்கள் ஐந்தொகைக்கு கொண்டு செல்லப்பட்ட பின் 53 வருடங்களுக்கு சமமான அடிப்படையில் பெறுமான இழப்பு செய்யப்படுவதுடன், இவ் அறிக்கையிடப்பட்ட திகதியிலான எஞ்சியுள்ள குத்தகைக் காலம் 29.5 வருடங்களாகும்

| | மொத்த கொண்டு செல்லும் பெறுமதி | |
|---|---|---|
| | 31.12.2016 இல் உள்ளவாறு ரூபா. | 31.12.2015 இல் உள்ளவாறு ரூபா. |
| வெற்றுக்காணிகளின் மீதான குத்தகை உரிமை | 142,502,287 | 142,502,287 |

| | பெறுமான இழப்பு | | |
|---|---|---|---|
| | 31.12.2016 இல் உள்ளவாறு ரூபா. | ஆண்டுக்கான பெறு. இழப்பு ரூபா. | 01.01.2016 இல் உள்ளவாறு ரூபா. |
| வெற்றுக்காணிகளின் மீதான குத்தகை உரிமை | 66,013,582 | 2,688,722 | 63,324,860 |

| | கொண்டு செல்லும் பெறுமதி | |
|---|---|---|
| | 31.12.2016 இல் உள்ளவாறு ரூபா. | 31.12.2015 இல் உள்ளவாறு ரூபா. |
| வெற்றுக்காணிகளின் மீதான குத்தகை உரிமை | 76,488,705 | 79,177,427 |

## 05. JEDB பெருந்தோட்டத்தின் குத்தகையில் பெற்ற அசையா சொத்துக்கள் (காணி மீதான குத்தகை உரிமை மற்றும் குத்தகையில் பெற்ற உயிரியல் ஆதனங்கள் தவிர)

பெருந்தோட்டங்களின் தனியார் மயமாக்கல் காலப்பகுதியில் காணப்பட்ட, இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் அவசிய விடய செயற்பாட்டுக் குழுவின் (UITF) விதிமுறைகளுக்கு இணங்க, இத்தோட்டங்களில் நிதிக்குத்தகையில் காணப்பட்ட அனைத்து அசையாச் சொத்துக்களும் 1992 ஆம் ஆண்டு ஜுன் 22 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரத்தக்கவாறு முன்விளைவுள்ள வகையில் நிறுவனத்தின் ஏடுகளில் பதியப்பட்டது. இந்த நோக்கத்திற்காக, பணிப்பாளர் சபை 1995 மார்ச் 8 ஆம் திகதி இடம்பெற்ற சபைக் கூட்டத்தில், நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட நாளின் அடுத்துவரும் தினத்தில் JEDB/SLSPC இன் ஏடுகளில் காணப்படும் புத்தகப் பெறுமதியிலேயே எடுக்கப்படுவதற்குத் தீர்மானம் மேற்கொண்டது. இச்சொத்துக்கள் 1992 ஜுன் 22 ஆம் திகதி ஐந்தொகைக்கு கொண்டுவரப்பட்டதுடன், 2016 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான அசையாத பெருந்தோட்டச் சொத்துக்களின் பெறுமான இழப்புக்கான ஏற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| மதிப்பீட்டில் | காணி மீதான அபிவிருத்தி ரூபா. | ஏனைய சொந்தமான சொத்துக்கள் ரூபா. | கட்டடங்கள் ரூபா. | இயந்திரங்கள் ரூபா. | நீர் வழங்கல் ரூபா. | 2016 ரூபா. | 2015 ரூபா. |
|---|---|---|---|---|---|---|---|
| மூலதனமாக்கப்பட்ட பெறுமதி | 841,193 | 1,002,944 | 25,356,498 | 530 | 4,026,236 | 31,227,401 | 31,227,401 |
| **பெறுமான இழப்பு** | | | | | | | |
| ஜனவரி 01 அன்று | 56,312 | 786,813 | 23,872,651 | 530 | 4,026,236 | 28,742,541 | 27,692,494 |
| ஆண்டுக்கான பெறுமான இழப்பு | 2,390 | 33,397 | 1,014,260 | - | - | 1,050,047 | 1,050,047 |
| டிசம்பர் 31 அன்று | 58,702 | 820,210 | 24,886,911 | 530 | 4,026,236 | 29,792,588 | 28,742,541 |
| கொண்டு செல்லும் பெறுமதி | **782,491** | **182,734** | **469,587** | - | - | **1,434,812** | **2,484,859** |

## 06. JEDB/SLSPC பெருந்தோட்டங்களின் குத்தகைக்குப் பெறப்பட்ட உயிரியல் சொத்துக்கள்

| மீள்மதிப்பீடு | 2016 ரூபா. | 2015 ரூபா. | 2014 ரூபா. |
|---|---|---|---|
| முதிர்வுற்ற பயிர்ச்செய்கை | 83,676,574 | 84,487,616 | 103,239,426 |
| அகற்றல்களின் சீராக்கங்கள் | (596,565) | (811,042) | (18,751,810) |
| | **83,080,009** | **83,676,574** | **84,487,616** |
| ஜனவரி 01 அன்று | 53,235,101 | 50,458,917 | 62,319,708 |
| ஆண்டுக்கான பெறுமான இழப்பு | 3,437,873 | 3,437,873 | 3,437,873 |
| அகற்றல்களின் சீராக்கங்கள் | (486,707) | (661,689) | (15,298,664) |
| டிசம்பர் 31 அன்று | **56,186,266** | **53,235,101** | **50,458,917** |
| கொண்டு செல்லும் பெறுமதி | **26,893,743** | **30,441,473** | **34,028,699** |

பெருந்தோட்டக் குத்தகைகளாக நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட போது காணப்பட்ட முதிர்வுறாத பயிர்கள் மீதான முதலீடுகள் (1992 ஜுன் 22 இல் உள்ளவாறாக மீள்மதிப்பிடப்பட்டு) முதிர்வுறாத பயிர்களாக காட்டப்பட்டுள்ளதுடன், அறிக்கையிடப்படும் தினத்தில் அவை அனைத்தும் முதிர்வுற்ற பயிர்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. மேலும், நிறுவனத்தினால் முதிர்வுற்ற மற்றும் முதிர்வுறாத பயிர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் தனித்தனியாக, குறிப்பு இலக்கம் 7.2 குத்தகை கொள்ளப்பட்ட ஆதனம் மீதான விருத்திகள் இல் (முதிர்வுற்ற/முதிர்வுறாத பயிர்கள்) காட்டப்பட்டுள்ளன. இம் முதிர்வுற்ற/முதிர்வுறாத பயிர்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமம் 41 “விவசாயம்” இன் கீழ் குத்தகையிலான உயிரியல் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## 07. உயிரியல் சொத்துக்கள் (குத்தகையிலான உயிரியல் சொத்துக்கள் தவிர)

| | | 2016 ரூபா. | 2015 ரூபா. |
|---|---|---|---|
| முதிர்வுறாத மாடுகள் (பசுக்கன்றுகள், இளம் பசுக்கள்) பாற்பண்ணை கால்நடைகள் | **07.1** | 20,997,000 | 9,506,500.00 |
| குத்தகை சொத்துக்களுக்கான விருத்தி (முதிர்வுற்ற/முதிர்வுறாத பயிர்ச்செய்கை) | **07.2** | 701,639,467 | 622,630,002 |
| | | **722,636,467** | **632,136,502** |

### 07.1 பாற்பண்ணை கால்நடைகள்

| | முதிர்வுறாத பசுக்கள் (கன்றுகள/ கன்னிப்பசுக்கள்) ரூபா. | முதிர்வுற்ற பசுக்கள் (பால் தரும்/ தராத) ரூபா. | 2016 ரூபா. | 2015 ரூபா. |
|---|---|---|---|---|
| ஜனவரி 01 அன்று உள்ளவாறாக | 385,500 | 9,121,000 | 9,506,500 | 7,834,500 |
| ஆண்டுக்கான சேர்ப்பனவுகள் | 98,000 | 342,000 | 440,000 | 144,000 |
| சீர்மதிப்பில் ஆண்டுக்கான நலன் / (இழப்பு) | 455,000 | 10,954,000 | 11,409,000 | 2,304,500 |
| பௌதீக மாற்றங்களினாலான பெறுமதி அதிகரிப்பு / குறைவு | 112,500 | 173,000 | 285,500 | (24,500) |
| இறப்பு/விற்பனை | (55,000) | (589,000) | (644,000) | (752,000) |
| டிசம்பர் 31 அன்று உள்ளவாறாக | **996,000** | **20,001,000** | **20,997,000** | **9,506,500** |

பாற்பண்ணையில் உள்ள கால்நடைகள் அவற்றின் சீர்மதிப்பில் இருந்து விற்பனைக்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பெறுமதியில் அளவிடப்படும். கால்நடைகளின் சீர்மதிப்பானது தேசிய கால்நடை அபிவிருத்தி சபையினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தின் படி நிர்ணயிக்கப்படும்.

### 07.2 குத்தகை சொத்துக்கள் மீதான அபிவிருத்தி (முதிர்வுற்ற/முதிர்வுறாத பயிர்கள்)

| | | முதிர்வுற்ற பயிர்ச்செய்கை | | | | |
|---|---|---|---|---|---|---|
| **கிரயம்** | முதிர்வுறாத பயிர்ச்செய்கை ரூபா. | தென்னை ரூபா. | மரமுந்திரிகை ரூபா. | ஏனையவை ரூபா. | 2016 ரூபா. | 2015 ரூபா. |
| வருட ஆரம்பத்தில் உள்ளவாறு: | 402,984,051 | 177,053,145 | 87,056,399 | 1,909,484 | 669,003,078 | 581,605,750 |
| சேர்ப்பனவுகள் | 86,348,127 | - | - | - | 86,348,127 | 87,397,326 |
| முதிர்வுறாதவைகளிலிருந்தான மாற்றல் | - | 13,360,151 | - | 3,883,375 | 17,243,526 | 942,388 |
| முதிர்வுற்றவைகளுக்கு மாற்றல் | (17,243,526) | - | - | - | (17,243,526) | (942,388) |
| பதிவழிப்பு செய்யப்பட்ட மீதி | - | - | - | - | - | - |
| வருட இறுதியில் உள்ளவாறு: | **472,088,652** | **190,413,296** | **87,056,399** | **5,792,859** | **755,351,206** | **669,003,077** |
| **பெறுமானத்தேய்வு** | | | | | | |
| வருட ஆரம்பத்தில் உள்ளவாறு: | | 23,076,690 | 23,055,848 | 240,539 | 46,373,076 | 39,261,172 |
| ஆண்டுக்கான தேய்மானம் | | 3,541,062 | 3,530,478 | 267,122 | 7,338,662 | 7,111,902 |
| வருட இறுதியில் உள்ளவாறு: | | **26,617,751** | **26,586,326** | **507,661** | **53,711,738** | **46,373,075** |
| **கொண்டு செல்லல் பெறுமதி** | **472,088,652** | **163,795,545** | **60,470,072** | **5,285,198** | **701,639,467** | **622,630,002** |

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**
31 டிசம்பர் 2016 முடிவடைந்த ஆண்டுக்கான

**குறிப்பு:**

இவை நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட திகதியிலிருந்துவரும் முதிர்வுறாத மற்றும் முதிர்வுற்ற பெருந்தோட்ட பயிர்கள் மீதான முதலீடுகள் ஆகும். பெருந்தோட்டக் குத்தகை அடிப்படையில் கையகப்படுத்தப்பட்ட சொத்துக்கள் (பெருந்தோட்டப் பயிர்கள் உட்பட) நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 4, 5 மற்றும் 6 இல் காட்டப்பட்டுள்ளன. மேலும் குத்தகை அடிப்படையில் கையகப்படுத்தப்பட்ட முதிர்வுறாத பயிர்ச்செய்கைகளின் மீதான முதலீடுகள் இக் குறிப்புக்களில் காட்டப்பட்டுள்ளன. அவ்வாறான பயிர்கள் முதிர்வுறும் போது, முதிர்வுற்ற நிலைமைக்கு கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்ட மேலதிக முதலீடு இக்குறிப்பின் பிரகாரம் முதிர்வுராதவற்றில் இருந்து முதிர்வுற்ற பிரிவிற்கு மாற்றப்படும். இதேபோன்றதோர் குறிப்பு 6 இன் பிரகாரம் JEDB/SLSPC இனால் பொறுப்பேற்கப்பட்ட, இதே பெருந்தோட்டம் மீதான குத்தகைக்கு முன்னரான முதலீட்டின் முதிர்வுறாதவைகளிலிருந்து முதிர்வுற்றவைகளுக்கான மாற்றம் குறிப்பு இலக்கம் 6 இன் கீழ் செய்யப்படும்.

இலங்கைக் கணக்கீட்டு நியமம் 41 இன் கீழான, உயிரியல் சொத்துக்களை அவற்றின் சீர்மதிப்பில் விற்பனைக்கான கிரயத்தைக் குறைத்த பெறுமதியில் ஏற்பிசைவு செய்வதற்கான தேவைப்பாடானது, 2012 மார்ச் 02 ஆம் திகதி இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட விதிமுறையினால் வலுவிழக்க செய்யப்பட்டுள்ளது. அதன்படியாக, நிறுவனம் குத்தகையிலான உயிரியல் சொத்துக்களை இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16 ஆதனம், பொறி, உபகரணங்கள் நியமத்தைப் பயன்படுத்தி அளவிடத் தெரிவு செய்துள்ளது.

பயிரிடுகை செலவுகளுக்கு நிதியீட்டம் செய்வதற்கு பிரத்தியேகமான கடன்கள் பெறப்படவில்லை. ஆகையால், ஆண்டுக் காலத்தில் முதிர்வுறாத பயிர்களின் கீழ் கடன்படுகைக் கிரயங்கள் மூலதனமாக்கல் செய்யப்படவில்லை. (2015/16 - Nil)

## 7.3 நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் - பலகை மர பயிர்ச்செய்கை

| | 2016 ரூபா. | | | 2015 ரூபா. | | |
|---|---|---|---|---|---|---|
| | முதிர்வுறாத | முதிர்வுற்ற | மொத்தம் | முதிர்வுறாத | முதிர்வுற்ற | மொத்தம் |
| ஜனவரி 01 அன்று உள்ளவாறான மீதி | 2,765,443 | 34,331,027 | 37,096,469 | 2,750,415 | 32,151,932 | 34,902,347 |
| அபிவிருத்தி ∴ முதலீடு மூலமான அதிகரிப்பு | 19,108 | - | 19,108 | 15,027 | - | 15,027 |
| சீர்மதிப்பில் விற்பனைக் கிரயம் கழித்த பெறுமதி மாற்றம் மூலமான இலாபம் (நட்டம்) | - | 5,154,465 | 5,154,465 | - | 24,534,520 | 24,534,520 |
| அறுவடை காரணமான குறைவு | - | (24,542) | (24,542) | - | (22,355,425) | (22,355,425) |
| **டிசம்பர் 31 அன்று உள்ளவாறான மீதி** | **2,784,551** | **39,460,950** | **42,245,501** | **2,765,443** | **34,331,027** | **37,096,469** |

